**தலைப்பு 246 – உள்நாட்டு இறைவரி திணைக்களம் - 2024**

## 1. நிதிக்கூற்றுகள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 246 – உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரசட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின நிதிக்கூற்றுகள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2025 மே 30 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடார்ந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2025 ஜுலை 04 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினாலான தாக்கத்தை தவிர, உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுகளினால், நிதி நிலைமை, நிதி செயலாற்றுகை மற்றும் காசுப் பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்படும் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையிற்கு இணங்கியதாக அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் உண்மையாகவும் நியாயமானதுமான நிலைமையினை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் மீது எனது அபிப்பிராயம் முளைப்பழியாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 உம் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆம் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆம் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின், பொது திறைசேரியின் மற்றும் பாராளுமன்றத்தின் தேவைப்பாட்டிற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

**1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

அரச நிதிப்பிரமாணம் 150 உம் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி 06/2024 இலக்கத்திற்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையினை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில உள்ளகக் கட்டுப்பாடுகளை தீர்மானிப்பது கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

**1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் / கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **இணங்காமை** | | |
| (i) | நிறுவன ரீதியற்ற வருமான வரியின் கீழான இலக்கம் 10.04.02.99 கொண்ட ஏனைய வருமான குறியீடு, வருமான குறியீடொன்றை போன்றே கட்டுப்பாட்டு கணக்கொன்றாகவும் செயற்படுகிறது. இந்த வருமான குறியீட்டின் கீழ் திறைசேரி தகவல்களின் பிரகாரம், மேற்குறித்த கட்டுப்பாட்டு கணக்கிற்கு ரூபா 80,452,757,986 தொகை செலவு வைக்கப்பட்டிருந்த போதும் திணைக்களத்தினால் வருமான வகைப்படுத்தலின் போது கட்டுப்பாட்டுக் கணக்கில் கணக்கீடு செய்துள்ள வருமானம் ரூபா 78,769,456,144 ஆக இனங்கண்டுள்ள காரணத்தால் ரூபா 1,683,301,842 ஆன இணக்கமின்மை அவதானிக்கப்பட்டது. | ஏனைய வருமான கட்டுப்பாட்டு கணக்கிற்கு திணைக்களத்திற்கு செலவு வைத்திருந்த வருமானம் மற்றும் வருமான வகைப்படுத்தலின் போது ஏனைய வருமான கட்டுப்பாட்டு கணக்கில் காணப்பட்ட வருமானத்திற்கிடையே வித்தியாசத்தை காண்பிப்பதற்கு, பல காரணங்கள் தாக்கம் செலுத்துவதாக அறிக்கையிடப்பட்டிருந்தது. | திறைசேரி தகவல்களின் பிரகாரம், திணைக்களத்தினால் வருமான கைப்படுத்தல் கட்டுப்பாட்டு கணக்கை சரியாக இணக்கம் செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | திணைக்கள பரீட்சை மீதி பிரகாரம் 10.04.02.99 கொண்ட ஏனைய வருமான குறியீட்டின் கீழ் மீதி ரூபா 80,660,781,547 ஆன போதும் மீளாய்வாண்டில் நிதிக்கூற்றுக்களில் ACA 1 இல் வருமான திரட்டலின் கீழ் 10.04.02.99 கொண்ட ஏனைய வருமான கட்டுப்பாட்டு கணக்கின் மீதி ரூபா 80,452,757,986 ஆனதில் ரூபா 208,023,561 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | வெட் வரி கட்டுப்பாட்டு கணக்கின் எஞ்சிய மீதியான ரூபா 1,891,325,403 ஏனைய வரி கட்டுப்பாட்டு கணக்கிற்கு மாற்றும் மாற்றுப் பத்திரம் பெறுமதி மற்றும் ஏனைய வரி கட்டுப்பாட்டு கணக்கின் வகைப்படுத்தாத மீதியான ரூபா 1,683,301,842 இற்கிடையே தேறிய பெறுமதி ரூபா 208,023,561 ஆகுமென. | திறைசேரி தகவல்களின் பிரகாரம, திணைக்களத்தினால் ஏனைய வருமான கட்டுப்பாட்டு கணக்கின் மீதியை கட்டுப்பாட்டு கணக்கை சரியாக இணக்கம் செய்ய வேண்டும். |
| (iii) | 2024 திசெம்பர் 31 திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிலுவை வருமானம் மீதான கூற்றின் பிரகாரம் RAMIS தொகுதியின் மூலம் உருவாகும் தேசத்தை கட்டியெழுப்பு வரி – சேவை மற்றும் உற்பத்தி உப வருமான குறியீட்டிலக்கம் இரண்டின் கீழ் 2024 சனவரி 01 திகதி ஆரம்ப மீதி மற்றும் 2023 திசெம்பர் 31 திகதி நிலுவை வருமானம் மீதான கூற்றில் இறுதி மீதிக்கிடையே ரூபா 19,046,065,097 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டதில் நிதிக்கூற்றுக்களில் நிலுவை வருமான மீதி சரியாக அறிக்கை இடப்படாததுடன் நிலுவை வரி அறிக்கைகளின் தவறுகள் காணப்படுவதாக கணக்காய்வின் போது மேலும் அவதானிக்கப்பட்டது. | NCS நிறுவனம் 2023 திசெம்பர் 31 திகதி RAMIS தொகுதி மூலம் தகவல்களை வழங்கும் போது தவறொன்று இடம்பெற்றுள்ளதுடன் அத் தவறை சரிசெய்து NCS நிறுவனத்தின் மூலம் 2025 மார்ச் 04 திகதி சரியான தரவுகளை சமர்ப்பித்துள்ளதுடன் புதிய தரவுளை பயன்படுத்தி நிலுவை வருமானக் கூற்றை (ACA1(i)) தயாரிக்க அக் கடிதத்தின் 2025 மார்ச் 06 திகதிய குறிப்பின் மூலம் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் அங்கீகாரம் வழங்கியுள்ளதென. | RAMIS தொகுதி மூலம் சரியான அறிக்கைகளை பெற்றுக் கொள்ளவும் நிலுவை வருமானம் தொடர்பான கூற்றை சரியாக தயாரிக்கவும் செயற்பட வேண்டும். |
| (iv) | 2024 திசெம்பர் 31 திகதி RAMIS கணனித் தொகுதியினுள் TIN இலக்கம் 10088xxxx கீழ் ரூபா 4,067,209,501 ஆன தீர்க்கப்படாத தொங்கல் மீதியொன்று காணப்பட்ட காரணத்தால் 2024 திசெம்பர் 31 திகதி நிலுவை வரி மீதி அப்பெறுமானத்தால் மிகை கணக்கீடாகியுள்ளதாகவும், அந்த தீர்க்கப்படாத மீதியினுள் 2015 மற்றும் 2016 முதல் (அதாவது சுமாராக 09 ஆண்டுகளிற்கு அதிக காலமாக) நிலவும் ரூபா 16,701,441 ஆன மீதியொன்றும் உள்ளடங்கியிருந்தது. | 2025 மார்ச் 31 திகதி நாளாதுவரையாக்கப்பட்ட அறிக்கை பிரகாரம் தொங்கல் கணக்கின் மீதி ரூபா 3,813,737,281 என மற்றும் இந்த மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதென. | தொங்கல் கணக்கின் மீதியை சரியாக இனங்கண்டு தீர்ப்பதற்கு தேவையான முயற்சி எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (v) | வருமானம் சேகரிக்கும் வங்கி கணக்கு மூலம் திறைசேரிக்கு செலவு வைக்கப்படும் தொகையை, வங்கி கணக்கு கூற்றுடன் இணக்கம் செய்து இனங்கண்டு காணப்படும் வித்தியாசத்தை சரிசெய்ய காலரீதியாக முயற்சி எடுத்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டதால் வருமான கணக்கீடு தொடர்பான உள்ளக கட்டுப்பாடில் பலவீனம் காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது. | பதில் வழங்கப்படவில்லை. | வருமானம் சேகரிக்கும் வங்கி கணக்கு கூற்றை சரியாக இணக்கம் செய்ய வேண்டும். |
| **(ஆ)** | **மாதாந்த வருமான அறிக்கையிடலின் சரியான தன்மை** | | |
| (i) | அரச நிதிக் கொள்கை சுற்றறிக்கை இலக்கம் 01/2015 இன் 4 மற்றும் 4 (இ) பிரிவின் பிரகாரம் அந்த அந்த வருமான விடயங்களின் கீழ் அடுத்துவரும் மாதத்தின் முதலாம் வாரத்தினுள் சரியான வருமான வகைப்படுத்தலை இனங்காண வேண்டுமென வழிகாட்டல் வழங்கப்பட்டுள்ள போதும், அதன் பிரகாரம் மீளாய்வாண்டினுள் வருமான குறியீடுகளின் கீழ் ஒவ்வொரு மாதமும் திரட்டிய வருமானத்தை அந்த மாதத்தினுள் இனங்காணப்படாது வேறு மாதமொன்றின் வருமானத்துடன் திரண்டு மீதி அறிக்கையிட்படுவதால் அந்த அந்த மாதங்களின் உண்மையான வருமான சேகரிப்பு தொடர்பாக சரியான தகவல் அறிக்கையிடப்படுவது இல்லையென அவதானிக்கப்பட்டது. | வருமான இணக்கக் கூற்றை தயாரிக்கும் போது பல்வேறு கட்டங்களின் கீழ் இடம்பெறும் தாமதங்கள் காரணமாக அடுத்துவரும் மாதத்தின் முதலாம் வாரத்தினுள் சரியான வருமான வகைப்படுத்தலை இனங்காண முடியவில்லையென. | சுற்றறிக்கை பிரகாரம் வருமான அறிக்கையை சரியாக தயாரிக்க வேண்டும். |
| (ii) | மாதாந்த வருமான வகைப்படுத்தல் அறிக்கை பிரகாரம் மார்ச் மாதத்திற்குரிய கெசினோ அனுமதிப் பத்திர கட்டணத்தின் கீழ் ரூபா 5,000,000,000 ஆன பெறுமானமொன்றை CIGAS நிகழ்சித் திட்டத்திற்காக தரவேற்றம் செய்யப்பட்டுள்ளதானது ஜூன் | இந்த வருமானத்தை குறித்த மாதத்தில் இனங்காண மற்றும் CIGAS நிகழ்சித் திட்டத்திற்காக தரவேற்றம் செய்யும் செயன்முறை தாமதிக்க தாக்கம் செலுத்தும் பல காரணங்கள் உள்ளதென. | அரச நிதிக் கொள்கை சுற்றறிக்கை பிரகாரம் வருமான அறிக்கையை சரியாக தயாரிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மாதத்தில் ஆவதுடன் மார்ச் மாத குடியகல்வு வரியான ரூபா 6,798,000 மற்றும் ஜுன் மாதத்திற்குரிய ரூபா 3,203,100 ஆன வருமானம் CIGAS நிகழ்சித் திட்டத்திற்காக தரவேற்றம் செய்யப்பட்டுள்ளதானது முறையே ஜுன் மாதத்தில் மற்றும் அகஸ்ட் மாதங்களில் ஆவதுடன் இந்த வருமான இனங்காணல் மற்றும CIGAS நிகழ்சித் திட்டத்திற்காக தரவேற்றம் செய்யும் செயன்முறையுடன் தொடர்பான திணைக்கள உள்ளக கட்டுப்பாடுகளில் காணப்படும் பலவீனம் காரணமாக இருந்தது. | | |
| (iii) | மீளாய்வாண்டில் திணைக்களத்தினால் வருமான வகைப்படுத்தலின் போது சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரிக் கணக்கின் வருமான வகைப்படுத்தலின் பிரகார மீதி மற்றும் திணைக்கள பரீட்சை மீதிக்கிடையே தேறிய மீதி வருமான குறியீடு 1002.16.01 மற்றும் 1002.16.02 இற்கான மொத்த வித்தியாசமான ரூபா 44,621,593,928 ஆன தொகையை ஒவ்வொறு மாதங்களிற்கும் வெவ்வெறாக சீராக்காது அண்டிறுதியில் பரிமாற்றப் பத்திரம் மூலம் மேற்கொள்வதன் காரணமாக ஒவ்வொறு மாதங்களினதும் உண்மையான வருமானம் அறிக்கையிடப்படவில்லை என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | 2024 ஏப்ரல் மாதம் முதல் வருமான வகைப்படுத்தல் அறிகையினுள் சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரி வருமானம், சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரிக் கட்டுப்பாட்டு கணக்கின் கீழ் வகைப்படுத்தி இருந்ததால் சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரி வருமானத்தை சரியாக வகைப்படுத்துவதற்காக 2024 ஒக்டோபர் 04 திகதிய பரிமாற்றப் பத்திரம் மூலம் குறித்த சீராக்கம் செய்யப்பட்டுள்ளதாக மற்றும் அதன் பிரகாரம் வருமான வகைக்கபடுத்தல் பிரகார மீதி மற்றும் திணைக்கள பரீட்சை மீதி பிரகார தேறிய மீதிக்கிடையே வித்தியாசத்திற்கு காரணமானது என. | திறைசேரி தகவல்களின் பிரகாரம், திணைக்களத்தினால் வருமான வகைப்படுத்தல் கட்டுப்பாட்டுக் கணக்கை சரியாக இணக்கம் செய்ய வேண்டும். |
| **(இ)** | **வருமான வகைப்படுத்தல் தவறுகள்** | | |
| (i) | திணைக்களத்தினால் சேகரிக்கப்படும் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி வருமானம் திறைசேரியில் பேணிச் செல்லப்படும் கட்டுப்பாட்டுக் கணக்கிற்கு செலவாகின்றது. அவ்வாறு செலவு வைக்கப்படும் தொகை மாதாந்த பொழிப்பின் | எதிர்காலத்தில் இந்த பிரச்சினையை தீர்த்துக் கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதென. | திறைசேரி தகவல்களின் பிரகாரம், திணைக்களத்தினால் வருமான வகைப்படுத்தல் கட்டுப்பாட்டுக் கணக்கை சரியாக இணக்கம் செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மூலம் நிதிச் சேவை, ஏனைய சேவைகள் மற்றும் உற்பத்திகள் எனும் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி மூன்று வருமானக் குறியீடுகளிற்கு கணக்கு வைக்கப்படுகின்றன. மீளாய்வாண்டில் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி கட்டுப்பாட்டுக் கணக்கிற்கு (1002.01.00) மாதாந்த கணக்கு பொழிப்பின் மூலம் கணக்கீடு செய்த பின்னர் மீளாய்வாண்டு இறுதியில் எஞ்சியிருந்த மீதியான ரூபா 1,891,325,403 தொகையை வருமான குறியீடுகளின் பிரகாரம் இனங்காணாது 10.04.02.99 ஏனைய சேவைகள் வருமான குறியீட்டிற்கு பரிமாற்ற பத்திரம் மூலம் மாற்றுவதன் ஊடாக பெறுமதி சேர்க்கப்பட்ட வரி நிதிச் சேவை, ஏனைய சேவைகள் மற்றும் உற்பத்திகள் ஆகிய மூன்று வருமான குறியீடுகளிலும் தேறிய வருமானத்தின் உண்மை தன்மை கணக்காய்வின் போது உறுதியாகவில்லை. | | |
| (ii) | வருமான வகைப்படுத்தல் தவறு 2021, 2022 மற்றும் 2023 ஆண்டுகளில் முறையே ரூபா 889,326,709 தொகை, ரூபா 7,021,728 தொகை மற்றும் ரூபா 1,068,469,869 தொகையாக இடம்பெற்றிருந்தது. | எதிர்காலத்தில் இந்த பிரச்சினையை தீர்த்துக் கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதென. | திறைசேரி தகவல்களின் பிரகாரம், திணைக்களத்தினால் வருமான வகைப்படுத்தல் கட்டுப்பாட்டுக் கணக்கை சரியாக இணக்கம் செய்ய வேண்டும். |

### 1.6.2 ஆதன பொறித் தொகுதி மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் / கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 42 ஆண்டுகளிற்கு கிட்டிய காலமாக குருனாகல உள்நாட்டு இறைவரி பிராந்திய அலுவலகம் அமைந்துள்ள காணியின் உரிதியை இதுவரை பெற்றுக் கொள்ளாததன் மீது மதிப்பீட்டு அறிக்கையொன்றை பெற்றுக் கொள்ள முடியாததன் காரணமாக நிதியல்லாத சொத்துக்களை மதிப்பிடுவது தொடர்பாக 2018 திசெம்பர் 31 | காணியை சுவீகரிப்பது தொடர்பாக தேவையான நடவடிக்கைகளை செய்து தருமாறு குருனாகல பிரதேச செயலாளரிற்கு அறவிக்கப்பட்டதுடன் காணி அமைச்சின் பணிப்பாளர் (காணி சுவீகரிப்பு) பிராந்திய அலுவலகம் அமைந்துள்ள காணி, காணி சுவீகரிக்கும் செயன்முறையின் கீழ் | நிதியல்லாத சொத்துக்கள் மதிப்பீட்டு வழகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து குறித்த சொத்துக்களை கணக்கீடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திகதி கொம்ட்ரோளர் நாயக அலுவலகத்தினால் வெளியிட்டுள்ள சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை இலக்கம் 04/2018 மற்றும் அதற்குரிய வழிகாட்டியின் பிரகாரம், மதிப்பிட்டு கணக்கீடு செய்திருக்கவில்லை. | சுவீகரிக்க நடவடிக்கை எடுக்குமாறு குருனாகல பிரதேச செயலாளரிற்கு அறிவிக்கும் கடிதம் கிடைத்த பின்னர் தேவையான முன்நடடிக்கைகளை மேற்கொண்டு, காணி உரிமையை பதிவு செய்ய நடவடிக்கை எடுப்பதாக குருநாகல பிரதேச செயலாளரினால் வாய்மொழி மூலம் அறிவித்துள்ளதாகவும் அன் பின்னர் இந்த காணியை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுப்பதென. | |
| (ஆ) | 2007 செப்டம்பர் 12 திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்குரிய இலக்கம் அஅப/07/1625/342/021 மற்றும் 2007 செப்டம்பர் 27 திகதிய அமைச்சரவை தீர்மானம் பிரகாரம் கொழும்பு 12, ஸ்ரீ சங்கராஜ மாவத்தயில் அமைந்துள்ள கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான காணியின் 100 பர்சஸ்களைக் கொண்ட காணித் துண்டொன்றை உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு ஒப்படைப்பது தொடர்பான உடன்படிக்கையிற்கு உட்படாது ரூபா 50 மில்லியன் முற்பணத்தை கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தியிருந்ததுடன் இக் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக இது வரை கணக்குகள் மூலம் வெளிப்படுத்தி இருக்கவில்லை. மேலும் மேற்குறித்த காணி அலுவலக கட்டிடத் தொகுதி ஒன்றிற்கு பொருத்தமற்றது என தீர்மானித்திருந்ததுடன் அத் தொகைக்கு பதிலீடாக கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான களுதுறை நகர அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ள காணியொன்றை | உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால் கொழும்பு 12, ஸ்ரீ சங்கராஜ மாவத்தயில் அமைந்துள்ள 100 பர்சஸ் காணித் துண்டை சுவீகரிப்பதற்காக 2008 பெப்ரவரி 22 திகதி ரூபா 50 மில்லியன் முற்பணம் வ/ப கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தியுள்ளதுடன் அந்த காணி அலுவலக கட்டிடத் தொகுதி ஒன்றிற்கு பொருத்தமற்றது என தீர்மானிக்கப்பட்டுள்ளதால் அத் தொகையை விடுவிக்குமாறு வ/ப கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்திற்கு அடிக்கடி கோரிக்கை விடுக்கப்பட்டுளள்துடன் அத் தொகைக்கு பதிலீடாக கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான களுதுறை நகர அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ள காணியொன்றை திணைக்களத்திற்கு ஒப்படைப்பது தொடர்பாக கலந்துரையாடல் நடாத்தப்பட்ட போதும் கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபன தரப்பிலிருந்து தற்போதைய நிலைமை தொடர்பாக இதுவரை பதிலொன்றை வழங்கவில்லையென. | முற்பணத் தொகையை விரைவில் மீள் அறவிட தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திணைக்களத்திற்கு ஒப்படைப்பது தொடர்பாக கலந்துரையாடல் நடாத்தப்பட்ட போதும் பிரச்சினைகான சாதகமான தீர்வொன்றிற்று வருவதற்கு இதுவரை இயலாதிருந்தது. | | |
| (இ) | நிதியல்லாத சொத்துக்களை மதிப்பிடுவது தொடர்பாக 2018 திசெம்பர் 31 திகதி கொம்ட்ரோளர் நாயக அலுவலகத்தினால் சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை இலக்கம் 04/2018 உடன் வெளியிட்டுள்ள இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதியல்லாத சொத்துக்களை மதிப்பிடும் வழிகாட்டி பிரகாரம், நடைபெற்றுவரும் நிர்மாணமொன்றை போலவே செய்துள்ள மொத்த செலவுகளையும் நடைமுறை வேலைகளாக கணக்கீடு செய்ய வேண்டுமென குறிப்பிட்டுள்ள போதும், உள்நாட்டு இறைவரி திணைக்கள தலைமை அலுவலகத்தில் அமைந்துள்ள ரூபா 176,000,000 ஆன நிதி மதிப்பீட்டின் கீழ் நிர்மாணிக்கப்பட்டுவரும் இது வரை பயன்படுத்த முடியுமான நிலையில் இல்லாத நிர்மாணம் நிருத்தப்பட்டுள்ள ஊர்திச்சாலைக்காக இதுவரை செலவிட்டுள்ள தொகை, நடைமுறை நிர்மாணங்களாக கணக்கீடு செய்யப்பட்டு இருக்காததுடன் ஊர்திச் சாலையின் தற்போதைய நிலைமையை அவதானிக்கும் போது, அது அதிகளவில் துருப்பிடித்து மற்றும் பழுதடைந்துள்ளதால் நிகழ்கால மதிப்பீட்டுப் பெறுமதியானது தற்போது கணக்கீடு செய்துள்ள பெறுமதியிலிருந்து வேறுபட இயலுமாகவிருந்தது. | NBRO நிறுவனத்தின் மூலம் 2024 திசெம்பர் 26 திகதி, ஊர்திச் சாலையின் கட்டமைப்பு ரீதியான திட்டம் தொடர்பான தகவல்களை அழைப்பித்துள்ளதுடன் அது தொடர்பாக அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தினால் வழங்கிய தகவல்களை NBRO இற்கு அனுப்பியுள்ளதாகவும் ஊர்திச்சாலையின் கட்டமைப்பு ரீதியான பகுப்பாய்வு அறிக்கையை ஒருமாதத்தினுள் வழங்க NBRO வாய் மொழிமூலம் இணங்கி அந்த நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள் 2025 ஏப்ரல் 04 ஆம் திகதி திணைக்களத்திற்கு வருகைதந்து குறித்த பரீட்சிப்பு வேலைகளில் ஈடுபட்ட போதும் இதுவரை அதற்குரிய அறிக்கை கிடைக்காததுடன் குறித்த அறிக்கையை பெற்றுக் கொண்ட பின்னர் முன்நடவடிக்கை மேற்கொள்ள எதிர்பார்ப்பதெென. | சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை அறிவுரை பிரகாரம் சொத்துக்களை கணக்கீடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | இயந்திர கோளாரின் மீது 3 ஆண்டுகளிற்கு அதிக காலமாக விளைவற்று காணப்பட்ட மிட்சுபிசி வகை லொரி வண்டியொன்றின் பராதீன செயன்முறை நிறைவடையாததன் மீது குறித்த வாகனத்தின் பெறுமதி 2024 திசெம்பர் 31 திகதிக்கு நிதியல்லாத சொத்துக்களினுள் உள்ளடக்கப்பட்டிருந்தது. | லொரி வண்டியை செலுத்த முடியாத நிலையில் காணப்படுவதால் பராதீன குழுவினால் வண்டியை பராதீனம் செய்வது பொருத்தமென பரிந்துரைத்துள்ளதுடன் தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சியளிக்கும் திணைக்களத்தினால் வண்டியை பொறுப்பேற்க விருப்பம் தெரிவித்துள்ளதால் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதென. | சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை அறிவுரை பிரகாரம் சொத்துக்களை கணக்கீடு செய்ய வேண்டும். |
| (உ) | 2023 திசெம்பர் 11 திகதி CAC-9937 கொண்ட வண்டி விபத்து தொடர்பாக முன் கொண்டுவந்த மீதிளை மீளாய்வாண்டு நிதிக்கூற்றுக்களில் இணைப்பு (ii) புத்தகங்களில் இருந்து பதிவழிப்பது தொடர்பான கூற்றின் மூலம் முன்கொண்டு சென்றிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது அனைத்து தகவல்ளையும் அதில் உள்ளடக்கி சரியாக தயாரிக்குமாறு தேவையான அறிவுரை வழங்கியதாகவும் விபத்தினால் ஏற்பட்ட நட்டசேதம் தற்போது முழுமையாக மீள்நிரப்பப்பட்டு இறுதிக் கொடுப்பனவு செலுத்தப்பட்டுள்ளதென. | நிதிக்கூற்றுக்களை சரியாக தயாரிக்க வேண்டும். |
| (ஊ) | 2022 திசெம்பர் 31 திகதி மேற்கொண்டுள்ள பண்டக கணிப்பீட்டின் மூலம் மாதிரியொன்றாக தெரிவு செய்த 43 பிரிவுகளிற்குரிய பண்டக உருப்படிகள் தொடர்பாக CIGAS நிகழ்ச்சித் திட்டத்தை செம்மையாக்க வேண்டுமென பரிந்துரைத்துள்ள போதும், 05 பிரிவுகளிற்குரிய உருப்படிகளை செம்மையாக்கல் தொடர்பாக மேலும் கணிப்பீடு செய்ய வேண்டியதால் நிதிக்கூற்றுக்களில் 2024 திசெம்பர் 31 திகதியன்று இயந்திர மற்றும் இயந்திர உபகரணங்களாக காண்பித்துள்ள ரூபா 525,986,171 சொத்துக்களின் பெறுமதி மாற்றமடைய வேண்டியதால், அப்பெறுமதி தொடர்பாக கணக்காய்வின் போது திருப்தியடைய முடியவில்லை. | மொத்த உருப்படிகள் 145 இற்காக உரிய செம்மையாக்கல்கள் மற்றும் சரிசெய்தல்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளதுடன் இது தொடர்பாக நியமிக்கப்பட்டுள்ள விசேட கணிப்பீட்டு சபையினால் இதுவரை 09 பிரிவுகளிற்குரிய கணிப்பீட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதென. | பண்டக கணிப்பீட்டுச் சபை பரிந்துரையை செய்ற்படுத்த வேண்டியதுடன் நிதிக்கூற்றுக்களை சரியாக தயாரிக்க வேண்டும். |

**1.6.3 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் / கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால் சிங்கப்பூர் நிறுவனத்துடன் கைச்சாத்திட்ட உடன்படிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் நாயகத்திற்கு வழங்கப்படாததால் RAMIS தொகுதிக்கான பணக் கொடுப்பனவு குறித்த உடன்படிக்கை பிரகாரம் இடம்பெற்றுள்ளதா என கணக்காய்வின் போது உறுதி செய்து கொள்ள முடியாதுள்ளது. | RAMIS கணனித் தொகுதிக்குரிய ஆவணங்கள் அல்லது தகவல்களை பரிமாற்றிக் கொள்ள சிங்கப்பூர் அரசிற்கு பதிலாக உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட Singapore Corporation Enterprises நிறுவனத்தின் எழுத்துமூல அங்கீகாரம் கிடைக்காததால் குறித்த உடன்படிக்கை பிரதிகளை கணக்காய்விற்கு வழங்க முடியாதென மற்றும் அவ்வா சேய்தால் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு எதிராக சிங்கப்பூர் கம்பனியினால் சட்ட நடவடிக்கை எடுக்கும் சந்தர்ப்பம் காணப்படுவதென. | குறித்த உடன்படிக்கை பிரதிகளை கணக்காய்வாளர் நாயகத்திற்கு வழங்க வேண்டியதுடன் தேசிய கணக்காய்வு சட்டத்தின் 42 பிரிவின் பிரகாரம் கணக்காய்வளரிற்கு உதவி செய்வதனை புறக்கணிப்பது தவறொன்று என. |
| (ஆ) | RAMIS தொகுதிக்கு புறம்பாக பேணிச் செலலும் அறிக்கை மொளுலான elixir தொகுதியின் அபிவிருத்தி நடவடிக்கைகள் நிறைவடையாமை மற்றும் கணக்காய்வு பதவியணிக்கு இது வரை அணுகல் வழங்கப்படாமை காரணமாக கணக்காய்வு பதவியணிக்கு RAMIS தொகுதியின் அறிக்கையை சுயாதீனமாக உருவாக்குதல் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன் உள்நாட்டு இறைவரி திணைக்களம் வழங்கும் அறிக்கையின் மீது கணக்காய்வு பரீட்சிப்புக்களை செய்யும் போது விடய பரப்பு மட்டுப்படுத்தப்பட்டு இருந்தது. | தொகுதியில் மேற்கொள்ளப்பட்ட மேம்படுத்தல்களின் பின்னர், பழைய வரி காலஎல்லைகளிற்குரிய அனைத்து தகவல்களும் தொதிக்குட்படுத்தப்படாததால் எதிர்காலத்தில் "elixir" தொகுதிக்கு கணக்காய்வு உத்தியோகத்தர்களிற்கு உட்பிரசேவிசிக்க தேவையான வசதிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். | elixir தொகுதியின் அபிவிருத்தி நடவடிக்கைகளை விரைவில் நிறைவு செய்து கணக்காய்வு உத்தியோகத்தர்களிற்கு உட்பிரவேசிக்க தேவையான வசதிகளை வழங்க நடடிக்கை எடுக்க வேண்டியதாக, மற்றும் அவ்வாறு செய்யாதது தேசிய கணக்காய்வு சட்டத்தின் 42 பிரிவின் பிரகாரம் கணக்காய்வளரிற்கு உதவி செய்வதனை புறக்கணிப்பது தவறொன்று என. |
| (இ) | கூட்டுறவு மொத்த விற்பனை கூட்டுத்தாபனத்தினால் திணைக்களத்திற்கு கிடைத்திருந்த ஜாவத்த பிரதாந்திய அலுவலகம் அமைந்துள்ள கட்டிடம் தொடர்பான பெறுகைகள், இன்வென்றி ஒப்படைத்தல் | பதில் வழங்கப்படவில்லை. | சொத்துக்களின் உரிமையை உறுதி செய்து கொள்ள திட்டவட்டமான பதிவேடுகளை பேண வேண்டியதுடன் அவற்றை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டும். |

மற்றும் பொறுப்பேற்றல் அல்லது உரிமையை உறுதி செய்து கொள்வது தொடர்பாக திட்டவட்டமான பதிவேடுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

## 2. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேதொத்ததாகும்.

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பின்வரும் பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| கடந்த ஆண்டின் அறிக்கையின் பந்தி தொடர்பு. | செயற்படுத்தப்பட்டிருக்காத பரிந்துரைகள் | இந்த அறிக்கையின் பந்தி தொடர்பு. |
|---|---|---|
| 1.6.1. 1.(i) | திறைசேரி தகவல்கள் மற்றும் திணைக்கள புத்தகங்களிற்கிடையே காணப்படும் வித்தியாசத்தை சரியாக இனங்கண்டு செம்மையாக்க வேண்டும். | 1.6.1. 1.(i) |
| 1.6.1. 1.(iii) | தொங்கல் கணக்கின் மீதியை சரியாக இனங்கண்டு தீர்ப்பதற்கு தேவையான முயற்சி எடுக்க வேண்டும். | 1.6.1.1.(iv) |
| 1.6.1.2 | மாதாந்த வருமானத்தை சரியாக அறிக்கையிட வேண்டும். | 1.6.1.2 (i) |
| 1.6.1.3.(iii) | வருமான வகைப்படுத்தல் தவறை தீர்க்க வேண்டும். | 1.6.1.3.(i) |
| 1.6.2.1, 1.6.2.2 | சுற்றறிக்கை பிரகாரம் திணைக்களத்திற்கு சொந்தமான அனைத்து சொத்துக்களையும் மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய வேண்டும். | 1.6.2.3, 1.6.2.6 |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 கட்டுநிதி முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் / கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 3.1.1 | திணைக்கள கட்டுநிதியை திட்டமிடும் போது மாதாந்தம் கோர வேண்டிய கட்டுநிதியை இனங்கண்டிருக்காததுடன் முழு ஆண்டிற்காகவும் ரூபா 9,551,730,000 தொகையை கோருவதற்கு திட்டமிட்டிருந்த போதும் ஆண்டினுள் ரூபா 9,072,882,000 தொகையான | வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் அங்கீகார நிதி ஏற்பாட்டு எல்லைகளை அடிப்படையாக்க கொண்டு வருடாந்த கட்டுநிதி எல்லையை தயாரிப்பதுடன் வருடாந்தம் திட்டமிட்ட கட்டுநிதி திட்டத்தின் கீழ் மாதாந்தம் கோரப்பட்ட கட்டுநிதிக்காக திறைசேரி செயற்பாட்டு | திணைக்கள கட்டுநிதி கட்டுப்பாட்டை சிறப்பான கட்டுப்பாட்டுடன் மேற்கொள்ள முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கட்டுநிதி கோரப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் திணைக்களத்திற்கு கிடைத்தத மொத்த கட்டுநிதி ரூபா 8,386,032,000 ஆனதுடன் அது கோரிய கட்டுநிதியின் 92 சதவீதமானது. மாதாந்தம் கோரிய மற்றும் கிடைந்த கட்டுநிதிக்கிடையிலான முரண் 2 சதவீதம் முதல் 153 சதவீதமான வீச்சளவில் விரிந்து காணப்பட்டது. மேலும் கோர வேண்டிய கட்டுநிதி மற்றும் கிடைத்த கட்டுநிதிக்கிடையே ரூபா 1,165,698,000 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டதுடன் சதவீதமாக 12 சதவீதமானது. | திணைக்களத்தினால் முற்பணம் விடுவிக்கும் போது திரவத் தன்மையை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளல் மற்றும் நாட்டினுள் காணப்படும் பொருளாதார நெருக்கடி காரணமாக திறைசேரி ஊமாக கோரப்பட்ட முற்பண அளவையும் வழங்காததன் மீது ஏற்பட்ட நிலைமையென. | |

## 3.2 வருமான முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் / கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 3.2.1 | நிதிப்பிரமாணம் 128 (2)(இ) பந்தி பிரகாரம் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் அரையாண்டு நிலுவை வரி அறிக்கை முறையே ஜுலை 31 மற்றும் அடுத்த நிதியாண்டு சனவரி 31 திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கக வேண்டிய போதும். அதன் பிரகாரம், 2024 ஜுன் 30 திகதியுடன் முடிவடைந்த அரையாண்டிற்காக 2024 ஆகஸ்ட 30 திகதி 01 மாதகால தாமதத்துடன் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்த Legacy மற்றும் RAMIS தொகுதிகளின் நிலுவை வரி வருமானம் தொடர்பான அறிக்கை மூலம் வழங்கிய தகவல்களை பரீட்சிக்கும் போது அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு. | நிலுவை வரி அறிக்கை (C-49) தயாரிக்க முன்னர் வங்கி மூலம் மறுக்கப்பட்ட காசோலை அறிவிப்பு, வங்கித் தவறுகளை - சரிசெய்வது தொடர்பான வரவு - செலவு பதிவேடு ஆகியவை கிடைக்க வேண்டியதுடன், அந்த ஆவணங்கள் கிடைக்க ஒரு மாதத்திற்கு அதிக காலம் செல்வதுடன், அதன் பின்னர் குறித்த வேலை உருப்படிகளின் செயற்பாடுகளை நிறைவு செய்ய இன்னுமொரு காலம் செலவாவதன் மீது அந்த செயற்பாடுகளை நிறைவு செய்வதனை குறித்த மாதத்தினுள் மேற்கொள்வது நடைமுறை ரீதியாக செய்து கொள்ள முடியாது. அதனால் அற்கான காலத்தை நீடித்து தருமாறு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயத்தினால் 2024 ஜுலை 19 திகதிய கடிதம் கணக்காய்வாளர் நாயகத்திடம் கோரப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணம் 128 (2)(இ) பந்தி பிரகாரம் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் அரையாண்டு நிலுவை வரி அறிக்கையை உரிய திகதியில் கணக்காய்வாளர் நாயத்திற்கு வழங்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (அ) | மேற்படி நிலுவை வரி அறிக்கை பிரகாரம் RAMIS மற்றும் Legacy கணனி தொகுதிகளிற்கு உரியதாக 2024 ஜுன் 30 திகதி காணப்பட்ட மொத்த நிலுவை வரி, தண்டப்பணம் மற்றும் வட்டி வருமானம் ரூபா 961,447,877,690 தொகையும் அவற்றில் ரூபா 793,081,825,508 தொகையானது தற்காலிகமான அறவீட்டை இடைநிறுத்தியுள்ள வரி, தண்டப்பணம் மற்றும் வட்டி ஆனதுடன் ரூபா 168,366,052,182 தொகை அறவிட முடியுமான வரி, தண்டப்பணம் மற்றும் வட்டியானது. அதன் பிரகாரம், 82 சதவீதத்திற்கு அதிக பெறுமதியானது இடைநிறுத்தியுள்ள வரி, தண்டப்பணம் மற்றும் வட்டி ஆனது. | அவதானிப்பு சரியானதென. | குறித்த வரிச் சட்டங்களில் குறிப்பிடப்படும் அனைத்து அறவீட்டு செயற்பாடுகளைளும் செயற்படுத்தி மேற்குறித்த அனைத்து நிலுவை வரி மற்றும் தண்டப்பண மீதிகளை விரைவில் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | RAMIS கணனித் தொகுதியுடன் தொடர்பான மேற்படி நிலுவை வரி அளவானது மொத்த நிலுவை வரி, தண்டப்பணம் மற்றும் வட்டி பெறுமதியான ரூபா 765,243,704,202 இன் 84 சதவீதம் அதாவது, ரூபா 639,069,761,631 தொகை அறவீட்டை தற்காலிகமாக இடைநிறுத்திய வரி, தண்டப்பணம் மற்றும் வட்டியாகவும், ரூபா 126,173,942,571 தொகை அதவாது 16 சதவீதம் அறவிட இயலுமான நிலுவை வரி மற்றும் தண்டப்பணமாக இனங்கண்டிருந்ததுடன் Legacy கணனித் தொகுதி பிரகாரம், நிலுவை வரி, தண்டப்பணம் மற்றும் வட்டி பெறுமதியான ரூபா 196,204,173,488 இன் ரூபா 154,012,063,877 தொகை அதாவது, 79 சதவீதம் அறவீடு தற்காலிகமாக இடைநிறுத்திய வரி, தண்டப்பணம் மற்றும் வட்டியாக இனங்கண்டிருந்தன. | அவதானிப்பு சரியானதென. | குறித்த வரிச் சட்டங்களில் குறிப்பிடப்படும் அனைத்து அறவீட்டு செயற்பாடுகளைளும் செயற்படுத்தி மேற்குறித்த அனைத்து நிலுவை வரி மற்றும் தண்டப்பண மீதிகளை விரைவில் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மொத்த நிலுவை வரி, தண்டப்பணம் மற்றும் வட்டி வருமானத்தின் கனிசமான உயர பெறுதியொன்று தற்காலிகமாக இடைநிறுத்திய வரி, தண்டப்பணம் மற்றும் வட்டியாக காணப்படுவதால் அதன் ஊடாக எதிர்பார்த்த வரி வருமானம் திணைக்களத்திற்கு அறவிடப்படல், முறையீட்டு செயன்முறையை தீர்ப்பதன் மீது தீர்மானிக்கப்படும் விடயமொன்றாவதால் அந்த வரி மற்றும் தண்டப்பணம் அறவிட வேண்டியதாக அல்லது அறவிடுவதற்கு நிலுவை வரி இல்லையென தீர்மானமாவதற்காக கனிசமான காலமொன்று செலவாவதாக அவதானிக்கப்பட்டது. | நிலுவை வரி அறவீடு கைவிடப்படல் வெளியிடப்பட்ட மதிப்பீடுகளிற்கு எதிராக முறைபாடு அல்லது எதிர்ப்பு சமர்பிக்கப்படும் சந்தர்ப்பங்களில், நிலுவை வரியை அறவிட வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக அல்லது 2021 இன் 18 இலக்க நிதிச் சட்டம் மற்றும் 2021 இன் 10 இலக்க உள்நாட்டு இறைவரி திருத்திய சட்டத்தின் கீழ் பதிவழிக்க தகைமை பெற்றுள்ள போதுதாவதுடன் அந்த கைவிடலிற்கு காரணமாக அடைந்த விடயங்களை தீர்த்துக் கொண்ட பின்னர் நிலுவை வரி அறவீடு செய்யப்படுவதென. | குறித்த வரிச் சட்டங்களில் குறிப்பிடப்படும் அனைத்து அறவீட்டு செயற்பாடுகளைளும் செயற்படுத்தி மேற்குறித்த அனைத்து நிலுவை வரி மற்றும் தண்டப்பண மீதிகளை விரைவில் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | Legacy தொகுதிக்குரிய 2023 திசெம்பர் 31 திகதி மொத்த நிலுவை வரி மற்றும் தண்டப்பண மீதி ரூபா 209,936,351,221 ஆவதுடன் 2024 ஜுன் 30 திகதி நிலுவை வரி மற்றும் தண்டப்பண மீதி ரூபா 196,201,974,929 ஆனது. அதன் பிரகாரம் அக் காலப் பகுதியினுள் Legacy தொகுதிக்குரிய நிலுவை வரி மற்றும் தண்டப்பணத்திற்கு உரியதான அறவீட்டு முன்னேற்றத்தை பரீட்சிக்கும் போது மொத் நிலுவை வரி ம்றறும் தண்டப்பண அளவு 2024 ஜுன் 30 திகதி வரை ரூபா 13,734,376,292 இனால் குறைந்துள்ளதுடன் அதனுள் ரூபா 8,610,021,711 தொகை புதிதாக இனங்கண்டு நிலுவை வரி மற்றும் தண்டப்பணம் எனவும், ரூபா 14,545,807,451 தொகை நிதியல்லாத காரணத்தின் மீது மேற்கொண்ட செம்மையாக்கல் எனவும், ரூபா 3,002,483,464 மாத்திரம் பணமாக அறவிட்டு இருந்தாகவும் அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் கணக்காய்விற்காக கவனத்திற் கொண்ட காலப் | பதில் வழங்கப்படவில்லை. | குறித்த வரிச் சட்டங்களில் குறிப்பிடப்படும் அனைத்து அறவீட்டு செயற்பாடுகளைளும் செயற்படுத்தி மேற்குறித்த அனைத்து நிலுவை வரி மற்றும் தண்டப்பண மீதிகளை விரைவில் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பகுதியினுள் அறவிட முடியுமான நிலுவை வரி பெறுமதி பணமாக அறவிடப்படும் தசவீதம் 15 சதவீதம் மாத்திரமாகும். | | |
| (உ) | RAMIS தொகுதிக்கு தொடர்பான 2023 திசெம்பர் 31 திகதி முதல் 2024 ஜுன் 30 திகதி வரை மொத்த அறவிட முடியுமான மற்றும் மொத்த அறவீட்டை தற்காலிகமாக இடைநிறுத்திய நிலுவை வரி, வட்டி மற்றும் தண்டப்பணங்களிற்குரிய அறவீட்டு முன்னேற்றத்தை பரீட்சிப்பதற்காக அழைப்பிக்கப்பட்ட மேலதிக தகவல்கள் பகுப்பாய்வின் போது, அறவிட முடியுமான மொத்த நிலுவை வரித் தொகையின் மற்றும் தற்காலிகமாக இடைநிறுத்திய மொத்த நிலுவை வரித் தொகையின் 2023 திசெம்பிர் 31 திகதி மீதிகளிற்கிடையே முறையே ரூபா 173,749,755 மற்றும் ரூபா 967,411,196 ஆன வித்தியாசமும் 2024 ஜுன் 30 திகதி மீதிக்கிடையே ரூபா 403,908,945 மற்றும் ரூபா 1,998,964,464 ஆன வித்தியாசமும் அவதானிக்கப்பட்டது. | 2023 திசெம்பர் 31 மீதி மற்றும் 2024 சனவரி 01 மீதிக்கிடையிலான வித்தியாசம் RAMIS தரவு அறிக்கை பிரகாரம் இடம் பெற்றுள்ளதாகவும் RAMIS தொகுதிக்குரிய தரவுகள் இந்த பிரிவிற்கு வழங்கும் NCS நிலுவனம் 2023 திசெம்பர் 31 திகதிக்கு உரியதாக தகவல்களை வழங்கும் போது தவறொன்று இடம்பெற்றுள்ளதுடன் இத் தவரை சரிசெய்து NCS நிறுவனத்தினால் இந்த வித்தியாசம் தொடர்பாக உள்நாட்டு இறைவரி ஆணையாளரிற்கு விடயங்களை அறிவித்துள்ளதுடன் அதன் பிரகாரம் புதிய தரவுகளை பயன்படுத்தி 2024 திசெம்பர் 31 திகதிக்கு நிலுவை வருமானக் கூற்றை தயாரித்தமை மேற்குறித்த வித்தியாசத்திற்கு காரணமாக அமைந்துள்ளதாகவும் மேற்குறித்த தவறு இடம்பெற்றது தொடர்பாக ஆனையாளர் நாயகத்திற்கு RAMIS அலுவலகத்தின் உத்தியோகத்தர்களின் தெளிவுபடுத்தலை கோரியுள்ளதென. | வரி தொடர்பான அறிக்கை சரியாக தொகுதியினூடாக உருவாவதாக முகாமைத்துவம் உறுதி செய்ய வேண்டியதுடன் காணப்படும் வித்தியாசங்களை தீர்ப்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | தெரிவு செய்த பிராந்திய அலுவலகங்களில் RAMIS தொகுதியுடன் தொடர்புபடும் காலஎல்லையில் மேற்கொண்ட மாதிரி பரீட்சிப்பின் போதும் நிலுவை வரி சரியாக நிலுவை வரி அறிக்கைகளில் பதியப்படாத சந்தர்ப்பங்களும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டதில் உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால் தயாரிக்கப்படும் நிலுவை வரி அறிக்கை மூலம் உண்மையான நிலுவை வரி அளவுகள் அறிக்கையிடப்படுவதில்லையென அவதானிக்கப்பட்டது. | நிலுவை விரி அறிக்கையை சரிசெய்ய மற்றும் அதேதவறு மீண்டும் மீண்டும் இடம்பெறுவதனை தவிர்க்க பிராந்திய அலுவலகங்களிற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | வரி தொடர்பான அறிக்கையை சரியாக தொகுதியினூடாக உருவாகுவதாக முகாமைத்துவம் உறுதி செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| **3.2.2** | **2024 திசெம்பர் 31 திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்காக 2024 பெப்ரவரி 20 திகதி சமர்ப்பிக்கப்பட்ட Legacy தொகுதியின் நிலுவை வரி வருமானம் தொடர்பான அறிக்கை மற்றும் RAMIS தொகுதியின் நிலுவை வரி வருமானம் தொடர்பான அறிக்கை மூலம் வழங்கப்பட்ட தகவல்களின் பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.** | | |
| (அ) | திணைக்களத்தினால் திரட்டிக் கொள்ள வேண்டிய மொத்த நிலுவை வரி, தண்டப்பணம் மற்றும் வட்டி வருமானத்தின் 85 சதவீதத்திலும் அதிக பெறுமதியொன்று அதாவது ரூபா 974,307,199,040 தொகை தற்காலிகமாக இடைநிறுத்திய வரி, தண்டப்பணம் மற்றும் வட்டியாக இனங்காணப்பட்டிருந்தது. | அவதானிப்பு சரியானதென. | குறித்த வரிச் சட்டங்களில் குறிப்பிடப்படும் அனைத்து அறவீட்டு செயற்பாடுகளையும் செயற்படுத்தி மேற்குறித்த அனைத்து நிலுவை வரி மற்றும் தண்டப்பண மீதிகளை விரைவில் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | RAMIS கணனித் தொகுதிக்குரியதாக 2024 திசெம்பர் 31 திகதி மொத்த நிலுவை வரி, தண்டப்பணம் மற்றும் வட்டி பெறுமதியான ரூபா 961,921,636,054 இன் 86 சதவீதம் அதாவது, ரூபா 824,835,296,464 தொகை அறவிடுதல் தற்காலிகமாக இடைநிறுத்திய வரி, தண்டப்பணம் மற்றும் வட்டியாக ரூபா 137,086,339,590 தொகை அதாவது 14 சதவீதம் அறவிட இயலுமான நிலுவை வரி மற்றும் தண்டப்பணமாக இனங்காணப்பட்டிருந்தது. | அவதானிப்பு சரியானதென. | குறித்த வரிச் சட்டங்களில் குறிப்பிடப்படும் அனைத்து அறவீட்டு செயற்பாடுகளையும் செயற்படுத்தி மேற்குறித்த அனைத்து நிலுவை வரி மற்றும் தண்டப்பண மீதிகளை விரைவில் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | Legacy கணனித் தொகுதி பிரகாரம், 2024 திசெம்பர் 31 திகதி மொத்த நிலுவை வரி, தண்டப்பணம் மற்றும் வட்டி பெறுமதியான ரூபா 188,082,393,190 இன் ரூபா 149,471,902,576 தொகை | அவதானிப்பு சரியானதென. | குறித்த வரிச் சட்டங்களில் குறிப்பிடப்படும் அனைத்து அறவீட்டு செயற்பாடுகளையும் செயற்படுத்தி மேற்குறித்த அனைத்து நிலுவை |

| | | | |
|---|---|---|---|
| | அதாவது 79 சதவீதம் அறவீடு தற்காரிகமாக இடைநிறுத்திய வரி, தண்டப்பணம் மற்றும் வட்டியாக இனங்காணப்பட்டிருந்தது. | | வரி மற்றும் தண்டப்பண மீதிகளை விரைவில் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (i) | 2014 இன் 14 இலக்க சட்டத்தினால் திருத்திய 2010 இன் 16 இலக்க புறக்கணிக்கப்பட்ட வரி அறவீட்டு (சிஷேட ஏற்பாடு) சட்டத்தின் கீழ் 2009 திசெம்பர் 31 திகதி கொடுப்பனவு புறக்கணிக்கப்பட்ட வரியை அறவிடுவதற்காக பிரதி ஆணையாளர் நாயகம் ஒருவரின் கீழ் திணைக்களத்தினுள் வேறாக அலகொன்றை (DTRU) அமைந்து அந்த நிலுவை வரியை அறவிடுவது தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2024 சனவரி 01 திகதி முதல் DTRU பிரிவு முன்னர் இருந்ததை போன்றே Legacy பரிவின் கீழ் கூட்டிணைக்கப்பட்டு நிலுவை வரி (RAMIS கால எல்லைக்கு முன்னர்) அறவிடும் பிரிவாக புதிய பிரிவொன்று பெண் ஆணையாளர் ஒருவரின் கீழ் அமைக்கப்பட்டிருந்தது. DTRU பிரிவிற்கு 2015 திசெம்பர் 31 திகதி ரூபா 48,812,991,690 ஆன நிலுவை வரி மற்றும் தண்டமாக மாற்றியுள்ளதுடன் 2024 திசெம்பர் 31 திகதி வரை ரூபா 18,752,301,710 தொகை வரை அதாவது, ரூபா 30,060,689,980 ஆன நிலுவை வரி மற்றும் தண்டப்பணம் மாத்திரம் தீர்க்கப்பட்டிருந்தன. | எஞ்சியுள்ள நிலுவை வரிகளில் பழைமை தன்மை காரணமாகவே பல காரணங்களின் மீது தீர்ப்பனவு காலம் செல்வதாகவும் எவ்வாறாயினும் இந்த நிலுவை வரியை அறவிட உச்ச விதத்தில் நடவடிக்கை எடுப்பதென. | குறித்த வரிச் சட்டங்களில் குறிப்பிடப்படும் அனைத்து அறவீட்டு செயற்பாடுகளைளும் செயற்படுத்தி மேற்குறித்த அனைத்து நிலுவை வரி மற்றும் தண்டப்பண மீதிகளை விரைவில் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | சமர்ப்பித்த தகவல்களின் பிரகாரம் 2019, 2020, 2021, 2022, 2023 மற்றும் 2024 ஆண்டுகளில் இந்த பிரிவின் நிலுவை வரி குறைவு பணமாக மற்றும் வேறு வகைகள் தொடர்பான பொழிப்பு பின்வருமாறு. அதன் பிரகாரம் | 2021 இன் 18 இலக்க நிதி சட்டத்தை அறிமுகம் செய்ததுடன் அந்த சட்டத்தின் பிரகாரம் பதிவழிக்க முடியுமான படைய நிலுவை வரி வகைகளை பதிவழித்தல், SME கீழ் வரி பதிவழித்தல் மற்றும் ஆலோசனை குழுவின் பரிந்துரையின் மீது அரச | குறித்த வரிச் சட்டங்களில் குறிப்பிடப்படும் அனைத்து அறவீட்டு செயற்பாடுகளைளும் செயற்படுத்தி மேற்குறித்த அனைத்து நிலுவை |

| | | | |
|---|---|---|---|
| | பின்வரும் நிலுவை வரி அறவீட்டினுள் உண்மையாக பணமாக அறவிடப்பட்ட அளவு 18 சதவீதமானதுடன் சீராக்கம் மற்றும் நிதி சட்டத்தின் கீழ் பதிவழித்தல் 82 சதவீதமென அவதானிக்கப்பட்டது. | நிறுவனங்களிற்குரிய வரியை பதிவழித்தல் மற்றும் பணமாக அறவிட வேண்டிய வரியை இயலுமான உச்ச ரீதியாக அறவீடு மேற்கொள்ளப்பட்டுள்ளதென. | வரி மற்றும் தண்டப்பண மீதிகளை விரைவில் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| வருடம் | பணமாக அறவீடு (ரூபா) | சீராக்கம், தீர்வு மற்றும் செம்மையாக்கல் செய்த அளவு (ரூபா) | நிதிச் சட்டத்தின் கீழ் பதிவழித்தல் (ரூபா) |
|---|---|---|---|
| ------ | ----------------- | ----------------- | ------------ |
| 2019 | 1,026,330,364 | 1,089,542,165 | - |
| 2020 | 1,275,035,679 | 661,186,332 | - |
| 2021 | 80,013,481 | 1,381,921,734 | 576,482,746 |
| 2022 | 201,769,368 | 892,111,204 | 3,078,470,847 |
| 2023 | 668,169,342 | 5,791,720,155 | 1,703,179,440 |
| 2024 | 613,154,940 | 1,894,317,835 | 812,528,744 |
| **மொத்தம்** | **3,864,473,174** | **11,710,799,425** | **6,170,661,777** |
| | 18% | 54% | 28% |

| | | | |
|---|---|---|---|
| (iii) | 2024 திசெம்பர் 31 திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்றில் பிரகாரம் பொருளாதார சேவைக் கட்டணம், தேசிய பாதுகாப்பு சேவை வரி, விற்பனை வரி, கடன் மீள்செலுத்தும் வரி, தேசத்தை கட்டியெழுப்பும் வரி – சேவை, தேசத்தை கட்டியெழுப்பும் வரி – உற்பத்தி மற்றும் பணம் அனுப்பும் கட்டணங்களிற்குரிய வருமானம் சேகரித்தல் நிலுவை வருமானம் மீதான கூற்றின் பிரகாரம் அறவிடப்பட்ட நிலுவை வருமானம் சமமாக வேண்டிய போதும் அவற்றிற்கிடையே கூட்டுத் தொகை ரூபா 1,686,796,442 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | பதில் வழங்கப்படவில்லை. | வரி தொடர்பான அறிக்கையை சரியாக தொகுதியினூடாக உருவாகுவதாக முகாமைத்துவம் உறுதி செய்ய வேண்டும். |
| (iv) | 2024 திசெம்பர் 31 திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிலுவை வருமானம் மீதான கூற்றில் பிரகாரம் எந்தவித அறவீடுமன்றி 10.02.07.00 முத்திரை வரி வருமான தலைப்பின் கீழ் ரூபா | நிலுவை தொகை தொடர்பாக வரி செலுத்துனரினால் உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையிடொன்றை சமர்ப்பித்துள்ளதுடன் உச்ச நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வரும் விடயம் திணைக்கள கட்டுப்பாட்டிற்கு | நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வரும் வழக்கு நடவடிக்கைக்கு தேவையான தகவல்களை வினைத்திறனாக |

| | | | |
|---|---|---|---|
| | 14,599,086 மற்றும் 10.02.08.00 பற்று வரி வருமான தலைப்பின் கீழ் ரூபா 2,215,581,368 ஆன மீதியும் 2019 ஆண்டு முதல் நிலவுவதாக அவதானிக்கப்பட்டது. | அப்பாற்பட்டு காணப்படுவதனால் இதுவரை எந்தவித அறவீடும் இடம்பெறவில்லையென. | வழங்கி இறுதித் தீர்ப்பின் மீது காலரீதியாக செயற்பட வேண்டுமென. |

**3.2.3 வருமான மதிப்பிடல்**

| | | | |
|---|---|---|---|
| (அ) | 2024 ஆண்டிற்குரிய நிதி வருமான மதிப்பீடு ரூபா 2,740,442,500,000 ஆனதுடன் ஆண்டினுள்ள சேகரித்த உண்மை வருமானம் ரூபா 2,605,027,061,526 ஆனதில் 05 சதவீதம் அதாவது ரூபா 135,415,438,474 ஆன வருமான சேகரிப்பு பற்றாக்குறை ஆனது. அங்கு பொருண்மையாக அவதானிக்கப்பட்ட 8 வருமானக் குறியீடுகளிற்கு உரியதாக வருமானம் சேகரிக்கும் மிகை ரூபா 89,965,681,652 ஆனதுடன் 06 வருமானக் குறியீடுகளிற்கு உரியதாக வருமானம் சேகரிக்கும் பற்றாக்குறை ரூபா 160,424,351,241 ஆனது. அந்த மிகை மற்றும் பற்றாக்குறை முறையே ஆரம்ப வருமான மதிப்பீட்டின் சதவீதமாக 17 - 625 வரை மற்றும் சதவீதமாக 13 - 99 வரையான வீச்சளவில் பரவிக் காணப்பட்டது. | 2024 ஆண்டிற்குரிய வருமான சேரிக்கும் இலக்கு 95 சதவீத்தால் அடைந்து கொள்ள முடியுமாகவுள்ளதுடன் ஆரம்ப வருமான மதிப்பீட்டிற்குரிய வருமானம் சேகரிக்கும் பற்றாக்குறை மற்றும் மிகை அறிக்கையிடப்படுவதன் மீது வரி கட்டுப்பாட்டு தீர்மானம் மற்றும் நாட்டில் பலதரப்பட்ட துறைகளில் ஏற்பாட்ட பாதகமான மற்றும் சாதகமான மாற்றங்கள் தாக்கம் செலுத்தியுள்ளதென. | வருடாந்த வருமான இலக்கை சரியாக அமைத்தல் மற்றும் அவற்றை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மூலதன இலாப வரிக்குரிய வருமான சேகரிப்பின் பற்றாக்குறை 63 சதவீதமானது. திணைக்களத்திள் மூலதன இலாப வரிக்காக தனியான கிளையொன்று வேறாக அமைக்கப்பட்டிருக்கும் பின்னனியில் மற்றும் இலக்கம் 2376/25 கொண்ட மற்றும் 2024 மார்ச் 21 திகதிய அதிவிஷேட வர்த்தமானி மூலம் பதிவாளர் நாயகத் திணைக்களத்தில் பதிவாளர் நாயகத்தினால் ஒப்படைப்பு | மூலதன வரிக்காக மீண்டும் பதிவு செய்யாது செலுத்தப்பட்ட கொடுப்பனவு, வருமான வரி வருமானத்தினுள் உள்ளடங்கியுள்ளதாக இனங்கண்டுள்ளதால் மூலதன இலாப வரியாக அறிக்கையிடப்பட்டுள்ளது வரி வருமானத்தை விட குறைந்த பெறுமானமென. | மதிப்பிடப்பட்ட வருமானத்தை சேகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளடங்களாக பதிவு செய்த காணி மற்றும் ஆதனங்களின் சொந்தம் அல்லது உரிமை பற்றிய தகவல்கள் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு வழங்க ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ள போதும் இந்த மூலதன இலாப வரிக்குரிய வருமான சேகரிப்பில் பற்றாக்குறை காணப்பட்டது. | | |
| (இ) | நேர் மற்றும் நேரில் வரிக்கிடையே பொருத்தமான கலவையாக கருதப்படும் 60:40 விகிதத்தை அடைந்து கொள்ள தொடர்ந்தும் திணைக்களம் செயற்பட வேண்டுமென அவதானிக்கப்பட்டது. | 2024 ஆண்டில் பெறுமதி சேர்க்கப்பட்ட வரிக்கு மேற்கொள்ளப்பட்ட கொள்கை ரீதியான மாற்றங்கள் மீது நேரில் வரி வருமானம் அதிகரித்ததை போன்றே வருமான வரிக்காக மாற்றமொன்று இடம்பெறாது காணப்பட்டமை இந்த விகிதத்திற்கு காரணமாக அமைந்துள்ளதாகவும் எதிர்காலத்தில் மேலும் அரசின் எதிர்பார்த்த இலக்குகளை அடைந்து கொள்ள திணைக்களம் அர்பனிப்புடன் நடவடிக்கை எடுப்பதென. | இலங்கை கொள்கை திட்டமிடளார்களின் இலக்கை அடைந்து கொள்ள வேண்டும். |

### 3.2.4 TIN இலக்கம் 12400xxxx தொடர்பாக Legacy தொகுதியில் 2024 ஜுன் 30 திகதி நிலுவை வரி பரீட்சிப்பு

| | | | |
|---|---|---|---|
| (அ) | 2024 ஜுன் 30 திகதி காணப்படும் நிலுவை வரி பரீட்சிப்பிற்காக தெரிவு செய்யப்பட்ட மாதிரிகள் பிரகாரம் TIN இலக்கம் 12400xxxx கொண்ட வரி செலுத்துனரின் நிலுவை வரி விரிவாக பரீட்சிக்கப்பட்டது. மேற்படி நிலுவை வரி அறிக்கை பிரகாரம் மொத்த நிலுவை வரியாக NBT, PAYE மற்றும் CIT இற்காக முறையே ரூபா 309,300 தொகை, ரூபா 36,655 தொகை, மற்றும் ரூபா 1,320 தொகையுமாக காணப்பட்டன. எனினும் Legacy கணனித் தொகுதியை பரீட்சிக்கும் பொது அதற்கு மேலதிகமாக PAYE,CIT மற்றும் VAT இற்காக முறையே ரூபா 100,877 தொகை, ரூபா | Legacy பிரிவிற்குரியதாக NBT, PAYE மற்றும் CIT 2024 திகதி 31 திகதிக்கு தீர்த்து வைக்கப்பட்டுள்ளதுடன், VAT நிலுவை வரி DTRU நிலுவை வரி அறிக்கைக்கு உரியதாகும். அது சரி செய்யப்பட்டுள்ளதென. | வரி பொறுப்புக்கள் உரியவாறு பிரதிபழிக்கும் வகையில் தொகுதியை நாளாதுவரையாக பேணிக் கொள்ள உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 30,267 தொகை மற்றும் ரூபா 2,837,222 தொகை நிலுவை வரி காணப்பட்டது. அதன் பிரகாரம் 2024 ஜுன் 30 திகதி நிலுவை வரி அறிக்கை ரூபா 2,930,391 இனால் குறைவாக கணிப்பிடப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | நிலுவை வரி அறவிடுவதற்காக வரி செலுத்தினரிற்கு 2022 மார்ச் 22 திகதிய நிலுவை வரி அறவிடும் அறிக்கை ( 101 P (2) 1 (A) DTRU) விநியோகிக்கப்பட்டு இருந்ததுடன் அறிக்கையின் நிலுவை வரியாக ரூபா 5,020,782 காணப்படுவதுடன் அந்த அறிக்கைக்கு 2022 மார்ச் 30 திகதிய வரி செலுத்துனரினால் எதிர்ப்பு (Objection) கடிதத்தை கோவையிட்டிருந்த போதும், உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால் ரூபா 2,837,222 நிலுவை வரி செலுத்த வேண்டுமென உறுதி செய்யும் கடிதம் 2024 மே 20 ஆம் திகதி அதாவது எதிர்ப்பு (Objection) கடிதம் கிடைத்த திகதி முதல் 02 ஆண்டுகளை விட அதிக கால எல்லையின் பின்னர் வரி செலுத்துனரிற்கு விநியோகிக்கப்பட்டிருந்தது. | VAT வரி கால எல்லையான 03093 மற்றும் 03092 குறித்த நிலுவை வரி 03062 மற்றும் 03091 மீள் கொடுப்பனவுகளில் இருந்து பதலீடு செய்யுமாறு வரி செலுத்துனர் அறிவித்துள்ள போதும் 2022 ஏப்ரல் 05 ஆம் திகதி அந்த கோரிக்கைக்கு மின்அஞ்சல் மூலம் பதில் அறிவித்து, அவ்வாறான மீள் செலுத்தல்கள் இல்லாததால் சர்ச்சைக்குள்ளான வரியை செலுத்துமாறு 2024 மே 05 ஆம் திகதி அறிவித்ததென. | வரி பொறுப்புக்கள் உரியவாறு பிரதிபழிக்கும் வகையில் தொகுதியை நாளாதுவரையாக பேணிக் கொள்ள, நிலுவை வரியை அறவிட உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | Legacy கணனித் தொகுதியில் மேற்படி வரி செலுத்துனரிற்கு VAT இற்காக 03062, 03091, 06031, 06033 மற்றும் 12030 ஆகிய வரி காலப் பகுதிக்காக ரூபா 3,698,391 ஆன வரி மீள் செலுத்தும் (Refund) மீதியை சமாதானப்படுத்தி வரி மீள் செலுத்தும் அறிவித்தல் (Refund Notice) தொகுதியினூடாக அச்சிட்டுள்ளதாக குறிப்பிடாததுடன் மேற்படி வரி கால எல்லைக்காக | 03062 மற்றும் 03091 வரி காலப் பகுதிக்குரிய உள்ளீட்டு வரி சரியானதாக இல்லாததால் மீள் செலுத்துதல் இல்லை. 06033 இற்காக கூடுதல் செலுத்துதல் மற்றும் 06031 மற்றும் 12030 இற்காகவும் மீள் செலுத்துதல் இல்லையென. | வரி பொறுப்பு/ மீள் செலுத்தல் உரியவாறு பிரதிபழிக்கும் வகையில் தொகுதியை நாளாதுவரையாக பேணிக் கொள்ள, நிலுவை வரியை அறவிட/மீள் செலுத்தலை கால ரீதியாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உண்மையாக காணப்படும் மீள் செலுத்தல்களை ஒப்பாய்வு செய்து அதற்குரிய Legacy கணனித் தொகுதியை 2024 திசெம்பர் 31 திகதிக்கு நாளாதுவரை ஆக்கியிருக்கவில்லையென அவதானிக்கப்பட்டது. | | |

**3.3 செலவின முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் / கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 3.3.1 | மீண்டுவரும் செலவு விடயங்கள் 11 இற்காக ரூபா 330,930,000 ஆன தேறிய நிதிஏற்பாட்டை பெற்றிருந்த போதும் ரூபா 201,100,797 இனை பயன்படுத்துதல் மற்றும் பொறுப்புக்களிற்காக ரூபா 7,439,379 நிதிஏற்பாட்டை கழித்த பின்னர் ரூபா 122,389,824 மீதியானதுடன் அது நிதிஏற்பாட்டின் 15 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான வீச்சளவாகும். | தேசிய பாதீட்டு சுற்றறிக்கை இலக்கம் 01/2024 கீழ் மேலதிக நேரம், வெளிநாட்டு பயண மட்டுப்பாடு, காகிதாதி கொள்வனவு மற்றும் இருப்பக் கட்டுப்பாடு, புகையிரத அனுமதிப் பத்திர கோரிக்கை குறைந்தமை, எரிபொருள் பாவனை குறைந்தமை, உத்தியோகத்தர் வெற்றிடம் காணப்பட்டமை, பத்திரிகை அறவித்தலிற்கு பிரசுறித்தல் குறைந்தமை, நிகழ்சித் திட்டங்கள் நிகழ் நிலைப்படுத்தல், உள்நாட்டு பயிற்சி நிகழ்ச்சித் திட்ட மட்டுப்பாடு, காப்புறுதி உடன்படிக்கை பட்டியல்கள் சமர்ப்பிக்க தாமதம், அரச ஊழியர்களிற்கான ஆதனக் கடன் புதிதாக வழங்குதல் நிறுத்தப்பட்டமை மற்றும் கடன் பெற்ற உத்தியோகத்தர்கள் அரச பங்களிப்பு தொகையை மாத்திரம் செலுத்தியமை போன்ற காரணங்களால் 11 மீண்டுவரும் செலவு விடயங்களின் மொத்த தேறிய நிதிஏற்பாடும் பயன்படுத்தப்படாது எஞ்சியுள்ளமை மற்றும் பொறுப்புக்களிற்கு கழித்த பின்னர் சேமிப்பு நிதிஏற்பாட்டின் 15 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான வீச்சளவில் காணப்படுவதென. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நிதிஏற்பாட்டை பயன்படுத்த முகாமை செய்து கொள்ள வேண்டும். |
| 3.3.2 | மூலதன செலவு விடயங்கள் 6 இற்காக ரூபா 4,845,700,000 ஆன தேறிய நிதிஏற்பாட்டை பெற்றிருந்த போதும் ரூபா 3,108,675,656 மாத்திரம் | பொறியியலாளர் ஒருவரின் சேவையை பெற்றுக் கொள்ள முடியாது போனதால் கட்டிட நவீனமயமாக்களிற்காக ஒதுக்கிய நிதிஏற்பாடு பயன்படாமை, மற்றும் | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நிதிஏற்பாட்டை பயன்படுத்த முகாமை செய்து கொள்ள |

| | | | |
|---|---|---|---|
| | பயன்படுத்தப்பட்ட காரணத்தால் ரூபா 1,737,024,344 ஆன மீதியொன்றானதுடன் அது நிதிஏற்பாட்டின் 17 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான வீச்சளவாகும். | மதிப்பீட்டு பெறுமதியை விட குறைந்த பெறுமதிக்கு ஒப்பந்த வழங்கல் மேற்கொண்டமை, காகிதாதி பயன்பாடு குறைந்தமை மற்றும் தபால் செலவு குறைவடைந்தமை, 2024 ஆண்டில் ஊக்குவிப்பு படிகள் இலக்கை நிறைவு செய்ய முன்னுரிமை வழங்க நேரிட்டமை மற்றும் நதி அமைச்சினால் செலவினத்தை மட்டுப்படுத்தியமை போன்ற காரணங்களினால் 6 மூலதன செலவு விடயங்களில் மொத்த தேறிய நிதிஏற்பாடும் பயன்படுத்தப்படாது எஞ்சியுள்ளமை மற்றும் சேமிப்பு நிதிஏற்பாட்டின் 17 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான வீச்சளவில் காணப்படுவதென. | வேண்டும். |
| 3.3.3 | தலைமை அலுவலகத்தில் மற்றும் பிராந்திய அலுவலகங்களில் கட்டிடம் மற்றும் நிர்மாணப் பணிகளிற்காக (செலவு விடயம் 2001(033) மற்றும் 2001(034)) இற்கு ரூபா 80,000,000 ஆன நிதிஏற்பாடு பெறப்பட்டிருந்த போதும் மீளர்யவாண்டு இறுதியளவில் அந்த நிர்மாணப் பணிகள் / நவீனமயமாக்கல் பணிகளிற்காக பொறியியலாளர் ஒருவரின் சேவையை பெற்றுக் கொள்ள முடியாததன் காரணமாக அந்த நிதிஏற்பாடுகளில் 91 சதவீதம் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது. | தலைமை அலுவலகத்தில் மற்றும் பிராந்திய அலுவலகங்களில் கட்டிட நிர்மாணங்களிற்காக பொறியியலாளர் ஒருவரின் சேவையை பெற்றுக் கொள்ள முடியாது போனதால் தேறிய நிதிஏற்பாடும் பயன்படுத்தப்படாது எஞ்சியுள்ளமை மற்றும் 91 சதவீத நிதிஏற்பாடு எஞ்சியதுடன் எதிர்காலத்தில் பொறியியலாளர் ஒருவரை இணைத்துக் கொண்டு தேவையான நிர்மாண / நவீனமயமாக்கல் பணிகளை மேற்கொள்ள எதிர்பார்ப்பதென. | பொறியியலாளர் ஒருவரின் சேவையை விரைவில் பெற்றுக் கொள்ள வெண்டியதுடன் நிதிஏற்பாட்டு பயன்பாட்டை முகாமை செய்து கொள்ள வேண்டும். |
| 3.3.4 | செலவின தலைப்பு 246 கீழ் மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 9,984,108,000 ஆனதுடன், அதில் ரூபா 1,965,161,431 எஞ்சியமை அவதானிக்கப்பட்டதுடன் அது மொத்த தேறிய நிதிஏற்பாட்டின் சதவீதமாக 20 சதவீதமானது. | தேசிய பாதீட்டு சுற்றறிக்கை இலக்கம் 01/2024 கீழ் மேலதிக நேரம், வெளிநாட்டு படிகள், காகிதாதி கொள்வனவு மற்றும் இருப்புக் கட்டுப்பாடு, புகையிரத அனுமதிப் பத்திர கோரிக்கை குறைந்தமை, எரிபொருள் பாவனை குறைந்தமை, உத்தியோகத்தர் வெற்றிடம் காணப்பட்டமை, பத்திரிகை அறவித்தலிற்கு பிரசுறித்தல் குறைந்தமை, நிகழ்சித் திட்டங்கள் நிகழ் நிலைப்படுத்தல், உள்நாட்டு பயிற்சி நிகழ்ச்சித் திட்ட மட்டுப்பாடு, காப்புறுதி | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நிதிஏற்பாட்டை பயன்படுத்த முகாமை செய்து கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | உடன்படிக்கை பட்டியல்கள் சமர்ப்பிக்க தாமதம், அரச ஊழியர்களிற்கான ஆதனக் கடன் புதிதாக வழங்குதல் நிறுத்தப்பட்டமை மற்றும் கடன் பெற்ற உத்தியோகத்தர்கள் அரச பங்களிப்பு தொகையை மாத்திரம் செலுத்தியமை மற்றும் கட்டிட நவீனமயமாக்களிற்கு ஒதுக்கிய நிதிஏற்பாடு பயன்படாமை மற்றும் மதிப்பீட்டு பெறுமதியை விட குறைந்த பெறுமதிக்கு ஒப்பந்தம் ஒப்படைக்கப்பட்டை, காகிதாதி பயன்படு குறைந்தமை மற்றும் தபால் செலவு குறைந்தமை போன்ற காரணங்களால் நிதிஏற்பாடு எஞ்சியுள்ளதென. | |
| 3.3.5 | 1201 காகிதாதிகள் மற்றும் அலுவலக தேவைப்பாட்டு செலவு விடயத்திற்குரியதாக நி.பி 66 மற்றும் குறைநிரப்பு மதிப்பீட்டின் கீழ் ரூபா 66,000,000 ஆன மேலதிக நிதிஏற்பாட்டை பெற்றிருந்த போதும் ரூபா 103,112,129 ஆன நிதிஏற்பாட்டை பயன்படுத்தாததால் மேலதிக நிதிஏற்பாட்டை பெற்றுக் கொள்ள காணப்படும் நியதிச்சட்ட வசதியை சரியாக பயன்படுத்தவில்லை எனவும் அது நிதிஏற்பாட்டு முகாமைத்துவத்தின் பலவீனமாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | வயது 18 வருடங்களை விட அதிகாமான நபர்களிற்கு வரி செலுத்துனரை இனங்காணும் இலக்கத்தை மற்றும் அதற்குரிய சான்றிதழை விநியோகிக்கும் நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்த ஒதுக்கிய நிதிஏற்பாடு போதாததன் காரணமாக மேலதின நிதிஏற்பாடு கோரப்பட்ட போதும் 2024 ஜுலை 24 திகதி முதல் Bulk Registration கீழ் பதிவு செய்வது தொடர்பாக TIN சான்றிதழை தபால் மூலம் அனுப்புவதை நிறுத்தியதன் மீது அதற்காகவே காகிதாதிகள் மற்றும் டோனர் கொள்வனவு செய்தமை, கடிதக் உறைகளை அச்சிடப்படாமை அதற்காக மதிப்பிடப்பட்ட சுமார் ரூபா 75 மில்லியன் நிதிஏற்பாடு எஞ்சியுள்ளதென. | மேலதிக நிதிஏற்பாட்டை பெற்றுக் கொள்ளும் போது, அதற்காக சரியான மதிப்பீட்டை தயாரிக்க வேண்டியதுடன், அதன் பயன்பாட்டை முகாமைத்துவம் செய்து கொள்ள வேண்டும். |
| 3.3.6 | செலவின தலைப்பு 246 கீழ் ஆரம்ப செலவு மதிப்பீடு மற்றும் திருத்திய செலவின மதிப்பீட்டை பரீட்சிக்கும் போது 12 செலவின விடயங்களிற்குரிய கூட்டுத் தொகை ரூபா 768,306,000 இல் 20 சதவீதம் முதல் 252 சதவீத வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டன. | ஆரம்ப செலவு மதிப்பீடு மற்றும் திருத்திய செலவின மதிப்பீட்டை பரீட்சிக்கும் போது 12 செலவின விடயங்களிற்குரியதாக 20 சதவீதம் முதல் 252 சதவீதம் வரையான வித்தியாசத்திற்கு காரணங்கள் நிதிக்கூற்றுக்கள் 2024 இன் ஏசீஏ-2(iii) கீழ் காண்பித்துள்ளதென. | செலவின மதிப்பீட்டை மிகவும் சரியான விதத்தில் தயாரிக்க வேண்டும். |

### 3.4 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளிற்குட்படல்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் / கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 3.4.1 | 2024 ஆண்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கும் புதிய CIGAS இணைய உள்ளீட்டினாலும் உருவாக்கப்பட்ட திரண்ட கடப்பாடு மற்றும் பொறுப்பு அறிக்கை பிரகாரம் 2024 திசெம்பர் 31 திகதிக்கு கடப்பாடு மற்றும் பொறுப்பு அளவு ரூபா 87,378,394 ஆனதுடன் அத்திகதியில் பொறுப்புக்கள் மீதி ரூபா 1,559,039 இனால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | கடப்பாடு மற்றும் பொறுப்பு அறிக்கை பிரகாரம் ரூபா 87,378,394 ஆன பொறுப்பு பெறுமதியொன்று பதியப்பட்டு இருந்ததுடன் அந்த அறிக்கையினுள் உள்ளடங்கிய பொறுப்புக்கள் மேலதிக நேரத்திற்காக (2024) 14 செலவின உருப்படிகளிற்குரியதாக கூட்டுப் பெறுமதியான ரூபா 1,665,857 ஆன கொடுப்பனவு செய்வது தொடர்பான பெறுமதி மற்றும் பொறுப்பு இலக்கமும் உள்ளடங்களாக விபரம் குறிப்பிடப்பட்டுள்ளதென. | கடப்பாடு மற்றும் பொறுப்புக்கள் மீதான கூற்றை சரியாக தயாரிக்க வேண்டும். |
| 3.4.2 | 2024 ஆண்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கும் திரண்ட கடப்பாடு மற்றும் பொறுப்புக்கள் அறிக்கை பிரகாரம் 2024 திசெம்பர் 31 திகதியன்று மூன்று கொடுப்பனவு உருப்படிகளிற்குரிய கூட்டுப் பெறுமதியான ரூபா 781,703 பொறுப்பாக இனங்காண வேண்டிய பெறுமதியை விட கூடுதலாக காட்டப்பட்டிருந்ததுடன் ஒரு கொடுப்பனவு உருப்படிக்குரிய கூட்டுப் பெறுமதியான ரூபா 1,000,000 பொறுப்பாக இனங்காண வேண்டிய பெறுமதியை விட குறைவாக குறிப்பிடப்பட்டிருந்தது. | 2024 ஆண்டு நிதிக்கூற்றுக்களில் 2024 திசெம்பர் 31 திகதிக்கு பொறுப்பாக தவறாக இனங்காணப்பட்ட மீதி உள்ளடக்கப்பட்டதால் சுமாராக ரூபா 72,176 பெறுமதி கூடுதலாக குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் 07 கொடுப்பனவு உருப்படிகளிற்குரியதாக பொறுப்பாக இனங்கண்டுள்ள பெறுமதியான ரூபா 7,486,969 மற்றும் பொறுப்பாக இனங்காண வேண்டிய பெறுமதியான ரூபா 7,394,792 தொகையை வெவ் வேறாக இனங்காண முடியுமென. | கடப்பாடு மற்றும் பொறுப்புக்கள் மீதான கூற்றை சரியாக தயாரிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். |
| 3.4.3 | 2024 திசெம்பர் 31 திகதியன்று நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் திரண்ட பொறுப்புக்கள் மீதான கூற்றில் குறிப்பிடப்படும் மீதிகளிலிருந்து 2025 பெப்ரவரி 28 திகதி வரை தீர்க்கப்படாத கடப்பாடு மற்றும் பொறுப்புக்களின் அளவு ரூபா 18,313,110 ஆனதுடன் அது சதவீதமாக 21 சதவீதமானது. | பதில் அளிக்கப்படும் சந்தர்ப்பத்தில் 2024 அண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 9,350 ஆன நி.பி. அங்கீகாரம் கிடைக்கும் வரை நிறுத்தி வைத்த சில பயணப் செலவுகள் தவிர ஏனை கிடைத்த அனைத்து வவுசர்களிற்காகவும் கொடுப்பனவு செய்துள்ளதாகவும் கணக்காய்வின் போது இனங்கண்டிருந்த 2025 பெப்ரவரி 28 திகதியவிலும் ரூபா 19,669,126 ஆன தீர்க்கப்படாத | தீர்க்கப்படாத கடப்பாடுகளை விரைவில் தீர்த்து நிறைவு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கடப்பாடு மற்றும் பொறுப்புக்களிற்கு இடையே 2025 பெப்ரவரி மாதம் வரை செலுத்தி நிறைவு செய்திருந்த கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட பதிவேட்டில் 45 கொடுப்பனவு உருப்படிகளிற்குரியதாக கூட்டுப் பெறுமதியான ரூபா 19,920,533 ஆன கொடுப்பனவிற்காக குறிப்பிடப்படவில்லையென. | |
| 3.4.4 | திணைக்களத்தினால் நிதிக்கூற்றுக்களில் கடப்பாடு மற்றும் பொறுப்புக்கள் மீதான கூற்றை தயாரிக்கும் போது 2017 ஏப்ரல் 27 திகதிய அரச கணக்குகள் சுற்றறிக்கை 255/2017 பிரகாரம் நி.பி. 94(2) மற்றும் (3) பிரகாரம் பொறுப்புக்களிற்குட்பட்ட கடப்பாட்டு கூற்றை தயாரித்துள்ளதுடன் 2024 திசெம்பர் 31 திகதிக்கு கடப்பாட்டு பெறுமதி ரூபா 209,965,918 ஆனது. எவ்வாறாயினும் நி.பி.94(3) பிரகாரம் மொத்த கிரய மதிப்பீட்டை வெவ்வேறாக இனங்கண்டு கணக்கீடு செய்திருக்கவில்லை. | சனவரி 01 முதல் திசெம்பர் 31 திகதி வரையான கிரய மதிப்பீட்டில் உள்ளடங்கும் சேவை உடன்படிக்கைகளில் இந்த ஆண்டு ஆரம்பிக்கும் ஒப்பந்தங்கள் அடுத்த ஆண்டில் செயற்படுத்தப்படும் போது, அந்த சேவை உடன்படிக்கைகளில் அடுத்த ஆண்டிற்கான காலஎல்லை குறிப்பிடப்படும் கட்டண கடப்பாடாக குறிப்பிட்டுள்ளதாக மற்றும் இற்கு அந்த கடப்பாட்டு பெறுமதி கிரய மதிப்பீட்டை விஞ்சியுள்ளதென. | கடப்பாடு மற்றும் பொறுப்புக்கள் மீதான மொத்த கிரய மதிப்பீட்டை வெவ் வெறாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| 3.4.5 | 2024 திசெம்பர் 31 திகதி திணைக்கள 246-01-01-1303 செலவின விடயத்திற்கு உரியதாக நி.பி.94(2) இல் குறிப்பிடப்படும் நிதிஏற்பாட்டின் பிரகாரம் உட்பட முடியுமான உச்ச கடப்பாட்டு எல்லை ரூபா 10,321,000 ஆனதுடன் அத்திகதி கடப்பர்டு மீதான கூற்றில் கடப்பாடு மற்றும் பொறுப்பு பெறுமதி பிரகாரம் மீதி ரூபா 43,352,396 ஆனதில் ஆண்டினுள் உட்பட முடியுமான உச்ச கடப்பாட்டு எல்லையை விஞ்சி ரூபா 33,031,396 ஆன பொறுக்புக்களிற்கு உட்பட்டிருந்தது. | 2023 ஆண்டின் செலவு அதன் போது கைச்சாத்திட்டிருந்த உடன்படிக்கைகள் பிரகாரம் கவனத்திற் கொண்டு 2024 மதிப்பீட்டிற்காக பராமரிப்பு செலவு உட்படுத்தப்பட்ட போதும், 2024 ஆண்டில் எதிர்பாராத விதமாக பராமரிப்பு செலவு அதிகரித்தன் மீது அதற்குரிய உடன்படிக்கைகளிற்கு உட்படும் போது செலவுகளும் அதிகரித்ததாகவும் பராமரிப்பு செலவுகள் எதிர்வு கூறிய செலவுகளை விட அதிகரித்ததன் மீது 2024 ஆண்டில் உடன்பட்ட கடப்பாடு அதிகரித்ததால் அந்த நிலைமை ஏற்பட்டதாகவும். 2024 ஆண்டிற்குரிய பொறுப்புக்களின் கூட்டத் தொகை மதிப்பிடப்பட்ட செலவுகளை விஞ்சவில்லை எனவும் எதிர்காலத்தில் அதனை சரிசெய்து கொள்ள தேவையான நடவடிக்கை எடுப்பதென. | நிதிப்பிரமாணம் பிரகாரம் உட்பட முடியுமான உச்ச கடப்பாட்டு எல்லையை விஞ்சக் கூடாது. |

### 3.5 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் / கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ள வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக உறுதி செய்ய வேண்டியிருந்த போதும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் / கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 3.5.1 | வருடாந்த மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்களை தேவையான நேரத்தினுள் தயாரிப்பதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் உறுதி செய்ய வேண்டியதுடன், அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படும் நிறுவனத்திற்குரிய வருடாந்த அறிக்கையை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்பேற்க வேண்டிய போதும், அறிக்கையின் 4.3 பந்தியில் குறிப்பிடப்படும் கணக்காய்வு அவதானிப்புக்கள் காரணமாக அந்த தேவைப்பாட்டை காலரீதியாக நிறைவேற்றப்பட்டு இருக்கவில்லை. | 2024 வருடாந்த செயலாற்றுகை அறிக்கை அரச நிதி திணைக்களத்தின் வெளியிடப்பட்ட வழிகாட்டி இலக்கம் 14 இல் குறிப்பிடப்படும் படிவத்தில் பிரகாரம் சமர்ப்பிக்கவில்லை எனவும், எதிர்காலத்தில் அவ்வாறு இடம்பெறாதிருக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள குறித்த உத்தியோகத்தர்களை அறிவுருத்தியதாகவும் 2020 ஆகஸ்ட் 28 திகதிய 2/2020 கொண்ட அரச நிதச்சுற்றிக்கையின் 10.2 பந்தி பிரகாரம் அரச நிதித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வழிகாட்டி இலக்கம் 14 இல் குறிப்பிடப்படும் படிவம் பிரகாரம் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை 2025 ஆண்டிற்காக சரியான படிவத்தின் பிரகாரம் சமர்ப்பிப்பதென. | வருடாந்த மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்களை தேவையான நேரத்தினுள் தயாரித்தல் மற்றும் வருடாந்த அறிக்கையை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல் காலரீதியாக இடம்பெறுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் பொறுப்பேற்க வேண்டும். |

### 3.6 சட்டம், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

மாதிரி கணக்காய்வு பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்ட சட்டம், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு விபரிக்கப்படுகின்றன.

| | அவதானிப்பு சட்டம், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | பெறுமதி ரூபா | இணக்கமின்மை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் /கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| 3.6.1 | தாபன விதிக் கோவையின் XXIV அத்தியாயத்தின் 3.7 பிரிவு | 141,069 | கடன் தொகையை வழங்கிய மாதம் முதல் மீள் அறவிட வேண்டிய வேண்டியதுடன் கடன் தொகையை செலுத்தும் | ரூபா 141,069 ஆன கடன் மீதியை பல வருடங்களாக அறவிட | தாபன விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | நாளிலிருந்து உரிய அளவில் வட்டியை அறவிட வேண்டிய போதும் சம்பள இலக்கம் 5204 உடைய உத்தியோகத்தர் பெற்றுக் கொண்ட இடர் கடன் மீதியிலிருந்து அறவிட வேண்டிய கடன் மீதியை பல ஆண்டுகளாக இது வரை அறவிட நடவடிககை எடுத்திருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்கப்படவில்லை யென. | குறித்த கடன் மீதியை விரைவில் அறவிட வேண்டும். |
| 3.6.2 | தாபன விதிக் கோவையின் XXIV அத்தியாயத்தின் 4.4 பிரிவு | 414,014 | பெற்றுக் கொண்ட கடனை முழுமையாக அறவிட முன்னர் உத்தியோகத்தர் ஒருவர் மரணித்தால், அவரிடமிருந்து அரசிற்கு அறவிட வேண்டிய அனைத்து கடன் தொகையையும், அவரின் வாரிசுகளிற்கு செலுத்தவுள்ள எந்தவொரு நிதியிலிருந்தும் கழித்துக் கொள்ளுமாறு ஓய்வூதிய பணிப்பாளர் நாயத்திடம் உடனடியாக கோர வேண்டுமென அறிவித்துள்ள போதும் மரணித்த இரண்டு உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிட வேண்டிய முறையே ஆண்டு 10 - 20 இடைப்பட்ட மற்றும் ஆண்டு 01 - 03 ஆன இதுவரை அறவிட இயலாது போன கடன் மீதிகள் காணப்பட்டன. | ரூபா 222,500 தொகையை மரண பணிக்கொடை தொகையிலிருந்து அறிவடவும், ரூபா 191,514 தொகையை அக்ரஹார காப்புறுதிலிருந்து அறிவடவும நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளதென. | தாபன விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து குறித்த கடன் மீதியை விரைவில் அறவிட வேண்டும். |
| 3.6.3 | தாபன விதிக் கோவையின் XXIV அத்தியாயத்தின் 4.2.2 , 4.2.4, 4.2.5, 4.5, 4.6, | 146,380 | ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து அறவிட வேண்டிய ஆண்டு 03 - 05 இடையிலான கடன் மீதி இதுவரை | ரூபா 146,380 ஆன தொகையை அறவிட ஓய்வூதிய உரிமையை பெற்றுக் கொள்ள உரிய | தாபன விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து குறித்த கடன் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மற்றும் 6.3 பிரிவுகள் | | தீர்க்கப்படவில்லை. | நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதென. | மீதியை விரைவில் அறவிட வேண்டும். |
| | | 126,291 | 2024 ஆண்டு அரச உத்தியோகத்தர் ஒருவரின் முற்பண “பீ”கணக்கு இணக்கக் கூற்றின் பிரகாரம் 8093 சம்பள இலக்க உத்தியோகத்தரின் சேவையை முடிவுறுத்தி 05 ஆண்டுகள் கடந்துள்ள போதும் கடன் மீதியை, இதுவரை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ரூபா 126,291 தொகையை பிணையாளியின் மாதாந்தம் ரூபா 2,200 தவணைகளாக அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்படுவதென. | தாபன விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து குறித்த கடன் மீதியை விரைவில் அறவிட வேண்டும். |
| 3.6.4 | தாபன விதிக் கோவையின் XXIV அத்தியாயத்தின் 4.5 மற்றும் 4.6 பிரிவு | 1,836,557 | பதவியை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்களின் உரிய கடன் மீதியை விரைவில் தீர்க்க வேண்டிய போதும் பதவியை விட்டுச் சொன்ற 12 உத்தியோகத்தர்கள் இட மிருந்து அறவிட வேண்டிய ஆண்டு 01 முதல் 20 வரையான கால வீச்சளவில் காணப்படும் கடன் மீதிகளை தீர்த்திருக்கவில்லை. | நான்கு உத்தியோகத்தர்க ளிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 757,142 தொகையை அறவிடுவதற்கு உரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதுடன், ஐந்து உத்தியோகத்தர்க ளிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 640,245 தொகை பிணையாளர்களிடம ிருந்து மற்றும் எஞ்சிய இரண்டு உத்தியோகத்தர்க ளிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 439,170 தொகையை அந்த உத்தியோகத்தர்க ளின் கோரிக்கையின் மீது மீண்டும் பணியில் அமர்த்துவதனை கருதிக் கொளவதன் மூல மும் அறவிடுவதற்கு | தாபன விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து குறித்த கடன் மீதியை விரைவில் அறவிட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | |
| | | 545,715 | 2024 ஆண்டில் பதவியை விட்டுச் சென்ற உத்தியோகத்தரின் கடன் மீதிகள் தீர்க்கப்படாது காணப்படுவதுடன் அது 03 முதல் 06 மாதகால வீச்சளவில் காணப்பட்டது. | நான்கு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 545,715 தொகையை அறவிடுவது தொடர்பாக அந்த உத்தியோகத்தர்களை அறிவூறுத்துவதன் மூலமாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | தாபன விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து குறித்த கடன் மீதியை விரைவில் அறவிட வேண்டும். |
| 3.6.5 | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நி.பி. 104 நி.பி. 104 (3) மற்றும் 104 (4) | | குருனாகல இடர் மற்றும் தரவு மீட்பு நிலையத்தினுள் 2022 ஆண்டு ஜுலை 24 ஆம் திகதி இடம்பெற்ற அவசர தீப்பற்றுதல் காரணமாக சேதமடைந்த யூமீஎஸ் (UPS) இயந்திரங்களின் நட்டத்தின் பெறுமதியை சுமாராக சேதமடைந்த இயந்திரங்களிற்கு பதிலாக புதிய இயந்திரமொன்றை கொள்வனவு செய்யும் தற்போதைய பெறுமதி சுமார் ரூபா 10 மில்லியன் என இனங்கண்டிருந்த ஆரம்ப விசாரணையை மேற்கொண்டு இதுவரை 02 ஆண்டுகள் கடந்துள்ள போதும் குறித்த சம்பவம் தொடர்பாக நிதிப்பிரமாணம் பிரகாரம் இறுதி விசாரணையை நடாத்தி அறிக்கையின் பிரதியொன்றை கணக்காய்விற்கு இதுவரை சமர்ப்பிக்கப்பட்டு | UPS உபகரணம் தீப்பற்றிய காரணத்தால் சேதமடைந்தது தொடர்பாக நி.பி. 104 (3) கீழ் ஆரம்ப விசாரணை அறிக்கை 2022 நவம்பர் 24 திகதி சமர்ப்பிக்கப்பட்டு இருந்ததுடன், ஏற்பட்டுள்ள சேதம் தொடர்பாக நி.பி. 104(4) பிரகாரம் இறுதி விசாரணை மேற்கொண்டது தொடர்பாக முன்நடவடிக்கை எடுத்துவருவதெனை. | நிதிப் பிரமாணம் பிரகாரம் கால ரீதியாக பரீட்சிப்பை நடாத்தி அறிக்கை பிரதியை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இருக்கவில்லை. | | |
| 3.6.6 | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின நிதிப் பிரமாணம 1645 (அ) | வாகன லொக் புத்தகத்தை அனைத்து வாகனங்கள் தொடர்பாகவும் நாளாதுவரையாக பராமரிக்க வேண்டிய போதும் திணைக்கள வருடாந்த அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்வது தொடர்பான தகவல்கள், ஆயுதங்கள் மற்றும் உபகரணங்கள் பற்றிய தகவல்கள் மற்றும் மீளாய்வாண்டில் இடம்பெற்ற 14 வாகன விபத்துக்கள் தொடர்பான தகவல்கள் லொக் புத்தகங்களில் பதியப்பட்டிருக்கவில்லை. | 2025 ஆண்டிலிருந்து அனைத்து வாகனங்களிற்கும் வருடாந்த அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்ளும் தகவல் மற்றும் ஏனை அனைத்து தகவல்களையும் வாகன லொக் குறிப்பு புத்தகத்தில் உட்படுத்தி நாளாதுவரை ஆககுமாறு குறித்த உத்தியோகத்தர்களை அறிவுருத்தியதென. | நிதிப் பிரமாணம் பிரகாரம் ஏற்பட்டுள்ள வாகன விபத்து தொடர்பான தகவல்களை லொக் புத்தகங்களில் பதிவிட வேண்டும். |
| 3.6.7 | 2016 திசெம்பர் 29 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 30/2016 இன் 03 பிரிவு | எரிபொருள் பாவனை பரிசோதனையை மேற்கொள்ள திணைக்களத்திடம் பொருத்தமான வேலைத் திட்டமொன்று இருக்காததன் காரணமாக எரிபொருள் வினைத்திறன் பற்றி அளவிட தேவையான நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | இது வரை திணைக்களத்திற்கு சொந்தமான வாகனங்களில் 3 வான் வண்டிகள் மற்றும் 03 கார் வண்டிகளை மாதிரியாக எடுத்து எரிபொருள் பரீட்சிப்பிற்கு உட்படுத்தியதாக மற்றும் எதிர்வரும் சில மாதங்களில் அனைத்து பரீட்சிப்புக்களையும் மேற்கொண்டு அறிக்கையிட தேவையான செயற்பாடுகள் தற்போது எடுக்கப்பட்டு வருவதென. | குறித்த சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் எரிபொருள் பரீட்சிப்பை மேற்கொள்ள பொருத்தமான நிகழ்ச்சித் திட்டமொன்றைஅமைக்க வேண்டும். |
| 3.6.8 | பெறுகைகள் வழிகாட்டிக் கோவை 2024 2.3 பந்தி மற்றும் தொடர்பான பெறுகைகள் கைநூல் | திணைக்களத்தினுள் பெறுகைகள் முகாமைத்துவ பிரவொன்றை அமைந்து கணக்கீட்டு உத்தியோகத்தரின் கீழ் பிரதான பெறுகைகள் உத்தியோகத்தர் பதவிக்கு உத்தியோகத்தர் | திணைக்களத்தினுள் பெறுகைகள் முகாமைத்துவ பிரவொன்றை அமைந்து கணக்கீட்டு உத்தியோகத்தரின் கீழ் பிரதான பெறுகைகள் உத்தியோகத்தர் | பெறுகைகள் முகாமைத்துவ பிரவொன்றை அமைந்து கணக்கீட்டு உத்தியோகத்தரின் கீழ் பிரதான பெறுகைகள் உத்தியோகத் |

| | | |
|---|---|---|
| ஒருவரை நியமிக்க வேண்டிய போதும் திணைக்களம் அதற்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதவிக்கு உத்தியோகத்தர் ஒருவரை நியமிக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வது இறுதிக் கட்டத்தில் காணப்படுவதென. | தர் பதவிக்கு உத்தியோகத் தர் ஒருவரை நியமிக்க வேண்டும். |

## 3.7 வரித் தேவைப்பாட்டிற்கு இணங்காமைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் / கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 3.7.1 | உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம் CGIR/2019/03 – (Ins. & Cir) மற்றும் 2019 ஜுலை 09 திகதிய சுற்றறிக்கையின் 02 பிரிவு பிரகாரம் வெட் வரிக்காக பதிவு செய்த நபரொருவர் தொடர்ச்சியாக வரி செலுத்துகிறவரா என உறுதி செய்து கொள்ளாது, உள்நாட்டு இறைவரி திணைக்களத்தனால் பெறுமதி சேர் வரித் தொகையை சேகரிப்பதனை செயலற்றுச் செய்த வரிதாரர் ஒருவர் 2024 ஆண்டினுள் ரூபா 8,955,360 ஆன பெறுமதி சேர் வரித் தொகையை அமைச்சொன்றிலிருந்து சேகரித்திருந்தார். இந்த வரிதாரரினால் 2024 ஆண்டிற்காக வரி அறிக்கை சமர்ப்பித்தல் அல்லது அவ்வாறு சேகரித்த வரித் தொகையை உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்புவதனை ஏனும் செய்திருக்கவில்லை. | கோவை பரீட்சிப்பின் போது அக் கோவை பெறுமதி சேர் வரிக்காக செயலற்றதென வெளிப்படுத்தப்பட்ட பின்னர் 2024 மே 01 திகதி முதல் VAT இற்காக செயற்படுத்த நடவடிக்கை எடுத்ததாக மற்றும் வரிக் கடப்பாடு ரூபா 15,691,695 என இனங்கண்டதாகவும் அதன் அடிப்படையில் எதிர்காலத்தில் மதிப்பீட்டு அறிவித்தல் விநியோகிப்பதென. | சட்ட ஏற்பாடுகள் பிரகாரம் ஏயுவு வரி விரைவில் அறவிட நடவக்கை எடுக்க வேண்டும். |
| 3.7.2 | TIN இலக்க 40923xxxx கீழ் 2024 சனவரி 01 திகதி முதல் வருமான வரிக்காக பதிவு செய்திருந்த நிறுவனமொன்றின் நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் 2022 மற்றும் 2023 ஆண்டிற்காக அடைந்து கொண்ட மிகையில் முறையே | இந்த நிறுவனத்தின் வரி கடப்பாட்டை பரீட்சிப்பதற்காக காடந்த 05 அண்டுகளின் நிதிக்கூற்றுக்களை பெற்று நிறுவனம் ஈடுபட்டுள்ள பலவேறு பொருளாதா நடவடிக்கை மற்றும் அதன் மூலம் ஏற்பட்டுள்ள வருமானம் மற்றும் செலவுகள் | தொடர்புடைய வரிச் சட்டத்தின் பரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து வரிதாரர் வழங்கியுள்ள அறிக்கையை காலரீதியாக கணக்காய்விற்கு |

| | | |
|---|---|---|
| ரூபா 100,050,669 மற்றும் ரூபா 130,421,483 பெறுமதியுடன் கூடிய முதலீட்டு வருமானம் உள்ளடக்கப்பட்டு இருந்ததால் அதற்குரியதாக சுமாரா முதலீட்டு வருமானம் மீது 2022 ஆண்டிற்காக ரூபா 30,015,201 மற்றும் 2023 ஆண்டிற்காக ரூபா 39,126,445 ஆன வரி கடப்பாடு காணப்பட வேண்டிய போதும் கணக்காய்வு திகதிய 2024 திசெம்பர் 20 திகதி வரை நிறுவனத்தினால் எந்தவித வருமான அறிக்கையையும் அறிக்கையிட்டிருக்காததுடன் உள்நாட்டு இறைவரி திணைக்களத்தனாலும் அந்த நிறுவனத்தின் எந்தவித வரி கடப்பாட்டையும் இனங்கண்டு வரி அறவிடவும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தொடர்பாக தற்போது வரிச் சட்ட தத்துவங்களிற்குஇணங்க ஆய்வு செய்து கொண்டிருப்பதென. | உட்படுத்தி சரியான வரி வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.8 வங்கிக் கணக்கு செயற்பாடுகள்**

வங்கி கணக்கு இயக்குதல் தொடர்பாக மேற்கொண்ட மாதிரி கணக்காய்வு பரீட்சிப்பின் போது வெளிப்படுத்தப்பட்ட குறைபாடுகள் பின்வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் / கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 3.8.1 | 2024 திசெம்பர் மாத வங்கி இணக்கக் கூற்றின் பிரகாரம் வெளியிடப்பட்ட போதும் கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்படாத ரூபா 1,428,770 பெறுமதியுடைய 65 காசோலைகள் கணக்காய்வு திகதிய 2025 பெப்ரவரி 28 திகதி வரை கொடுப்பனவிற்கு சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை. | காசோலையை கால நீடிப்பு செய்து கொடுப்பனவிற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதென. | வெளியிடப்பட்ட போதும் கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமானம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| 3.8.2 | 2024 இற்கான புதிய கணக்கு இலக்கம் 7041576 கொண்ட கணக்கை திறப்பதற்காக TOD/BA/01 படிவத்துடன் இணைக்கப்பட்டுள்ள 45 வங்கிக் கணக்குகள் குறிப்பிடப்படும் ஆவணத்துடன் இணக்கம் செய்கையில், 2024 ஆண்டில் உள்நாட்டு | உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் சுற்றுலா பெறுமதி சேர் வரி மீள்செலுத்தும் கணக்கு (7041586) தற்போது செயற்படாத போதும், மீண்டும் அந்த வரி மீள்செலுத்தும் முறைமையை செயற்படுத்துவது தொடர்பாக கலந்துரையாடல் நடாத்துவதுடன் | செயற்பாடற்ற மட்டத்திலான கணக்கு தொடர்பாக சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இறைவரி திணைக்கள சுற்றுலா வெட் வரியை மீள் செலுத்துவதற்கான இலங்கை வங்கி கணக்கு இலக்கம் 7041586 செயற்படும் மட்டத்தில் இருக்கவில்லை. | இதுவரை தீர்மானம் வழங்கப்படவில்லையென. | |
| 3.8.3 | உள்நாட்டு இறைவரி திணைக்கள விரேஷ்ட பிரசைகள் வருமான வரி மீள்செலுத்தும் கணக்கிற்கான கோவையை பரீட்சிக்கும் போது கணக்கு இலக்கம் 7039828 கொண்ட கணக்கை மூடிவிடுவது தொடர்பான TOD/BA/03 படிவம் மூலம் கணக்கை மூடிவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கணக்கிலக்கம் 7039828 கொண்ட கணக்கை மூடுவதற்குரியதாக TOD/BA/03 படிவம் மற்றும் ஏனைய ஆவணங்களை வங்கிக்கு சமர்ப்பிக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதென. | உரிய படிவங்களிற்கு இணங்க கணக்குகளை மூடிவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 எதிர்பார்த்த இறுதி மட்டத்தை அடைந்து கொள்ளாமை

#### 4.1.1 2023 திசெம்பர் 31 திகதிக்கு மற்றும் 2024 திசெம்பர் 31 திகதிக்கு தொங்கல் கணக்கின் மீதி பரீட்சிப்பு

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் / கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தொங்கல் கணக்கின் மொத்த மீதியின் சுமாராக 47 சதவீதம் அதாவது ரூபா 1,908,594,350 ஆன பெறுமமானம் சரியான TIN இலக்கமொன்றை இனங்காண முடியாத மீதிகளினாலும் சுமாராக 48 சதவீதம் அதாவது ரூபா 1,954,300,021 ஆன பெறுமானம் TIN இலக்கம் 99999xxxx கீழான மீதிகளுடனானதால் ஒட்டு மொத்தமாக சுமாராக 95 சதவித பாரிய பெறுமானமொன்று பிரதிபலிக்கும் இந்த காரணங்களிற்காக கால ரீதியாக தீர்க்கும் செயற்பாடுகளை எடுக்க வேண்டியுள்ளதாக அவதானிக்கப்படுகின்றது. மேலும் RAMIS கணனித் தொகுதிக்குரியதாக 2024 திசெம்பர் 31 திகதிக்கு தொங்கல் கணக்கின் மொத்த மீதியின் | தொங்கல் கணக்கில் காணப்படும் மீதிகளை குறைத்துக் கொள்ள குறித்த பிரிவுகளை அறிவுருத்தி வருவதுடன், செயன்முறைகள் பின்பற்றப்பட்டுவருகின்றன. | தொங்கல் மீதிகளை சரியாக இனங்கண்டு தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சுமாராக 57 சதவீதம் அதாவது ரூபா 2,235,886,581 ஆன பெறுமானம் கூட்டிணைந்த வருமான வரி (CIT) ஆகும். | | |
| (ஆ) | தொங்கல் கணக்கின் வருடாந்த ஆரம்ப மீதியிக்கு முறையே 2023 ஆண்டினுள் ரூபா 4,055,449,038 வும் 2024 ஆண்டினுள் ரூபா 2,545,318,436 வும் புதிதாக சேர்க்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஓராண்டினுள் மீண்டும் தொங்கல் கணக்கிற்கு மீதிக்கு கனிசமான தீர்க்கப்படாத மீதிகள் சேர்க்கப்பட்டுள்ளதாக கடந்த பல ஆண்டுகளாக வெளிப்படுத்தப்பட்ட போதும் அந்த நிலைமையை தீர்த்துக் கொள்ள திணைக்களத்தினால் இதுவரை வினைத்திறனான செயன்முறையை அமைக்க இயலாதுள்ளதாக கணக்காய்வின் போது மேலும் அவதானிக்கப்பட்டது. | தொங்கல் கணக்கில் காணப்படும் மீதிகளை குறைத்துக் கொள்ள குறித்த பிரிவுகளை அறிவுருத்தி வருவதுடன், செயன்முறைகள் பின்பற்றப்பட்டு வருகின்றதென. | தொங்கல் கணக்கின் பெறுமானம் அதிகரிப்பதற்கான காரணத்தை கண்டறிந்து அதனை தீர்த்துக் கொள்ள வேண்டும். |
| (இ) | 2023 திசெம்பர் 31 திகதி தொங்கல் கணக்கின் மொத்த மீதியின் சுமாராக 61 சதவீதம் அதாவது ரூபா 3,384,621,926 ஆன போதும் 2024 திசெம்பர் 31 திகதி தொங்கல் கணக்கின் மொத்த மீதியின் சுமாராக 59 சதவீதம் அதாவது ரூபா 2,397,192,549 உம் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளிற்குரிய மீதிகளாகுமென மேலும் அவதானிக்கப்பட்டது. | 2020 மற்றும் 2021 ஆண்டுகளில் Covid நிலைமை காணப்பட்ட காலத்தினுள் நிகழ்நிலை முறையின் (Online) ஊடாக செய்த கொடுப்பனவுகளை சரியாக இடம்பெறாததால் அந்த கொடுப்பனவுளும் தொங்கள் கணக்கிற்கு செலுவு வைக்கப்பட்டுள்ளதுடன் அந்த ஆண்டுகளிற்குரிய தொங்கள் கணக்கில் காணப்படும் மீதிகளை குறைத்துக் கொள்ள செயன்முறைகள் பின்பற்றப்பட்டு வருகின்றதென. | தொங்கல் மீதிகளை சரியாக இனங்கண்டு தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | RAMIS தொகுதியின் view account financials மற்றும் search payment ஆகிய ஒன்றுக்கொன்று மாற்று உட்பிரசேத்தின் கீழ் காண்பிக்கப்படும் தரவுகளின் வித்தியாசமுள்ள பெறுமானங்கள் அவதானிக்கப்பட்டதன் மீது கணக்காய்விற்கு வழங்கியுள்ள தொங்கல் கணக்கின் மீதியான ரூபா 4,067,209,501 ஆன மீதி சரயான மீதியா என்பது பிரச்சினைக்குரியதாவதுடன் அந்த | பதில் வழங்கப்படவில்லை. | RAMIS தொகுதியை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகளை விரைவில் நிறைவு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அளவு 2015 ஆண்டிற்காக கவனிக்கும் போது ரூபா 21,533,091 ஆன பெறுமானத்தால் அதிகரிக்க வேண்டுமென அவதானிக்கப்பட்டது. | | |

**4.1.2 2016 சனவரி 01 முதல் 2024 ஜுன் 30 வரையான காலப் பகுதியினுள் 2024 ஜுலை 30 திகதிக்கு உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் RAMIS தொகுதியில் திறந்து காணப்படும் வேலை உருப்படிகளின் (Open Work Items) முன்னேற்றம் மீதான பரீட்சிப்பு.**

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் / கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2016 சனவரி 01 முதல் 2024 ஜுன் 30 வரையான காலப் பகுதிக்குரியதாக RAMIS தொகுதியினுள் திறந்து காணப்படும் வேலை உருப்படிகளின் (Open Work Items) அளவு 1,217,161 ஆனதுடன் அந்த அளவு 2025 சனவரி 28 திகதி வரை வேலை உருப்படி (Open Work Items) 512,775 ஆகவிருந்தன. அதனுள் RAMIS தொகுதி ஆரம்பிக்கப்பட்ட வருடம் அதாவது 2016 ஆண்டு முதல் 2021 ஆண்டு வயையான காலத்தினுள் உருவாகியுள்ள மற்றும் மேலும் திறந்த வேலை உருப்பகள் 4,611 உம் காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது. | அந்த அந்த வரி வகைகள் பிரகாரம் திறந்த வேலை உருப்படிகள் 1,217,161 ஆன எண்ணிக்கை, 512,775 வரை குறைவடைந்திருந்தது. | தொகுதியை நாளாதுவரையாக பேணிக் கொள்ள, நிலுவை வரி அறவிட உரிய முயற்சியை எடுக்க நேரிடியாக தாக்கம் செலுத்துவதால் அதற்குரிய வேலை உருப்படியை துரிதமாக நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2025 சனவரி 28 திகதிக்கு RAMIS தொகுதியினுள் அதிக திறந்த வேலை உருப்படி எண்ணிக்கைகள் முறையே CIT, VAT மற்றும் IIT ஆகிய வரி வகைககளிற்காவதுடன் அதன் பெறுமானங்கள் முறையே 56,399, 210,460 மற்றும் 162,833 ஆனது. | CIT, VAT மற்றும் IIT வரி வகைகளிற்காக திறந்த வேலை உருப்படி எண்ணிக்கை முறையே 56,399, 210,460 மற்றும் 162,833 ஆக குறைந்துள்ளதென. | தொகுதியை நாளாதுவரையாக பேணிக் கொள்ள, நிலுவை வரி அறவிட உரிய முயற்சியை எடுக்க நேரிடியாக தாக்கம் செலுத்துவதால் அதற்குரிய வேலை உருப்படியை துரிதமாக நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மேற்குரித்த காலப் பகுதிக்காக திறந்து காணப்படும் வேலை உருப்படி (Open Work Items) இடையே ஆயிரத்திலும் (1000) அதிக வேலை உருப்படிகள் காணப்படும் ‘வேலை உருப்படி பெயர்’ (Work Item Type) 30 இற்கு திறந்த வேலை உருப்படிகள் 1,205,196 காணப்படுவதாக கணக்காய்வு ஐயவினாவில் சுட்டிக் காட்டியதுடன் அந்த பெறுமானம் 2025 சனவரி 28 திகதிக்கு 505,931 ஆகவிருந்தது. அங்கு காணப்பட்ட வேலை உருப்படி பெயர்களின் கீழ் WI_acknowledgement_of_sa_returns,WI_Verify_Content_of_RTN_DOC,WI_CM_Assign_Case_TD,WI_Return_Review_by_PTA இற்காக திறந்த உருப்படி முறையே 36,173, 99,422, 126,458 மற்றும் 95,260 காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது. | 2024.06.30 திகதிக்கு திறந்து காணப்படும் வேலை உருப்படி (Open Work Items) இடையே ஆயிரத்திலும் (1000) அதிக வேலை உருப்படிகள் காணப்படும் ‘வேலை உருப்படி பெயர்’ (Work Item Type) 30 இற்கு திறந்த வேலை உருப்படிகள் எண்ணிக்கை 505,931 வரை குறைவடைந்துள்ளது. அவ்வாறேWI_acknowledgement_of_sa_returns மற்றும் WI_Return_Review_by_PTA இற்காக திறந்த வேலை உருப்படி முறையே 36,173 மற்றும் 95,260 வரை குறைந்துள்ளதென. | தொகுதியை நாளாதுவரையாக பேணிக் கொள்ள, நிலுவை வரி அறவிட உரிய முயற்சியை எடுக்க நேரிடியாக தாக்கம் செலுத்துவதால் அதற்குரிய வேலை உருப்படியை துரிதமாக நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | wi_acknowledgement_of_sa_returns வேலை உருப்படிகள் நேரடியாக 2017 இன் 24 இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் 132 பிரிவின் கீழ் வரி செலுத்துனரால் சுய மதிப்பீட்டு அறிக்கையை உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு ஒப்படைத்துள்ள திகதியை தீர்மானிப்பதற்கு தொடர்புபடுவதுடன், WI_Return_Review_by_PTA வேலை உருப்படிகளின் கீழ் வழங்கியுள்ள அறிக்கைகளில் காணப்படும் வரி பொறுப்பு / மீள் செலுத்தல் வரிதாரரின் கணக்கில் அறிக்கையிடப்படல் மற்றும் அறிக்கை தொடர்பாக காணப்படும் அனைத்து முன்நடவடிக்கைகளிற்கும் தொடர்புபட்டு | பதில் வழங்கப்படவில்லை. | தொகுதியை நாளாதுவரையாக பேணிக் கொள்ள, நிலுவை வரி அறவிட உரிய முயற்சியை எடுக்க நேரிடியாக தாக்கம் செலுத்துவதால் அதற்குரிய வேலை உருப்படியை துரிதமாக நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காணப்படுவதுடன் அந்த வேலை உருப்படிகள் நிலுவை வரி அறிக்கையில் நாளாதுவரையான நிலுவை வரி பெறுமானங்களை பேணிக் கொள்ள தாக்கம் செலுத்துவதால் அந்த வேலை உருப்படிகளிற்கு காலரீதியான செயற்பாடுகள் இலலையென அவதானிக்கப்பட்டது. | | |
| (உ) | மேற்படி திறந்து காணப்படும் வேலை உருப்படிகள் (Open Work Items) இடையே ஐந்தாயிரத்திற்கு (5,000) அதிக வேலை உருப்படிகள் அளிவனை கொண்ட உத்தியோகத்தர்கள் 10 பேர்களிற்கு உரியதாக 43,004 ஆன வேலை உருப்படிகள் அளவு 2025 சனவரி 28 திகதிக்கும் நிறைவு செய்யாத திறந்து காணப்பட்டது. | மேற்படி திறந்து காணப்படும் வேலை உருப்படிகள் (Open Work Items) இடையே ஐந்தாயிரத்திற்கு (5,000) அதிக வேலை உருப்படிகள் அளிவனை கொண்ட உத்தியோகத்தர்கள் 10 பேர்களிற்கு உரியதாக 43,004 ஆன வேலை உருப்படிகள எண்ணிக்கை 109,798 முதல் 43,004 வரை குறைந்துள்ளதென. | தொகுதியை நாளாதுவரையாக பேணிக் கொள்ள, நிலுவை வரி அறவிட உரிய முயற்சியை எடுக்க நேரிடியாக தாக்கம் செலுத்துவதால் அதற்குரிய வேலை உருப்படியை துரிதமாக நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | திறந்து காணப்படும் வேலை உருப்படிகள் (Open Work Items) இடையே நூற்றிற்கு அதிக வேலை அளவு காணப்படும் TIN இலக்கம் 129 இற்காக வேலை உருப்படி 13,473 காணப்பட்டதுடன் அதற்கிடையே TIN இலக்கமொன்று தொடர்பற்ற N/A கீழான திறந்த வேலை உருப்படி 4,552 உம் WI_Allocate_TIN_New 3,627 ஆகவிருந்தது. | திறந்து காணப்படும் வேலை உருப்படிகள் (Open Work Items) இடையே நூற்றிற்கு அதிக வேலை அளவு காணப்படும் TIN இலக்கம் 129 இற்காக வேலை உருப்படி எண்ணிக்கை 24,533 முதல் 13,473 வரையும், TIN இலக்கமொன்று தொடர்பற்ற N/A கீழான திறந்த வேலை உருப்படி எண்ணிக்கை 8,755 முதல் 4,552 வரையும், அதிக வேலை உருப்படி எண்ணிக்கையான WI_Allocate_TIN_New கீழான திறந்த வேலை உருப்படி எண்ணிக்கை 7,598 முதல் 3,627 வரை குறைந்துள்ளதென. | தொகுதியை நாளாதுவரையாக பேணிக் கொள்ள, நிலுவை வரி அறவிட உரிய முயற்சியை எடுக்க நேரிடியாக தாக்கம் செலுத்துவதால் அதற்குரிய வேலை உருப்படியை துரிதமாக நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) | WI_pymt_payment_adjusted_to_suspense_acc ஆன வேலை உருப்படிக்கு தொடர்பான TIN இலக்கமொன்று குறிப்பிடப்படாத (Blank), வேலை உருப்படியின் கீழ் 38 திறந்த வேலை உருப்படிகள் தொடர்ந்தும் காணப்படுகின்றன. செலுத்திய வரியை சரியாக உரிய TIN | TIN இலக்கமொன்று குறிப்பிடப்படாத (Blank) WI_pymt_payment_ adjusted_to_suspense_acc கீழ் காணப்பட்ட திறந்த வேலை உருப்படி 77, 38 வரை குறைந்துள்ளதுடன் TIN இலக்கத்தை இனங்காணும் சந்தர்ப்பங்களில் அந்த அந்த வேலை உருப்படிகளின் | திறந்து காணப்படும் இந்த வேலை உருப்படிகளை விரைவில் தீர்க்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இலக்கத்திற்கு அனுப்புதல் இந்த வேலை உருப்படி முடிவடைந்ததன் மீது தங்கியுள்ளதால், தொங்கல் கணக்கின் மீத தீர்த்துப்பட நேரடியாக இந்த வேலை உருப்படி தாக்கம் செலுத்துவதாக அவதானிக்கப்பட்டது. | நடவடிக்கைகள் நிறைவு செய்யப்படுவதென. | |
| (ஏ) | கணக்காய்வினால் மேற்கொண்ட மாதிரி பரீட்சிப்பின் போது TIN இலக்கம் 11424xxxx கீழ் VAT இற்காக 2018, 2019 மற்றும் 2021 ஆண்டுகளில் 15 வரிக் காலப் பகுதிகளிற்குரியதான மொத்த பெறுமதி ரூபா 35,498,990 ஆன Import Credit Voucher Value இற்காக RAMIS தொகுதியின் Tax Period Profile இல் எந்தவித குறிப்பும் இல்லையென அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் செலுத்த வேண்டிய வரி பெறுமதி (Payable or Refund) மற்றும் வரி செலுத்தல் (Tax Credit) RAMIS தொகுதியில் குறிப்பிடப்பட்டு இருக்கவில்லை. அவ்வாறு சம்பூரணப்படுத்தவேனும் வேலை உருப்படி தொகுதியினுள் வடிவமைத்திருக்காமை கணக்காய்விற்கு பிரச்சினைக்குரியதாக இருந்தது. | குறித்த கோவை தொடர்பாக வழக்கொன்று காணப்படுவதாக அறிவிக்கப்பட்டது. | RAMIS தொகுதியில் பதியப்படாமைக்கு காரணத்தை கண்டறிந்து சரிசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஐ) | RAMIS தொகுதியில் 2016 சனவரி 01 முதல் 2024 ஜுன் 30 வரையான காலப் பகுதிக்காக காணப்படும் நிறைவு செய்யாத வேலை உருப்படிகள் காணப்படுவதற்கான காரணத்தை பின்வருமாறு இனங்காண முடிந்தது. | | |

| | | | |
|---|---|---|---|
| (i) | RAMIS தொகுதியில் காணப்படும் தொழில்நுட்ப தவறு காரணமாக WI_acknowledgement_of_sa_ returns,WI_Verify_Content_of _RTN_DOC எனும் வேலை உருப்படிக்காக பல ஆண்டுகளாக நடவடிக்கை எடுத்துள்ள போதும் பல வருடங்களாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போதும், அந்த வேலை உருப்படிகளை தொகுதினுள் திறந்து காணப்படும் வேலை உருப்படிகளாக காட்டுதல், சுயுஆஜஐளு தொகுதியில் வேலை உருப்படிகளை நிறைவு செய்யும் வசதிகள் காணப்படாத தவறு காரணமாக பிழையாக உருவான வேலை உருப்படி காணப்படல், Appeal ஹோ் Appeal Query தீர்த்து நிறைவு செய்யும் வரை objection மூடிவைக்கும் இயலுமை காணப்படாமை மற்றும் அதற்காக கனிசமான காலமொன்று செல்லுதல், WI_CM_Assign_Case_TD வேலை உருப்படி தொடர்பாக வரி மற்றும் தண்டத்தை முழுமையாக சமாதானப்படுத்தும் வரை மற்றும் வழக்கு தாக்கல் செய்துள்ள வரி செலுத்துனரிற்குரிய நிலுவை வரி சமாதானப்படுத்தும் வரை அவை திறந்து காணப்படல். | RAMIS தொகுதியில் காணப்படும் தொழில்நுட்ப தவறு காணப்படுவதாக குறிப்பிடப்பட்டு இருந்தது. | காரணத்தை கண்டறிந்து RAMIS தொகுதியை அபிவிருத்தி செய்ய நடவடிக்கையை விரைவில் நிறைவு செய்ய வேண்டும். |
| (ii) | VAT/ SVAT வரி அறிக்கை மற்றும் அட்டவணைகளில் காணப்படும் பிரச்சினை, வரி செலுத்துனரால் schedule களில் காணப்படும் பிரச்சினைகளை தீர்த்து தராமை, Refund request work item, நிலுவை வரிக்காக காணப்படும் Work item செய்து முடிக்கும் வரை குறித்த வேலை உருப்படியை மேற்கொள்ள இயலாதமை. | VAT/ SVAT வரி அறிக்கை மற்றும் அட்டவணைகளில் காணப்படும் பிரச்சினை, வரி செலுத்துனரால் schedule களில் காணப்படும் பிரச்சினைகளை தீர்த்து தராமை, Refund request work item, நிலுவை வரிக்காக காணப்படும் Work item செய்து முடிக்கும் வரை குறித்த வேலை உருப்படியை மேற்கொள்ள இயலாதென குறிப்பிடப்பட்டிருந்தது. | வேலை உருப்படியை விரைவில் மேற்கொள்ள காணப்படும் பிரச்சினைகளை கண்டறிந்து தேவையான நடவடிக்கை எடுத்தல். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | வரி செலுத்துனரின் வியாபார தன்மை தொடர்பான தகவல்களை உள்ளடக்க RAMIS தொகுதியினுள் வசதிகள் இருக்கவில்லை. | வரி செலுத்துனரின் வியாபார தன்மை தொடர்பான தகவல்களை உள்ளடக்க RAMIS தொகுதியினுள் வசதிகள் இருக்கவில்லையென குறிப்பிடப்பட்டிருந்தது. | வரி செலுத்துனரின் வியாபார தன்மை தொடர்பான தகவல்களை RAMIS தொகுதியினுள் உள்ளடக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iv) | புதிய உள்நாட்டு இறைவரி சட்டத்திற்கு 2018/2019 மதிப்பீட்டாண்டு முதல PAYE மற்றும் WHT வேலை உருப்படிகளை நிறைவு செய்வது தொடர்பாக இதுவரை வழிகாட்டி வெளியிடாததால் அது தொடர்பான வேலை உருப்படிகளை நிறைவு செய்ய முடியாதென. | புதிய உள்நாட்டு இறைவரி சட்டத்திற்கு 2018/2019 மதிப்பீட்டாண்டு முதல PAYE மற்றும் WHT வேலை உருப்படிகளை நிறைவு செய்வது தொடர்பாக இதுவரை வழிகாட்டி வெளியிடப்படவில்லையென குறிப்பிடப்பட்டிருந்தது. | PAYE மற்றும் WHT இற்காக விரைவில் வழிகாட்டி வெளியிடப்பட வேண்டும். |
| (v) | TIN இலக்கத்தை பிழையாக (Invalid TIN) குறிப்பிட்டதால் சரியான TIN இலக்கத்தை இனங்காள முடியாதமை, வரி வகைக்காக பதிவு செய்யாது கொடுப்பனவு செய்தல், TIN இலக்கத்தை இரத்துச் செய்துள்ள காரணத்தால் அது தொடர்பான வேலை உருப்படிகளை நிறைவு செய்ய இயலாதென. | TIN இலக்கத்தை பிழையாக (Invalid TIN) குறிப்பிட்டதால் சரியான TIN இலக்கத்தை இனங்காள முடியாதமை, வரி வகைக்காக பதிவு செய்யாது கொடுப்பனவு செய்தல், TIN இலக்கத்தை இரத்துச் செய்துள்ள காரணத்தால் அது தொடர்பான வேலை உருப்படிகளை நிறைவு செய்ய இயலாதென குறிப்பிடப்பட்டிருந்தது. | பிரச்சினையை விரைவில் தீர்த்து RAMIS தொகுதியை அபிவிருத்தி செய்ய விரைவில் நடவக்கை எடுக்க வேண்டும். |
| (vi) | மட்டுப்படுத்தப்பட்ட உத்தியோகத்தர்கள் உள்ளமை, அட்டவணை தொடர்பான பிரச்சினைகாகா அதிக காலம் செலவாதல். | மட்டுப்படுத்தப்பட்ட உத்தியோகத்தர்கள் உள்ளமை, அட்டவணை தொடர்பான பிரச்சினைகாகா அதிக காலம் செலவாவதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. | தேவையான உத்தியோகத்தர்களை விரைவில் நடவக்கை எடுக்க வேண்டும். |

**4.1.3 உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் தென் கொழுப்பு பிராந்திய அலுவல செயலாற்றுகை பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட் விடயங்கள் பின்வருமாறு.**

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் / கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2024 நவம்பர் வரை கிளையினால் 2018/19 மதிப்பீட்டாண்டு முதல் 2022/23 மதிப்பீட்டாண்டு வரை CIT, IIT மற்றும் PIT இற்காக வட்டி மற்றும் தண்டப் பணம் | குறித்த TIN இலக்கத்தின் கீழ் மேலதிக மதிப்பீட்டறிக்கையை RAMIS தொகுதிக்கு தரவேற்றம் செய்ய இயலாமைக்கு பல | தொகுதியை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கையை விரைவில் மேற்கொண்டு குறித்த |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளடங்களாக மொத்த நிலுவை தொகையான ரூபா 128,225,621 இற்கு வழங்கியிருந்த மேலதிக மதிப்பீட்டு அறிக்கை 83 இல் கணக்காய்வு திகதி யான 2024 திசெம்பர் 18 திகதி வரை 68 இனை தரவுத் RAMIS தொகுதிக்கு தரவேற்றம் செய்தில்லாததுடன் அந்த அறிக்கையிற்குரியதான மொத்த நிலுவை தொகை ரூபா 100,634,822 ஆனது. | காரணங்கள் தாக்கம் செலுத்துவதென. | மேலதிக மதிப்பீட்டறிக்கை தரவுகளை RAMIS தொகுதிக்கு விரைவில் தரவேற்றம் செய்ய நடவக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மேற்படி மேலதிக மதிப்பீட்டறிக்கையை தொடர்ந்தும் பரீட்சிக்கும் போது அந்த 68 அறிக்கைகளில் 26 இற்காக மேலதிக மதிப்பீட்டறிக்கை போன்றே 20/21, 21/22 மற்றும் 22/23 மதிப்பீட்டாண்டிற்குரிய சுய மதிப்பீட்டறிக்கைகள் 2025 ஏப்ரல் 11 திகதி வரை RAMIS தொகுதிக்கு தரவேற்றம் செய்யப்படாததுடன் அந்த அறிக்கைகளிற்குரிய வட்டி மற்றும் தண்டப் பணம் உள்ளடங்களாக மொத்த நிலுவை வரித் தொகையான ரூபா 30,229,197 ஆனது. மேலும் RAMIS தொகுதியில் பிழைகள் காணப்படுவதன் காரணமாக 2018/19 மற்றும் 2019/20 மதிப்பீட்டாண்றிற்காக வெளியிட்ட மேலதிக மதிப்பீட்டறிக்கை 18 இற்குரிய வரி கடப்பாடு, RAMIS தொகுதியில் உள்ளடக்கப்படாததுடன் அதற்குரிய மொத் நிலுவை வரிப் பெறுமதி ரூபா 25,208,635 ஆகவிருந்தது. | 2018/2019 மதிப்பீட்டாண்டு முதல் 2022/2023 மதிப்பீட்டாண்டு வரை கணக்காய்வு செய்யப்பட்ட கோவைகளிற்குரிய வருமான வரி அறிக்கைகள் RAMIS தொகுதிக்கு தரவேற்றம் செய்யப்படாத வரி கோவைகளை இனங்கண்டு, அவற்றை தரவேற்றம் செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதென. | தொகுதியை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கையை விரைவில் மேற்கொண்டு குறித்த மேலதிக மதிப்பீட்டறிக்கை தரவுகளை RAMIS தொகுதிக்கு விரைவில் தரவேற்றம் செய்ய நடவக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2015/16 மதிப்பீட்டாண்டு முதல் 2022/23 மதிப்பீட்டாண்டு வரை பிராந்திய அலுவலகத்திற்குரிய 1162 ஆன ஐயவினா வேலை உருப்படிகள் (Query) அளவு 2024 திசெம்பர் 18 கணக்காய்வு திகதி வரை மற்றும் 04 மேன்முறையீட்டு வேலை உருப்படிகள் (Appeal) 2025 பெப்ரவரி 05 திகதி வரை திறந்து காணப்பட்டன. | 2015/16 மதிப்பீட்டாண்டு முதல 2023/24 மதிப்பீட்டாண்டு வரை கொழுப்பு தெற்கு அலுவலகத்திற்குரிய ஐயவினா வேலை உருப்படிகள் 1238 இல் 76 உருப்படிகள் 2025 ஏப்ரல் 30 திகதியளவில் நிறைவு செய்யப்பட்டுள்ளதெனவும் மேன்முறையீட்டு வேலை உருப்படிகள் 21 இல் 04 மாத்திரம் எஞ்சியுள்ளதுடன் எஞ்சிய வேலை உருப்படிகளை விரைவில் நிறைவு செய்ய | தொகுதியை நாளாதுவரையாக பேணிக் கொள்ளல், நிலுவை வரியை அறவிட உரிய நடவடிக்கை எடுத்தல் மற்றும் குறித்த வேலை உருப்படிகளை விரைவில் நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நடவடிக்கை எடுப்பதென. | |
| (ஈ) | 2024 முதலாம் அறையாண்டு செயலாற்றலிற்குரிய வேலை உருப்படிகள் முழுமையாக கணக்காய்விற்கு கிடைத்த தகவல்களின் பிரகாரம் மொத்த வேலை உருப்படிகள் 81,040 இற்கிடையே வேலை உருப்படிகள் 43,594 இனை 2024 திசெம்பர் மாதம் வரை திறந்து காணப்பட்டன. 2025 சனவரி 06 திகதிக்கு RAMIS தொகுதியிலிருந்து பெற்றுக் கொண்ட தரவுகளின் பிரகாரம் ஒவ்வொறு வரி வகைக்கும் உரியதாக 37,047 வேலை உருப்படிகள் திறந்து காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது. | 2015/16 மதிப்பீட்டாண்டு முதல 2023/24 மதிப்பீட்டாண்டு வரை கொழுப்பு தெற்கு அலுவலகத்திற்குரிய ஐயவினா வேலை உருப்படிகள் 1238 இல் 76 உருப்படிகள் 2025 ஏப்ரல் 30 திகதியளவில் நிறைவு செய்யப்பட்டுள்ளதெனவும் மேன்முறையீட்டு வேலை உருப்படிகள் 21 இல் 04 மாத்திரம் எஞ்சியுள்ளதுடன் எஞ்சிய வேலை உருப்படிகளை விரைவில் நிறைவு செய்ய நடவடிக்கை எடுப்பதென. | நிலுவை வரியை அறவிட வேலை உருப்படிகளை விரைவில் நிறைவு செய்ய வேண்டும். |
| (உ) | 2024 ஜுன் 30 திகதி நிலுவை வரி அறிக்கை தயாரிக்கும் போது DTRU பிரிவிற்குரிய நிலுவை வரி மற்றும் வட்டி உள்ளடங்களாக ரூபா 823,575,418 ஆன மொத்த நிலுவை வரி தொகை 2024 ஜுன் 30 திகதி நிலுவை வரி அறிக்கை மூலம் கொழும்பு பிராந்திய அலுவலகத்திற்கு செலவு வைத்திருந்ததுடன் திணைக்களத்தினால் நிலுவை வரி அறிக்கை தயாரிக்கும் போது 2024 ஜுன் 30 திகதி மொத்த வரி பெறுமதி ரூபா 1,208,104,322 ஆன நிலுவை வரி தொகை கொழும்பு தெற்கு கிளையின் நிலுவை வரி அறிக்கையில் இரண்டு முறை பதியப்பட்டு பின்னர் இனங்கண்டு திருத்தியிருந்த போதும் இவ்வாறு நிலுவை வரி அறிக்கையில் தவறுகள் காணப்படுவதன் மூலம் சரியான நிலுவை வரி தொகை குறித்த அறையாண்டு நிலுவை வரி அறிக்கையில் சரியாக அறிக்கையிடப்படாததாக அவதானிக்கப்பட்டது. | 2024 ஜுன் 30 திகதி C-49 தயாரிக்கும் போது ரூபா 823,575,118 தொகை DTRU பிரிவிற்குரிய நிலுவை வரி தொகையொன்று காணப்படுவதாக இனங்கண்டு 2024 ஒக்டோபர் 01 திகதிய கடிதம் மூலம் பிரதி ஆணையாளர் நாயகம் - வரி நிர்வாகம் நகர அலுவலகம் மற்றும் பிராந்தி அலுவலகங்களிற்கு அறவித்ததுடன் 2024 ஜுன் 30 திகதி நிலுவை வரி ரூபா 1,208,104,322 அளவு இரண்டு முறை பதிவு செய்யப்பட்டு இருந்ததாக இனங்கண்டு கொழும்பு தெற்கு C-49 தயாரிக்கும் போது அது சரிசெய்யப்பட்டு தயாரிக்கப்பபட்டதென. | நிதிப் பிரமாணக் கோவை 128 (2) (இ) பந்தி பிரகாரம் நிலுவை வரி அறிக்கையை சரியாக தயாரித்து கணக்காய்வாளர் நாயகத்திற்கு உரிய திகதிக்கு முன்னர் சமர்ப்பிப்பது முகாமைத்துவதின் பொறுப்பாகும். |

### 4.1.4 குருனாகல பிராந்திய அலுவலகம் தொடர்பான செயலாற்றுகை பரீட்சிப்பு

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் / கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018/19 மதிப்பீட்டாண்டில் RAMIS தொகுதிக்கு உட்படுத்தவில்லையென அறிவிக்கப்பட்ட மேலதிக மதிப்பீட்டறிகை 35 இல் 2025 சனவரி 31 வரை வட்டி மற்றும் தண்டப்பணம் உள்ளிட்ட வரி பெறுமதி ரூபா 18,561,029 ஆன CIT இற்கான அறிக்கை 14 உம், வட்டி மற்றும் தண்டப்பணம் உள்ளிட்ட வரி பெறுமதி ரூபா 60,896,011 ஆன IIT இற்கான அறிக்கை 16 உம் உள்ளடங்களாக மொத்த மேலதிக மதிப்பீட்டு அறிக்கை 30 உம் RAMIS தொகுதிக்கு உட்படுத்தவில்லையென தொகுதி சார்ந்த பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்டதுடன் அதற்குறிய வட்டி மற்றும் தண்டப் பணம் உள்ளடங்களாக மொத்த வரி பெறுமதி ரூபா 79,457,040 என அவதானிக்கப்பட்டது. | 18/19 மற்றும் 19/20 மதிப்பீட்டாண்டுகளிற்கு உரிய மதிப்பீட்டு அறிவிப்புக்களில் பிரதிகள் மதிப்பீட்டு பிரிவின் உத்தியோகத்தரினால் அறவீட்டு பிரிவிற்கு வழங்கியுள்ளதுடன், தகவல் தொழில்நுட்ப நிர்பாக சேவை பிரிவு (ITAS) மூலம் 18/19 மதிப்பீட்டாண்டில் ஏற்பட்ட நிலுவை வரி தொடர்பான அறிவித்த நிலுவை வரி, தண்டம், வட்டி அளவுகளின் பிரகாரம் அறவிடும் அறவீட்டு செயன்முறையை ஏற்கனவே உத்தியோகத்தரினால் எடுக்கப்பட்டுள்ளதாகவும் ஏற்கனவே நிலுவை வரியை செலுத்தி நிறைவு செய்திருந்தால் ஏற்படுத்திக் கொண்ட இணக்கப்பாட்டின் பிரகாரம் தண்டத்தை மட்டுப்படுத்தி எஞ்சிய தண்டத்தை விடுவிக்கவும் மற்றும் RAMIS தொகுதியில் காணப்படும் தவறுகளை சீராக்கிக் கொண்டு எஞ்சியுள்ள மேலதிக மதிப்பீட்டு அறிவிப்புக்களையும் RAMIS தொகுதிக்கு உட்படுத்தவும் விரைவில் நடவடிக்கை எடுக்கப்படுவதென. | விநியோகித்துள்ள அனைத்து மேலதிக மதிப்பீட்டு அறிக்கை அளவுகளையும் மற்றும் விநியோகத்தல்களிற்கு உரியதாக வட்டி மற்றும் தண்டப்பணம் உள்ளிட்ட மொத்த நிலுவை வரி பெறுமதியை திட்டவட்டமாக இனங்காண முடியுமான முறைமையொன்றை அமைக்க வேண்டும். |
| (ஆ) | RAMIS தொகுதியிலிருந்து 2025 சனவரி 22 திகதி பெற்றுக் கொண்டு அனைத்த வகைகளிற்கும் உரிய திறந்த வேலை உருப்படி தகவல்களின் பிரகாரம் பிராந்திய அலுவலகத்துடன் தொடர்பான வேலை உருப்படிகள் 24,031 திறந்து காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது. அதனுள் முறையே WI_Verify_Content_of_Other _Documents, WI_CM_Assign_Case_TD, | இந்த வேலை உருப்படி 2015 மதிப்பீட்டு ஆண்டு முதல் இதுவரை RAMIS தொகுதியின் மூலம் அவ்வப் போது கிடைத்த வேலை உருப்படியென, உத்தியோகத்தர்களினால் நிறைவு செய்ய முடியுமான வேலை உருப்படிகளை உச்சளவில் நிறைவு செய்துள்ளதாக, நிறைவு செய்ய முடியாத வேலை உருப்படிகளிற்காக பல காரணங்கள் தேவையான சந்தர்ப்பங்களில் ஊக்குவிப்பு குழு மற்றும் உயர் நிர்வாகத்திற்கு வழங்கியுள்ளதாக மற்றும் அதிகமான வேலை உருப்படிகள் | RAMIS தொகுதியை நாளாதுவரையாக பேணிக் கொள்ள தொகுதியின் மூலம் வெளியிடப்படும் அனைத்து வேலை உருப்படிகளையும் விரைவில் நிறைவு செய்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | WI_Return_Review_BY_PTA மற்றும் WI_Verify_ Refund எனும் வேலை உருப்படி பெயரின் கீழ் திறந்த வேலை உருப்படிகள் 5,072, 4,762, 3,559 மற்றும் 2,265 முக்கியமாக இனங்காணப்பட்டது. அவ்வாறே அதிக திறந்த வேலை உருப்படியளவு IIT, CIT மற்றும் VAT எனும் வரி வகைக்கு காணப்படுவதுடன் முறையே அவை 9,163, 6,158 மற்றும் 4,312 என அவதானிக்கப்பட்டது. | எஞ்சியுள்ளதானது RAMIS தொகுதியின் தவறுகள் காரணமாக ஆகும். | |
| (இ) | RAMIS தொகுதியிலிருந்து 2025 சனவரி 22 திகதி பெற்றுக் கொண்டு திறந்த வேலை உருப்படி தகவல்களின் பிரகாரம் 2025 ஆண்டு முதல் உள்நாட்டு இறைவரி சேவை உத்தியோகத்தர்களிற்கு 2015/16 மதிப்பாண்டு முதல் 2023/2024 மதிப்பாண்டு வரையான முழு Appeal மற்றும் Query அளவு பிராந்திய அலுவலகத்திற்கு உரியதாக முறையே 150 மற்றும் 127 ஆனது கணக்காய்வு திகதி வரை திறந்து காணப்பட்டது. அவற்றில் 52 Query 6 ஆண்டுகளை விட அதிக வரி காலப் பகுதிக்குரியதாவதுடன் இதுவரை தீர்க்கப்படாத என அவதானிக்கப்பட்டது. | அனைத்து உத்தியோகத்தராலும் இந்த Appeal/Query தீர்க்க கவனம் செலுத்தி உரிய ஆரம்ப நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக மற்றும் இந்த Appeal / Query களிற்கான வரி, தண்டம், வட்டியை ஏற்கனவே நிலுவை வரி பதிவேடுகளில் கைவிடப்பட்ட வரியாக குறிப்பிட்டுள்ளதுடன் அதற்கு காரணமாக வரி செலுத்துனரின் சரியான இணக்கம் கிடைக்காமை, RAMIS தொகுதியில் காணப்படும் பிரச்சினை, PAYE அட்டவணை சரியாக தரப்படாமை மற்றும் உத்தியோகத்தர் பற்றாக்குறை காரணமாகவுள்ளதென. | RAMIS தொகுதியை நாளாதுவரையாக பேணிக் கொள்ள தொகுதியின் மூலம் வெளியிடப்படும் அனைத்து வேலை உருப்படிகளையும் விரைவில் நிறைவு செய்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | குருனாகல பிராந்திய அலுவலகத்தில் 2011 ஆண்டு முதல் ரூபா 5,276,921 பெறுமதியான 16 காசோலைகள் மறுக்கப்பட்டுள்ளதுடன் காசோலை மறுக்கப்பட்டு அறவீட்டு செயற்பாடுகளை எடுக்க 05 ஆண்டுகளை விஞ்சிய 08 காசோலைகள் உள்ளதுடன் உள்நாட்டு இறைவரி சட்டம் பிரகாரம் அறவீட்டு செயற்பாடுகளை எடுத்து வரி அறவிட | மறுக்கப்பட்ட காசோலைகளிற்காக சட்ட நடிக்கை எடுத்த ரூபா 2,100,012 பெறுமதியான 06 காசோலைகளும், நிதி சட்டத்தின் கீழ் பதிவழிக்க இனங்கண்டுள்ள ரூபா 773,551 பெறுமதியான 03 காசோலைகளும், கொடுப்பனவை பரிமாற்ற மற்றும் பணம் அறவிடப்பட்ட ரூபா 5,843,673 பெறுமதியான 16 காசோலைகளுமாக அறவீட்டு செயற்பாடுகளை எடுத்துள்ளதென. | உள்நாட்டு இறைவரி சட்டம் பிரகாரம் அனைத்து அறவீட்டு செயற்பாடுகளையும் எடுத்து வரி அறவிட துரித நடவடிக்கை எடுக்க வேண்டும். |

இயலாதுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| (உ) | பிராந்திய அலுவலகங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட 2024 ஜுன் 30 திகதிக்குரிய நிலுவை வரி அறிக்கை பிரகாரம், RAMIS மற்றும் Non RAMIS இற்கான மொத்த நிலுவை வரி பெறுமதி ரூபா 2,305,575,477 என அறிக்கையிடப்பட்டு இருந்தது. நிலுவை வரி அறிக்கையின் கால பகுப்பாய்வில், நிலுவை வரி இனங்காணப்பட்ட ஆண்டாக 2019 முதல் 2024 ஆண்டு வரை இருந்ததுடன் 2019 ஆண்டிற்கு முன்னர் இடம்பெற்ற நிலுவை வரித் தொகை அறிக்கை இடப்பட்டு இருக்கவில்லை. கிளைக்கு உரியதான 2019 இற்கு முன்னரான அனைத்து நிலுவை வரிகயும் 2019 ஆண்டிற்கு இனங்கண்டிருந்ததுடன் அதன் பிரகாரம் கிளையின் உண்மையான நிலுவை வரி கால பகுப்பாய்வின் பிரகாரம் சரியாக வெளிப்படுத்தப்பட்டு இருக்கவில்லையென அவதானிக்கப்பட்டது. | தலைமையகத்தில் கொடுப்பனவு மற்றும் இணக்க பிரிவின் மூலம் மதிப்பீட்டின் மீது ஏற்படும் நிலுவை வரியை இனங்காண்பது மதிப்பீட் அறிவித்தல் விநியோகிக்கும் கணக்காண்டை அடிப்படையாகக் கொண்டாகும். 2019 ஆண்டிற்கு முன்னர் மதிப்பீட்டு அறவித்தல், அவ்வாறே 2019 ஆண்டின் மதிப்பீட்டு அறிவித்தல் விநியோகிக்கப்பட்டு உள்ளதால் அந்த ஆண்டிற்கு நிலுவை வரி இனங்காணப்பட்டுள்ளது. | உண்மையான நிலுவை வரி காலப் பகுப்பாய்வின் பிரகாரம் சரியாக நிலுவை வரி அறிக்கைகளில் வெளிப்படுத்த வேண்டும். |

### 4.1.5 உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் மேலதிக மதிப்பீடறிக்கை விநியோகிப்பதன் யெலாற்றுகை

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் / கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கணக்காய்விற்கு அழைப்பித்த தகவல்களின் பிரகாரம் 2024 ஏப்ரல் 18 கிடைத்த தகவல்களின் பிரகாரம் 2018/19 முதல் 2021/22 மதிப்பீட்டாண்டிகாக கூட்டிணைந்த (CIT), தனிநபர் (IIT) மற்றும் பங்குடமை (PIT) இற்காக நிநியோகித்துள்ள மேலதிக மதிப்பீட்டு அளவு 11,686 ஆவதுடன் மற்றும் | | |

| | | | |
|---|---|---|---|
| | அதற்கான மேலதிக மதிப்பீட்டு வரித் தொகை ரூபா 579,804,166,354 ஆனது. | | |
| (அ) | சுமாராக பதிவு செய்த விரி கோவைகளின் அளவான 624,000 இற்கு ஒப்பாக விநியோகித்துள்ள மேலதிக மதிப்பீட்டு அளவு மேற்படி வரி வகைகளிற்கு உரியதாக 0 சதவீதம் முதல் 9 இற்கு இடையே அது மொத்த பதிவு செய்த கோவைகள் அளவின் குறைந்த சதவீதமென அவதானிக்கப்பட்டது. | வரி செலுத்துனரால் சுய மதிப்பீட்டு முறையின் கீழ் வரி அறிக்கை சமர்ப்பிப்பதுடன் திணைக்களத்தினால் அனைத்து கோவைகளையும் விரைவில் கணக்காய்வை செய்து தெரிவு செய்யும் கோவைகளை மாத்திரம் விரிவாக கணக்காய்விற்கு உட்படுத்தப்படும். தற்போது திணைக்களத்திடம் உள்ள மட்டுப்படுத்தப்பட்ட மனி மற்றும் பௌதீக வளங்கள் காரணமாக விரிவான கணக்காய்விற்குட்படுத்தும் கோவைகளின் அளவு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. | வரிக் கோவைகளிற்கு உரியதாக வரி கடப்பாட்டை உறுதி செய்து கொள்ள கால ரீதியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| | மேற்படி 2018/19 மதிப்பீட்டு கூட்டிணைந்த வரிதாரரிற்காக விநியோகித்திருந்த 1,830 ஆன மேலதிக மதிப்பீட்டு அளவில் மதிப்பீடு விநியோகிக்கும் காலப் பகுப்பாய்வு பிரகாரம் 2019 ஆண்டு முதல் 2021 ஆண்டு வரை மதிப்பீடு 10 உம் 2022 ஆண்டில் மதிப்பீடு 1478 உம் 2023 ஆண்டில் மதிப்பீடு 286 மற்றும் 2024 ஆண்டில் மதிப்பீடு 56 உமாவதுடன் 2017 இலக்கம் 24 கொண்ட உள்நாட்டு இறைவரி சட்டத்தின் (திருத்திய) 135 (2) (ஆ) பிரவின் பிரகாரம் காலத்தடை காலப்பகுதி, 2022 மே மாதத்துடன் முடிவடைவதுடன் அவ்வாறு காலத்தடை உட்படுத்த அறிக்கை 2019 நவம்பர் 30 திகதிக்கு முன்னர் வழங்கியிருக்க வேண்டிய போதும் கனிசமான அளவு அதாவது 1,813 ஆன மேலதிக மதிப்பீட்டு அளவு 2022 ஆண்டு மே மாதத்தின் பின்னர் விநியோகித்துள்ளதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | மதிப்பீட்டாண்டு 2018/2019 முதல் மேலதிக மதிப்பீடு விநியோகிக்க RAMIS தொகுதிக்கு புறம்பாக வேறு மென்பொருள் தொகுதியினால் விநியோகித்ததுடன் 2024 ஏப்ரல் மாதம் 30 திகதி முதல் RAMIS ஊடாக மேலதிக மதிப்பீடு விநியோகிக்க வசதிகள் உள்ளளதெனவும், வரி செலுத்துனர் அறிக்கை சமர்ப்பிக்கும் திகதியை அடிப்படையாகக் கொண்டு காலத்தடை திகதி மாற்றமடைவதுடன் மற்றும் 2018/2019 ஆண்டிற்குரிய காலத்தடைக்கு உட்படுவது 2019 நவம்பர் 30 திகதிக்கு முன்னர் சமர்ப்பித்த அறிக்கை மாத்திரமாகும். | 2017 இன் 24 இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் பிரிவின் பிரகாரம் குறித்த மதிப்பீட்டு அறிவித்தல் உரிய காலத்தடை திகதி முடிவடைய முன்னர் விநியோகிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**4.1.6 உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் 2018/19 மதிப்பீட்டாண்டில் கூட்டிணைந்த வருமான வரி (CIT) இற்கான மாற்று வழி ஊடாக விநியோகித்துள்ள மேலதிக மதிப்பீட்டறிக்கை தரவு RAMIS தொகுதிக்கு உட்படுத்தும் யெலாற்றுகை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் / கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2024 ஏப்ரல் 18 திகதி கணக்காய்விற்கு அழைப்பித்த தகவல்களின் பிரகாரம் மாற்று செயன்முறைகள் ஊடாக 2018/19 முதல் 2021/22 மதிப்பீட்டாண்டிற்காக கணக்காய்வு திகதி மேலதிக மதிப்பீடு RAMIS தொகுதி மூலம் விநியோகிக்க தொகுதியை அபிவிருத்தி செய்யாததால், மாற்று செயன்முறைகள் ஊடாக இஸ்தாபிக்கப்பட்ட (CIT) இற்காக விநியோகித்துள்ள மேலதிக மதிப்பீளவு 7,090 ஆவதுடன் மற்றும் அதற்குரிய வரி 569,897,813,253 தொகையாகும். அதற்கிடையே 2018/19 மதிப்பீட்டாண்றிகாக விநியோகிக்கப்பட்ட மேலதிக மதிப்பீட்டளவு 1,830 மற்றும் அதன் பெறுமதி ரூபா 256,727,918,900 ஆகவிருந்தது. | இலக்கம் CGIR/2023/3-1(Ins & Cir)15 மற்றும் 2023 ஜுன் 22 திகதிய மேலதிக அல்லது திருத்திய மதிப்பீட்டு அறிவித்தல் விநியோகிப்பது தொடர்பாக விநியோகித்த சுற்றறிக்கை பிரதியை பதிலிற்காக சமர்ப்பித்துள்ளது. | RAMIS தொகுதியை நாளாதுவரையாக பேணிக் கொள்ள, தொகுதிக்கு புறம்பாக விநியோகிக்கப்பட்ட அனைத்து மேலதிக மதிப்பீட்டு அறிவித்தல்களை RAMIS தொகுதிக்கு விரைவில் உட்படுத்தி நிலுவை வரி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2018/19 மதிப்பீட்டாண்டில் CIT இற்கு மேலதிக மதிப்பீடு விநியோகித்தல், 2017 இன் 24 இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் (திருத்திய) 135 (2) (ஆ) பிரிவின் பிரகாரம், காலத்தடை பகுதியான மதிப்பீட்டாண்டு முடிவடைந்து 30 மாதங்கள் முடிவடைய முன்னர் விநியோகிக்க வேண்டுமென குறிப்பிடுப்படுகின்றது. அதன் பிரகாரம் மேற்படி விநிரோயகித்த மேலதிக மதிப்பீட்டு மாதிரி பரீடசிப்பு பிரகாரம் காலத்தடை முடிவடையவுள்ள திகதி 01-05 இடையிலான மதப்பீறிக்கை 43 விநியோகித்துள்ளதுடன், அவ்வாறு காலத்தடை முடிவடையும் வரை மதிப்பீட்டறிக்கை விநியோகிக்கப்படாது இருப்பதன் | RAMIS தொகுதியில் காணப்பட்ட தவறு காரணமாக அறிக்கை தரவேற்றம் செய்வதில் பிரச்சினையான நிலைமைம காணப்பட்டதுடன், தற்போது இந்த தவறை தவிர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் குறித்த அறிக்கை RAMIS தொகுதி ஊடாக தரவேற்றம் செய்யப்பட்டுள்ளது. | 2017 இன் 24 இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் பிரிவின் பிரகாரம் குறித்த மதிப்பீட்டு அறிவித்தல் உரிய காலத்தடை திகதி முடிவடைய முன்னர் விநியோகிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மூலம், காலத்தடை பகுதி தவிர்க்கப்படல், வரி பதிவாளரிற்கு பதிவுத் தபால் மூலம் கடிதம் கிடைத்தல் தாமதித்தன் மீது காலத்தடை திகதி முறிவடைந்துள்ளதாக மேன்முறையீடுகளில் வரி செலுத்துனரால் காரணம் குறிப்பிடல் போன்ற அபாயமான நிலைமை ஏற்பாடு முடியுமாகையால் காலத்தடை திகதிக்கு ஏதேனும் திட்டவட்ட திகதிக்கு முன்னர் மதிப்பீடறிக்கையை விநியோகிக்க முறைமை ஒன்றை இஸ்தாபிக்க வேண்டியுள்ளதாக அவதானிக்கப்பட்டது. | | |
| (இ) | 2018/19 மதிப்பீட்டாண்டில் திருத்திய வரி செலுத்துனரிற்கு மேலதிக மதிப்பீடு விநியோகிக்கப்ட்ட TIN இலக்கம் 100 பரீட்சிப்பிற்கு உட்படுத்தப்பட்டதுடன் அதன் மொத்த பெறுமதி ரூபா 162,168,617,836 ஆகும். 2024 ஏப்ரல் 10 திகதிய பங்குடமை வரிக்குரிய உள்ளக சுற்றறிக்கை ஊடாக மாற்று வரி மூலம் விநியோகிக்கப்பட்ட மேலதிக மதிப்பீடு பற்றிய விபரம் RAMIS தொகுதிக்கு உட்படுத்த குறித்த உத்தியோகத்தரை அறிவுருத்தியுள்ள போதும் கணக்காய்வு திகதிய 2024 ஆகஸ்ட் 05 வரை மாதிரி பரீட்சிப்பிற்குரிய TIN இலக்கம் 100 இனது மேலதிக மதிப்பீடு பற்றிய விபரம் RAMIS தொகுதிக்கு உட்படுத்தியிருக்கவில்லை. மேற்படி கணக்காய்வு ஐயவினாவிற்குரியதாக 2025 மே 15 திகதிய பதில் கடிதம் பிரகாரம் மேற்படி TIN இலக்கம் 100 இல் 95 இற்குரிய மேலதிக மதிப்பீடு தொடர்பான விபரம் RAMIS தொகுதிக்கு உட்படுத்தப்படவில்லையென மேலும் அவதானிக்கப்பட்டது. | RAMIS தொகுதியில் காணப்பட்ட தவறு காரணமாக அறிக்கை தரவேற்றம் செய்வதில் பிரச்சினையான நிலைமைம காணப்பட்டதுடன், தற்போது இந்த தவறை தவிர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் குறித்த அறிக்கை RAMIS தொகுதி ஊடாக தரவேற்றம் செய்யப்பட்டுள்ளது. | RAMIS தொகுதியை நாளாதுவரையாக பேணிக் கொள்ள, தொகுதிக்கு புறம்பாக விநியோகிக்கப்பட்ட அனைத்து மேலதிக மதிப்பீட்டு அறிவித்தல்களை RAMIS தொகுதிக்கு விரைவில் உட்படுத்தி நிலுவை வரி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மேற்படி மாதிரி கணக்காய்விற்குரிய மேலதிக மதிப்பீடு விநியோகித்த திகதி மற்றும் சுய மதிப்பீட்டு திகதி (Date of Original Assessment) ஆகிய திகதிகளை கவனிக்கும் போது, இந்த மதிப்பீட்டறிக்கையை திணைக்களத்திற்கு வழங்கிய திகதிக்கு முற்றிலும் மாறுபட்ட திகதியொன்று மாற்று முறைறையூடாக விநியோகித்துள்ள மேலதிக மதிப்பீட்டறிக்கையின் Date of Original Assessment கீழ் உட்படுத்தயுள்ள 18 சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அதவானிக்கப்பட்டது. | 2022 மே 05 திகதி விநியோகிக்கப்பட்ட 2018/2019 இற்கான மாற்று முறைமையூடாக மதிப்பீட்டு அறிவித்தல் விநியோகிப்பது தொடர்பாக வழிகாட்டி தொடர்பாக 2022 மே 19 திகதி வரை அது தொடர்பாக முழுமையான மற்றும் சரியான தெளிவொன்று இருக்காததால் மதிப்பீட்டு அறிவித்தல் விநியோகித்த திகதி Date of Original Assessment தவறுடன் கூடியதாக உட்படுத்ப்பட்டுள்ளது. தற்போது அத்தவறு இனங்காணப்பட்டுள்ளதுடன், அத்தவறுகளை திருத்திக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | RAMIS தொகுதியை நாளாதுவரையாக பேணிக் கொள்ள, அனைத்து மேலதிக மதிப்பீட்டு அறிவித்தல்களை RAMIS தொகுதிக்கு சரியாக தரவேற்றம் செய்யப்படுவதனை உறுதி செய்ய முறையான உள்ளக கட்டுப்பாட்டு முறைமை ஒன்றை இஸ்தாபிக்க வேண்டும். |

## 4.2 செயற்திட்டங்களை மேற்கொள்வதன் தாமதம்

### 4.2.1 உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் RAMIS தொகுதியின் செயலாற்றுகை பரீட்சிப்பு

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் / கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் வினைத்திறனை உயர்த்தும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட, வருமான நிர்வாக முகாமைத்துவ தகவல் தொகுதி (RAMIS) இற்கு 2014 ஆண்டு முதல் 2024 திசெமபர் 31 வரை சுமாராக ரூபா 17.3 மொத்த கிரயம் மேற்கொள்ளப்பட்டு உள்ளதாக கணக்காய்விற்கு அறிக்கை இடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் RAMIS 1.0 இற்காக 2014 தே 27 திகதி சிங்கப்பூர் டொலர் 35,006,646 இற்கு (நிலவிய அன்னிய செலாவணி விகிதம் பிரகாரம் ரூபா பில்லியன் 04 தொகைக்கு) சிங்கப்பூர் நிறுவனமொன்றுடன் (NSC) உடப்படிக்கை செய்யப்பட்டிருந்ததுடன் அந்த தொகுதியின் வேலைகள் நிறைவு செய்திருந்த மொடியுல் 2016 சனவரி 01 முதல் | | |

| | | | |
|---|---|---|---|
| | செயற்படுத்தப்பட்டு இருந்தது. இது தொடர்பாக 2024 ஆண்டு RAMIS தொகுதியின் வினைத்திறன் தொடர்பாக பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு. | | |
| (அ) | RAMIS தொகுதியை அபிவிருத்தி செய்யும் உடன்படிக்கையாக RAMIS 1.0 இற்கு 2014 மே 27 திகதி சிங்கப்பூர் டொலர் 35,006,646 உம், RAMIS 2.0 கட்டம் A இற்கு சிங்கப்பூர் டொலர் 1,760,000 (ரூபா மில்லியன் 265 சுமாராக) உம், 2.0 கட்டம் B இற்கு சிங்கப்பூர் டொலர் 15,534,364 (ரூபா மில்லியன் 2.3 சுமாராக) உம் உடன்படிக்கை செய்திருந்தது. 2024 சனவரி 31 வரை 03 ஆண்டுகளிற்கு சிங்கப்பூர் டொலர் 21,053,371 இற்கு (ரூ.பி. 3.1 சுமாராக) பராமரிப்பு சேவை ஒப்பந்தம் சிங்கப்பூர் ஒத்துழைப்பு நிறுவனத்தின் உபஒப்பந்ததாரர் ஒருவருக்கு வழங்கியிருந்தது. RAMIS தொகுதியை பாரமரிக்கும் சேவை ஒப்பந்தம் 2024 பெப்ரவரி முதல் 2027 சனவரி வரை 3 வருடங்களால் நீடிக்க தயாரிக்கப்பட்ட நகழ் உடன்படிக்கை நிபந்தனைகள் அவதானிப்பறிகு சட்டமா அதிபரிற்கு அனுப்பி 2024 செப்டம்பர் 13 ஆம் திகதி உடன்படிக்கை செய்துள்ளதுடன் உடன்படிக்கை பெறுமதி சிங்கப்பபூர் டொலர் (SGD) 31,808,289 என அவதானிக்கப்பட்டது. | பதில் வழங்கப்படவில்லை. | RAMIS தொகுதியின் பராமரிப்பு நடவடிக்கைகளை திணைக்கள பொறுபிற்கு எடுக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். |
| (ஆ) | RAMIS தொகுதி செயற்படும் போது ஏற்படும் பிரச்சினைகளிற்காக RAMIS தொகுதியில் சிற்சில மாற்றங்களை ஏற்படுத்துவதாகவும், இதற்காக சிங்கப்பூர் நிறுவனத்திற்கு அந்த மாற்றங்களை மேற்கொள்ள செலவாகும் ஒரு மனித | பயன்படுத்துனர்களினால் பாவிக்கும் புதிய தேவைப்பாடு மற்றும் அரச கொள்கை ரீதியான தீர்மானத்தின் மீது (பாதீட்டு முன்மொழிவு போன்ற) தொகுதியில் செய்ய வேண்டிய மாற்றத்திற்கான கோரிக்கை (Service Request.) இற்காக மேலதிக கொடுப்பனவு செலுத்த | அரசிற்கு குறைந்த செலவு ஏற்படுமாறு செயற்திட்டத்தை இயக்குவது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். |

| | | | |
|---|---|---|---|
| | மணித்தியாலத்திற்கு 1,333 சிங்கப்பூர் டொலர் அதாவது சுமாராக ரூபா 291,000 செலவாவதாகவும், அந்த தொகையை புதிய உடன்படிக்கையின் கீழ் 1,400 சிங்கப்பூர் டொலர் அதாவது சுமாராக ரூபா 305,200 ஆக அதிகரித்துள்ளதுடன் அதன் பிரகாரம் அந்த நிறுவனத்திற்கு மொடியுல் அபிவிருத்தி செய்ய செலுத்தும் மேற்குறித்த கிரயத்திற்கு மேலதிகமாக இவ்வாறு செய்யப்பட்ட மாற்றங்களிற்கு (Service Request) அந்த நிறுவனத்திற்கு 2024 ஆண்டில் சுமாராக ரூபா 405 மில்லியன் செலுத்தியிருந்ததாக மாதிரி கணக்காய்வு பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்டது. | வேண்டியகதாக மற்றும் பராமரிப்பு உடன்படிக்கை உள்ளடக்கும் போது காலரீதியாக மனித நாள்ளொன்றிற்கு செலுத்த வேண்டிய தொகை மாற்றமடைய முடியுமென. | |
| (இ) | RAMIS 2.0 கட்டத்தின் கீழ், மதிப்பீட்டறிக்கை விநியோகிக்கும் மொடியுல் அபவிருத்தி முடிவடையாத காரணத்தால் 2018/2019 ஆண்டு முதல் 2021/ 2022 மதிப்பீட்டாண்டு வரை மேலதிக வருமான வரி மதிப்பீட்டறிக்கை RAMIS தொகுதிக்கு புறம்பான தற்காலிக தொகுதி ஒன்றின் மூலம் நடாத்திச் சென்றதுடன் வழங்கியுள்ள தகவல்களின் பிரகாரம் 2018/2019 ஆண்டு முதல் 2021/2022 மதிப்பீட்டாண்டு வரை முறையே 2,979, 4,489, 3,460 மற்றும் 758 மேலதிக வருமான வரி மதிப்பீட்டறிக்கை அவ்வாறு விநியோகிக்கப்பட்டு இருந்தது. எவ்வாறாயினும், அந்த ஒவ்வொரு மதிப்பீட்டாண்டிற்கும் தொகுதியில் தனிநபர் ( IIT) மற்றும் கூட்டிணைந்த (CIT) ஆகிய வரி வகைகளிற்கு மதிப்பீட்டை விநியோகிக்க இயலுமானவாறு தற்போது தொகுதியின் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள போதும் பங்குடமை வியாபார வரி (PIT) இற்கான அபிவிருத்தி நடவடிக்கைகள் இன்னும் | மதிப்பீட்டறிக்கை 2019/2020 முதல் 2022/2023 வரை தொகுதியில் IIT/CIT ஆகிய வரி வகைகளிற்கு தொகுதியை அபிவிருத்தி செய்துள்ளதுடன் பங்குடமை வியாபார வரி (PIT ) இற்கான அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட வருவதென. | காணப்படும் பிரச்சினையை தீர்த்து மற்றும் பணிகளை விரைவில் நிறைவு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். |

| | | | |
|---|---|---|---|
| | இடம்பெறவில்லை என அவதானிக்கப்பட்டது. தொகுதியின் அபிவிருத்தி நிறைவு செய்யப்பட்ட மொடியுலினுள் மேற்குறிப்பிட்டு உள்ள மேலதிக மதிப்பீட்டு அறிக்கையை உட்படுத்துவதும் சாதகமான மட்டத்தில் காணப்படவில்லை எனவும் மேலும் அவதானிக்கப்பட்டது. | | |
| (ஈ) | நிறுவனங்கள் 29 இனை RAMIS தொகுதிக்கு தொடர்புபடுத்தல் கட்டம் 4 கீழ் மேற்கொள்ள அங்கு, ஏற்கனவே இலக்கை சுங்கம், மத்திய வங்கி, இலங்கை வங்கி, நிதி அமைச்சு, கம்பனி பதிவாளர் திணைக்களம், இலங்கை கிளியர் தனியார் கம்பனி ஆகிய 06 தொடர்பு படுத்தியுள்ளதுடன் மோடார் வாகன பதிவுசெய்யும் திணைக்களத்தை தொடர்புபடுத்தி வருவதுடன் எஞ்சிய நிறுவனங்களில் பல பிரச்சினைகள் காணப்படுவதால் இதுவரை தொடர்புபடுத்தி இல்லாததுடன் அந்த நிறுவனங்களின் தகவல்கள் வகைப்படுத்தலின் கீழ் RAMIS தொகுதிக்கு பெற்றுக் கொள்ள முடியாதுள்ளதாக அவதானிக்கப்பட்டது. | நிறுவனங்கள் 6 இற்கு மேலதிகமாக தற்போது மோடார் வாகன பதிவுசெய்யும் திணைக்களத்தையும் தொகுதியுடன் தொடர்புபடுத்தியுள்ளதென. | தொகுதியின் பிரச்சினை தீர்த்து எஞ்சிய நிறுவனங்களையும் விரைவில் RAMIS தொகுதிக்கு தொடர்பு படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | RAMIS தொகுதியை பொறுப்பேற்க ஹேளு நிறுவனத்தின் மூலம் சமர்ப்பித்துள்ள பதவியணி தேவைப்பாடாக Application Maintenance பணிகளிற்காக 45 உத்தியோகத்தர்கள், Infrastructure Maintenance பணிகளிற்காக 21 உத்தியோகத்தர்கள், Supporting Service பணிகளிற்காக 10 உத்தியோகத்தர்களாக மொத்த பதவியணியினர் 76 ஆக மதிப்பிட்டுள்ளதுடன், அது தொடர்பாக முன்நடவடிக்கைகள் NCS நிறுவுனத்தினால் RAMIS தொகுதியின் பராமரிப்பு ஒப்பந்த கால எல்லை முடிவடையும் இறுதி திகதியான 2027 சனவரி மாதம் முடிவடைய முன்னர் | RAMIS தொகுதியை பொறுப்பேற்கும் திட்டத்தை மீளாய்வு செய்தல் மற்றும் விரிவான மதிப்பீட்டை செய்வதற்காக நிபுணத்துவ குழுவொன்றை நியமித்ததுடன் அதன் ஊடாக 03 வாரங்களிற்குள் அறிக்கையொன்றை வழங்கவுள்ளது. | RAMIS தொகுதியின் பராமரிப்கு நடவடிக்கைகளை திணைக்கள பொறுபிற்கு எடுத்தல், நிலவும் RAMIS தொகுதியின் பராமரிப்பு ஒப்பந்த கால எல்லை முடிவடையும் இறுதி திகதியான 2027 சனவரி மாதம் முடிவடைய முன்னர் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவதானிக்கப்பட்டது. | | |
| (ஊ) | 2014 ஆண்டு முதல் இருவரை RAMIS செயற்திட்டத்திற்கு உள்நாட்டு இறைவரி சேவை உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டுள்ளதுடன் 2024 ஆண்டிற்காக அவ்வாறு 60 உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தியிருந்ததுடன் RAMIS தொகுதியை அமைப்பதற்காக பேணிச் செல்லும் செயற்திட்ட அலுவலகத்தின் கொடுப்பனவு தொடர்பான மாதிரி பரீட்சிப்பின் பிரகாரம் உள்நாட்டு இறைவரி நிரந்தர பதவியணியின் உத்தியோகத்தர்களிற்கு 2024 ஆண்டிற்காக RAMIS செயற்திட்ட பணிகளிற்காக சுமாராக ரூபா 22 மில்லியன் செலுத்தப்பட்டு இருந்தது. மேலும், இந்த செயற்திட்ட பதவியணியினர் உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் கடமைகளில் ஈடுபடுவதற்கிடையே இந்த செயற்திட்டத்தின் பணிகளிற்காக தமது சேவை பங்களிப்பை வழங்குவதனை செய்வதன் மூலம் இது வரை 10 ஆண்டுகளிற்கு கிட்டிய காலமாக நிரந்தர கடமைகளிற்கு தடை ஏற்பட முடியுமென, உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால் செயற்திட்டத்தை தாமதிக்காது பொறுப்பேற்காமை திணைக்கள ஒட்டுமொத்த வினைத்திறனிற்கு பாதகமான தாக்கத்தை ஏற்படுத்த முடியுமென அவதானிக்கப்பட்டது. | RAMIS செயற்திட்டத்தில் ஈடுபட்டுள்ள பதவியணி கடமைப்பணிகளிற்கு இடையே நாளாதுவரையாகி செயற்திட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக மற்றும் RAMIS செயற்திட்டத்தை நடாத்திச் செல்லும் அனைத்து கொடுப்பனவுகளும் முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை இலக்கம் 01/2029 பிரகாரம் மற்றும் நிதி அமைச்சின் உரிய அங்கீகாரத்தை பெற்று நடாத்துவதென. | RAMIS தொகுதியின் பராமரிப்கு நடவடிக்கைகளை திணைக்கள பொறுபிற்கு எடுத்தல், நிலவும் RAMIS தொகுதியின் பராமரிப்பு ஒப்பந்த கால எல்லை முடிவடையும் இறுதி திகதியான 2027 சனவரி மாதம் முடிவடைய முன்னர் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) | RAMIS செயற்திட்டத்தின் கீழ் சிங்கப்பூர் நிறுவனத்தின் மூலம் செயற்படுத்தப்பட்ட அழைப்பு மைய சேவையை (Call Center) உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால் பொறுப்பேற்று ஆண்டிற்கு ரூபா 33,844,000 வெட் இன்றிய தொகையை செலுத்துவதன் கீழ் 2021 ஏப்ரல் 01 திகதி முதல் 2023 மே 31 திகதி வரையான 02 ஆண்டுகளிற்கு அதிக | உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால் நடாத்திச் செல்லும் Call Center பெறுகை மற்றும் சொத்துக்கள் முகாமைத்துவ பிரிவினால் நிர்வகிக்கப்படுவதாக மாத்திரம் அறிவிக்கப்பட்டுள்ளது. | அரசிற்கு குறைந்த கிரயம் ஏற்படுமாறு செயற்திட்டத்தை இயக்குவது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். |

| | | | |
|---|---|---|---|
| | காலத்திற்கு தனியார் நிறுவனமொன்றின் கீழ் நடாத்திச் செல்லப்பட்டதுடன் மீண்டும் 2023 ஜூன் 01 முதல் 2025 மார்ச் 31 திகதி வரை ஓராண்டிற்கு ரூபா 38,350,000 வெட் இன்றிய தொகை குறித்த ஒப்பந்தத்தை நீடிக்க நிதி அமைச்சரின் அங்கீகாரம் கிடைந்திருந்தது. இந்த அழைப்பு நிலையத்தின் சேவையை நடாத்திச் செல்ல திணைக்களத்திற்கு சொந்தமாக பௌதீக மற்றும் மனிதவள இல்லாததன் மீது இந்த ஒப்பந்தத்தை நீடிக்க நேர்ந்துள்ளதுடன் இந்த அழைப்பு நிலைய சேவைக்கு 2023 ஆண்டிற்காக ரூபா 38,683,199 உம் 2024 ஆண்டிற்காக ரூபா 33,939,750 உம் செலுத்தி இருந்ததாக அறிக்கையிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் இந்த சேவையை திணைக்களத்தினால் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்காததால் இந்த மேலதிக செலவை மேற்கொள்ள நேர்ந்ததாக அவதானிக்கப்பட்டது. | | |
| (ஏ) | RAMIS செயற்படுத்தும் கட்டம் II கீழ் தொகுதிப்படுத்த எதிர்பார்த்த பந்தய மற்றும் சூதாட்ட வரி, 2005 இன் 5 இலக்க நிதிச் சட்டத்தின் மூலம் அறிமுகம் செய்து செயற்படுத்திய பங்கு கொடுக்கல் வாங்கல் வரி மற்றும் 2015 அறிமுகம் செய்த குடியல்வு சட்டம் மற்றும் 2017 இல் அறிமுகம் செய்த பணஅனுப்புதல் கட்டணம் ஆகிய வரி வகைகளிற்கு நிர்வாக நடவடிக்கைகள் வருமான நிர்வாக முகாமைத்துவ தகவல்கள் தொகுதி மூலம் இடம் பெறாததுடன், அவற்றை தொகுதிப்படுத்துவதில் அதிக கால தாமதம் காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது. | பந்தய மற்றும் சூதாட்ட வரிக்கு தனியான மொடியுல் ஒன்றை அறிமுகம் செய்வதற்கான கிரயத்தை கவனத்திற் கொள்ளும் போது அது தொகுதிப்படுத்தாது முகாமை செய்வது பொருத்தமானதென. | திணைக்களத்தினால் நிர்வாகிக்கப்படும் அனைத்து வரி வகைகளையும் தொகுதிப்படுத்துவதன் ஊடாக வரி நிர்வாகத்தின் வினைத்திறனை அதிகரிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். |
| (ஐ) | திணைக்கள பொதுவான இடமாற்ற முறையின் மீது திணைக்கள சேவையிற்கு புறம்பான சேவைகளில் உத்தியோகத்தரின் சேவைக் | இந்த உத்தியோகத்தர்கள் முழுநேரமாக RAMIS செயற்திட்ட நடவடிக்கைகளிற்கு ஈடுபடுத்தப்பட்டு இல்லாததுடன் பொதுவான கடமைகளிற்கு | நிலவும் RAMIS தொகுதியை பராமரிக்கும் காலப் பகுதி முடிவடையும் |

| | | |
|---|---|---|
| காலம் 05 ஆண்டுகளை விஞ்சும் அந்தர்ப்பங்களில் இடமாற்றத்திற்கு உட்பட வேண்டிய போதும் திணைக்களத்தின் RAMIS செயற்திட்ட உத்தியோகத்தர்களின் ஆட்சேர்ப்பில் காணப்படும் தாமதம் மற்றும் குறித்த தொழிலின் பற்றாக்குறை மீது RAMIS செயற்திட்டத்திற்கு உதவி செய்ய ஈடுபடுத்தியுள்ள உத்தியோகத்தர்களின் இடமாற்ற செயன்முறையை உரியவாறு செய்ற்படுத்த இயலுமை காணப்படவில்லையென அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் 2025 பெப்ரவரி 28 திகதி திணைக்களத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள இலங்கை தகவல் தொழில்நுட்ப சேவையின் மூன்று உதவி தொழில் பணிப்பாளர் உத்தியோகத்தர்கள் 12 ஆண்டுகளிற்கு அதிகமாகவும் இரண்டு உதவி செயற்திட்ட பணிப்பாளர் உள்ளிட்ட மூன்று செயற்திட்ட உத்தியோகத்தர்கள் 05 ஆண்டுகளிற்கு அதிகமாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டு இருந்தனர். | இடையே மற்றும் ஏனைய RAMIS உத்தியோகத்தரை போன்று கடமை நேரத்திற்கு புறம்பான கால நேரத்தில் RAMIS கடமைகளை மேற்கொள்ளும் உத்தியோகத்தர்களாகும். | திகதியான 2027 சனவரி மாதம் முடிவடைய முன்னர் RAMIS தொகுதியின் பராமரிப்பு நடவடிக்கைகளை திணைக்கள பொறுப்பிற்கு எடுக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும் மற்றும் RAMIS தொகுதியை பராமரிக்க அங்கீகார பாவியணியை ஆட்சேர்ப்பதன் மூலம் அரச அங்கீகார இடமாற்ற செயன்முறைக்கு இணங்குவது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். |

**4.3 வருடாந்த செயலாற்றுகை அறிக்கை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் / கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 4.3.1 | 2020 ஆகஸ்ட் 28 இன் 2/2020 இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் 10.2 பந்தி பிரகாரம் அரச நிதி திணைக்களத்தினால் அரச நிதி திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வழிகாட்டி இலக்கம் 14 இல் குறிப்பிடும் படிவம் பிரகாரம் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை தயாரிக்க வேண்டிய போதும் வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் கணக்காய்விற்கு சமர்ப்பித்த அறிக்கை மேற்குறித்த சுற்றறிக்கையை பின்பற்றி இருக்கவில்லை. | 2024 வருடாந்த செயலாற்றுகை அறிக்கை அரச நிதி சுற்றறிக்கையினால் வெளிட்ட வழிகாட்டி இலக்கம் 14 இல் குறிப்பிடும் படிவம் பிரகாரம் சமர்ப்பிக்கப்படவில்லை எனவும், எதிர்காலத்தில் அவ்வாறு இடம்பெறாதிருக்க தேவைான நடவடிக்கை எடுக்க குறித்த உத்தியோகத்தரை அறிவுருத்தியதாக 2020 ஆகஸ்ட் 28 திகதிய 2/2020 இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் 10.2 பந்தி பிரகாரம் அரச நிதி | வருடாந்த மற்றும் ஏனைய நிதிக்கூற்றக்கள் உரிய வழிகாட்டி படிவம் பிரகாரம் தயாரித்து சமர்ப்பிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வழிகாட்டி இலக்கம் 14 இல் குறிப்பிடும் படிவம் பிரகாரம் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை 2025 ஆண்டிற்காக சரியான படிவம் பிரகாரம் சமர்ப்பிப்பதென. | |
| 4.3.2 | 2020 ஆகஸ்ட் 28 திகதிய 2/2020 இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் 12.1 பந்தி பிரகாரம் கணக்காய்வு செய்த நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கியுள்ள வருடாந்த செயலாற்றுகை அறிக்கை மும்மொழிகளில் தயாரித்து நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்கள் செல்ல முன்னர் சபைப்படுத்த வேண்டியதுடன் 2023 வருடாந்த உள்நாட்டு இறைவரி திணைக்கள வருடாந்த அறிக்கை 07 மாத தாமதத்தின் பின்னர் 2025 சனவரி 07 திகதி பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு இருந்தது. | திணைக்களத்திற்கு அப்பாற்பட்ட பல விடயங்களின் காரணமாக 2023 ஆண்டு வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை சபைப்படுத்துவது எதிர்பார்த்த காலத்தை பிட தாமதித்ததாகவும் எதிர்காலத்தில் அவ்வாறு இடம்பெறாதிருக்க தேவையான நடவடிக்கை எடுக்க குறித்த உத்தியோகத்தரிற்கு அறிவுரை வழங்கியதென. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் உரிய திகதியில் வருடாந்த அறிக்கைகளை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும். |

## 4.4 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் / கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 4.4.1 | திணைக்கள பெறுகைகள் செயற்பாடுகளிற்காக மொத்த மதிப்பீட்டு செலவு மற்றும் 2024 ஆண்டிற்கு அதன் பௌதீக முன்னேற்றத்தை கவனத்திற் கொள்ளும் போது 2024 திசெம்பர் 31 திகதிக்கு பெறுகை நடவடிக்கைகளை நிறைவு செய்ய வேண்டிய போதும் 17 பெறுகைகள் உருப்படிகளிற்காக எதிர்பார்த்த முன்னேற்றத்தை அடைந்து கொண்டிருக்கவில்லை. | 2024 மே 01 ஆரம்பிக்க திட்டமிடப்பட் இலக்கம் 7 பெறுகைகள் பணி ஒப்டோபர் மாதம் ஆரம்பிக்கப்பட்டதாகவும் தொடர் இலக்கம் 9 மற்றும் 10 இற்காக தாமதத் தவறினால் 75 சதவீதம் என பெறுகைகள் திட்டத்தில் குறிப்பிடப்பட்டதாகவும் தொடர் இலக்கம 8 பெறுகைகள் நடவடிக்கையின் முதலாம் மற்றும் இரண்டாம் பகுதி 2024 ஆண்டில் நிறைவு செய்து மூன்றாம் பகுதி 2024 நவம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டதுடன் பொருட்களை கொள்வனவு செய்வதற்கான அங்கீகாரம் 2025 பெப்ரவரி 28 திகதி கிடைத்துள்ளதாகவும் தொடர் இலக்கம 11 கீழ் 2024 ஆண்டினுள் நிறைவு செய்த வேலைகளிற்கு | பெறுகைகள் திட்டத்தில் பிரகாரம் எதிர்பார்த்த முன்னேற்றத்தை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | செலுத்திய பட்டியல்களின் பெறுமதி அதன் முன்னேற்றம் 58 சதவீதம் எனவும் தொடர் இலக்கம 12 கீழ் தேவைபாட்டின் பிரகாரம் கிடைக்கும் கோரிக்கைக்கு ஏற்ப ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாட்டிற்கு இடையே 2024 ஆண்டிற்காக அவ்வாறான கோரிக்கைக்காக செலவிடப்பட்ட தொகையின் மீது அதன் முன்னேற்றம் 52 சதவீதம் ஆகுமென. | |
| 4.4.2 | திணைக்களத்தினால் 2024 ஆண்டில் பெறுகைகள் செயற்பாட்டை ஆரம்பித்து 2024 திசெம்பர் 31 திகதிக்கு பெறுகைகள் செயற்பாடு முடிவடைவதில்லை எனினும் அத்திகதிக்கு போதிய அத்திகதியில் முன்னேற்றத்தை அடைந்து கொள்ளாத 03 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டது. | இந்த 04 பெறுகைகள் செயற்பாடுகளிற்காக பொறியியல் அறிவுரை வெளி நிறுவனத்திடம் இருந்து பெற்றுக் கொள்ள நேர்ந்ததால் அந்த நடவடிக்கைகளில் ஏற்பட்ட தாமதத்தின் மீது 2024 திசெம்பர் 31 திகதிக்கு எதிர்பார்த்த முன்னேற்றத்தை அடைந்து கொள்ள இயலாது போனதாகவும் தற்போது குறித்த ஒப்பந்த காலத்தை நீடித்து பெறுகைகள் நடவடிக்கையை முன் எடுத்து செல்வதென. | பெறுகைகள் திட்டத்தில் பிரகாரம் எதிர்பார்த்த முன்னேற்றத்தை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| 4.4.3 | திணைக்கள பெறுகைகள் முன்னேற்ற அறிக்கை பிரகாரம் 29 பெறுகைகள் உருப்படிக்காக சதவீதமான முன்னேற்றத்தை இனங்கண்டிருக்கவில்லை. மேலும் 246-1-1-0-1409 திணைக்கள செலவின விடயத்திற்குரிய விளம்பரத்திற்காக ரூபா 102,000,000 ஆன மொத்த மதிப்பீட்டுத் தொகையின் ரூபா 84,031,658 ஆன தொகை அதாபது 82 சதவீத நேரடி கொள்வனவின் ஊடாக செலவிடப்பட்டிருந்தது. | சதவீதமான முன்னேற்றத்தை இனங்கண்டிருக்காத 15 உருப்படிகளிற்காக தேவைப்பாட்டின் மீது திருத்தங்கள் மேற்கொண்டதனால் பெறுகைகள் செயற்பாடு நடைபெறவில்லை எனவும், உருப்படி இலக்கம் 51-55 வரை பொறியியலாளர் ஒருவர் இல்லாதமையும் கோரிய நிதிஏற்பாடு போதமையும் மீது நவீனமயமாக்கல் இடம்பெறவில்லை எனவும், உருப்படி இலக்கம் 56 - 80 வரை தகவல் தொழில்நுட்ப நிர்வாக சேவை பிரிவின் மூலம் தேவைப்பாட்டை அறிக்கவில்லை எனவும், உருப்படி இலக்கம் 95 இற்கான பெறுகைகளிற்குரிய பத்திரிகை அறிவித்தல் வெளியிடும் தேவைப்பாட்டின் பிரகாரம் செலவு செய்துள்ளதாகவும், உருப்படி இலக்கம் 113 இற்கு பொறியியல் திணைக்களத்தினால் மதிப்பீடு கிடைக்கும் சந்தர்ப்பமளவில் திணைக்கள சிறியளவிலான பெறுகைகள் குழு அங்கீகாரம் இருக்கவில்லையெனவும், உருப்படி இலக்கம் 121,122 இற்கு மாதாந்த பட்டியல் செலுத்த போதிய | பெறுகைகள் திட்டத்தில் பிரகாரம் எதிர்பார்த்த முன்னேற்றத்தை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நிதிஏற்பாடு ஒதுக்கியுள்ளதுடன் பெறுகைகள் செயற்பாடு நடைபெறவில்லை எனவும். | |
| 4.4.4 | 2024 ஆண்டின் பெறுகைகள் திட்டம் மற்றும் முதலாம் காலாண்டிற்குறிய தகவல்களை பரீட்சிக்கும் போது, உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால் 2024 ஆண்டில் ரூபா 2,024,922,615 பெறுமதியான வேலை, பொருட்கள் மற்றும் சேவை உருப்படிகள் 130 இற்கான பெறுகைகள் திட்டத்தை தயாரித்திருந்த போதும் சரியாக தேவைப்பாட்டை இனங்காணாது பெறுகைகள் திட்டத்தை தயாரித்த காரணத்தால் முதலாம் காலாண்டிற்காக கணக்காய்விற்கு சமர்ப்பித்த பெறுகைகள் முன்னேற்றத்தில், 2024 பெறுகைகள் திட்டத்தில் உள்ளடங்கியிருந்த ரூபா 242,400,000 பெறுமதியான வேலை, பொருட்கள் மற்றும் சேவை உருப்படிகள் 33 இனை அகற்றப்பட்டு இருந்தன. | திணைக்களத்திற்கான பெறுகைகள் திட்டம் பல பிரிவுகளின் கூட்டினால் தயாரிக்கப்படுவதுடன், சேவைகள் மற்றும் பராமரிப்பு தொடர்பான பெறுகைகள் திட்டம் பெறுகைகள் பிரிவினால் மேற்கொள்ளப்படுவதுடன் சேவை உருப்படி 97 இற்காக பெறுகைகள் திட்டம் தயாரித்து சமர்ப்பித்துள்ளதென. | பெறுகைகள் தேவைப்பாட்டை இனங்கண்டு பெறுகை திட்டத்தை சரியாக தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 4.5 சொத்துக்கள் முாகமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் / கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 4.5.1 | ஜாவத்த பிராந்திய அலுவலகம் அமைந்துள்ள கட்டிடத்துடன் திணைக்களத்திற்கு கிடைத்திருந்த பயன்படுத்தப்படாத மிகப் பாரியளவான மின்பிறப்பாகி ஒன்றை அகற்றுவதற்காக 2023 ஜுன் 14 திகதி பொருட் பதிவேட்டிற்கு உட்படுத்தியிருந்ததுடன் அந்த சொத்து நீண்ட காலமாக விளைவற்று காணப்பட்டது. | பதில் வழங்கப்படவில்லை. | சொத்துக்கள் உரியவாறு பொருட் பதிவேட்டில் உட்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் சொத்துக்களை வினைத்திறனாக மற்றும் ஆக்கபூர்வமாக பயன்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அவ்வாறு ஜாவத்த பிராந்திய அலுவலக வளவில் கட்டிடத்துடன் திணைக்களத்திற்கு கிடைத்திருந்த சுமாராக லீற்றர் 10,000 அளவு கொள்ளலவை கொண்ட நீர் தாங்கியொன்று பயன்படுத்த முடியாத விளைவற்ற சொத்தொன்றாக காணப்பட்டது. | | |
| 4.5.2 | திணைக்களம் சமர்ப்பித்த நிறுவனத்தின் பெயரில் பதிவு செய்துள்ள வாகனங்கள் பற்றிய தகவல் பதிவேட்டின் பிரகாரம் 06 வாகனங்கள் தற்போது ஓட்டநிலையில் இருக்கவில்லை. | 52 – 8295 வண்டி திருத்த அல்லது பராதீனம் செய்வது தொடர்பான தீர்மானம் எடுப்பதற்காக பொறியியலாளர் ஒருவருடன் கூடிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ள போதும் இது வரை தீர்மானம் கிடைக்கவில்லை எனவும், JQ – 3981 மற்றும் JQ – 3987 வேன் வண்டியை பராதீனம் செய்வது தொடர்பாக எதிர்காலத்தில் பொருத்தமான நடவடிக்கை எடுக்க முயற்சிப்பதாகவும் CAC – 9946, 301 – 4716 மற்றும் திருத்தப்பட்டு வருவதாகவும் JQ – 8478 - திருத்தத்திற்கான அங்கீகாரத்திற்கு பெறுகைகள் குழுவிற்கு 2025 மே 20 திகதி அனுப்பியுள்ளதென. | சொத்துக்கள் விளைவற்று காணப்படுவதற்கான காரணத்தை இனங்கண்டு அதனை திருத்த அல்லது பராதீனம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| 4.5.3 | குருனாகல இடர் மற்றும் தரவு மீட்பு நியைத்தினுள் யூபீஎஸ் தொகுதியின் யூபீஎஸ் (UPS) இயந்திரமொன்று 2022 ஆண்டில் தீபற்றி சேதமடைந்த பின்னர் சேதமடைந்த யூபீஎஸ் (UPS) இயந்திரத்தை மற்றும் எஞ்சிய UPS இரண்டின் சமாந்திர தொகுதியையும் அகற்றி 2024 ஆண்டளவில் புதிய தொகுதியை அமைந்திருந்த போதும் சேதமடைந்த UPS இந்திர பகுதி மற்றும் UPS இரண்டின் சமாந்திர தொகுதியின் பாகங்களும் இதுவரை பராதீனம் செய்ய அல்லது பயனுள்ள நடவடிக்கைக்கு பொருத்தமான தரப்பினரிற்கு விடுவிக்காது அலுவலக வளவு களஞ்சியத்தில் இருப்பதால் அந்த இயந்திர பாகங்கள் மேலும் கொள்ளவு | நி.பி.104(3) ஆரம்ப விசாரணையை நடாத்தி நி.பி. 104(4) குழு தற்போது நியமிக்கப்பட்டு அது தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அதன் பிரகாரம் அந்த இறுதி அறிக்கை கிடைத்த பின்னர் குழு பரிந்துரை பிரகாரம் தீயினால் சேதமடைந்த UPS தொகுதியை பராதீனம் செய்ய அல்லது பரிந்துரைத்த செயற்பாட்டினை குழு பரிந்துை பிரகாரம் மேற்கொள்வதென. | சொத்துக்கள் விளைவற்று காணப்படுவதற்கான காரணத்தை இனங்கண்டு அதனை திருத்த அல்லது பராதீனம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமானத் தேய்விற்கு உட்பட்டிருந்தது. | | |
| 4.5.4 | கட்டிட நவீனமயமாக்களில் திணைக்களத்திற்கு வழங்கியிருந்த 02 டிரான்ஸ்போமர் இயந்திரங்கள் பிரதான மின்சார தொகுதிக்கு தொடர்பு படுத்தியிருக்காததால் அந்த இயந்திரம் 2010 ஆண்டு முதலே பயன்படுத்தி இருக்காததுடன், தற்போது 15 ஆண்டுகளிற்கு கிட்டிய காலமாக விளைவற்று காணப்பட்டிருந்தது. | திணைக்களத்திற்கு வழங்கியிருந்த 02 டிரான்ஸ்போமர் இயந்திரங்கள் மின்சார தொகுதிக்கு பொருத்துதல் வாகனசாலையின் நிர்மாண நடவடிக்கைகள் முடிவடையும் வரை நிறுத்தி வைத்துள்ளதென. | சொத்துக்கள் விளைவற்று காணப்படுவதற்கான காரணத்தை இனங்கண்டு அதனை திருத்த அல்லது பராதீனம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| 4.5.5 | திணைக்கள CCTV கெமரா தொகுதி அரச பொறியியல் கூட்டுத்தாபன மேற்பார்வையின் கீழ் தனியார் நிறுவனமொன்றினால் நிறைவு செய்து 2010 மே மாதத்தில் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு ஒப்படைத்திருந்ததுடன் அதன் போது ஓராண்டு உத்தரவாக காலம முடிவடைந்திருந்தது. அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தால் அதனை திணைக்களத்திற்கு முறையாக கையளித்ததாக உறுதி செய்ய முடியுமான சான்றுகள் சமர்ப்பிக்கப்படாததுடன், இதுவரை பயன்படுத்தி இருக்கவில்லை CCTV கெமராக்கள் 70 செயற்படு நிலையில் இருக்காததுடன் இதற்காக செலவிடப்பட்ட கிரயம் கோவையின் பிரகாரம் ரூபா 7,985,992 ஆகும். | ரூபா 7,985,992 ஆன கிரயத்தை செய்துள்ள CCTV கெமரா தொகுதிக்குரிய 70 கெமராக்களிற்குரிய ஆவணங்கள் பொறியியல் கூட்டுத்தாபனத்தினால் 2010 ஆண்டில் திணைக்கள முன்னால் பிரதான பாதுகாப்பு உத்தியோகத்தரிற்கு ஒப்படைத்துள்ளதுடன் அந்த ஆவணம் கோவையில் உட்படுத்தி இருப்பதாகவும் CCTV தொகுதிக்குரிய 70 கெமராக்களை செயற்படு நிலைக்கு மாற்றிக் கொள்ள கொள்வனவு செய்த நிறுவனத்திடமிருந்து அழைப்பித்த அறிக்கை கிடைத்த பின்னர் முன்நடவடிக்கை மேற்கொள்ள எதிர்பார்ப்பதென. | திணைக்களத்திற்குரிய சொத்துக்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்த முயற்சி எடுக்க வேண்டியதுடன் சொதுக்களை ஒப்படைத்ததனை உறுதி செய்யும் சான்றுகளை சமர்ப்பிக்க வேண்டும். |
| 4.5.6 | 2022 ஆண்டின் பண்டக கணிப்பீடு மற்றும் 2023 ஆண்டின் பண்டக கணிப்பீட்டு காலத்திற்கிடையே கம்பஹ மாவட்ட உள்நாட்டு இறைவரி பிராந்திய அலுவலகம் அமைந்துள்ள சூழல் மாற்றமடைந்திருந்ததுடன் 2022 ஆண்டின் பொருட்பதிவேட்டிற்கு மற்றும் CIGAS நிகழ்சித் திட்டத்தற்கு உட்படுத்த வேண்டுமென இனங்கண்ட 7 மைக்களை கொண்ட சில தொகுதிகள் மற்றும் 16 கெமராக்களுடன் கூடிய CCTV | இந்த கெமராக்களை பொருத்தும் போது அந்த அந்த கெமராக்களிற்குரிய தொடர் இலக்கம் அல்லது 2022 ஆண்டில் திருத்தியுள்ள சந்தர்ப்பத்தில் அந்த திருத்தத்தை மேற்கொண்டுள்ள கெமராக்களிற்குரிய தொடர் இலக்கம் கெமரா பொருத்திய / திருத்திய நிறுவனத்தின் மூலம் இந்த அலுவலகத்திற்கு ஒப்படைது அல்லது அந்த பொருத்திய உபகரணங்களிற்குரிய தொடர் இலக்கம் அந்த பொருத்துகளை | சொத்துக்களை உரியவாறு பொருட் பதிவேட்டில் உட்படுத்த நடவடிகதை எடுக்க வேண்டியதுடன் அதனை உறுதி செய்ய முடியுமான சான்றுகளை பேணிக் கொள்ள வேண்டும். |

| | |
|---|---|
| தொகுதி தொடர்பாக பண்டக கணிப்பீட்டு அறிக்கை ஊடாக வெளிப்படாத போதும், பின்னர் குறித்த அட்டவணை 2024 ஆகஸ்ட் 30 திகதி பிரதான களஞ்சியத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இவ்வாற பிரதான களஞ்சியத்திற்கு ஒப்படைத்துள்ளதானது, கம்பஹ பிராந்திய அலுவலகத்தில் பொருத்தி இருந்த உபகரணங்கள் என்பதை உறுதி செய்து கொள்ள முடியுமான சான்றுகள் இதுவரை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | நிறைவு செய்த சந்தர்ப்பத்தில் உரியவாறு சரிபார்த்தல் ஒன்றை மேற்கொண்டதற்கான ஆவணங்களும் கிடைக்கவில்லையென யக்கலையில் அமைந்துள் கம்பஹ பிராந்திய அலுவலத்தினால் கலற்றி அகற்றப்பட்ட கெமரா தொகுதி மற்றும் அதற்கான ஏனை பாகங்கள் 2024 ஆகஸ்ட் 29 திகதி பிரதான அலுவலகத்தில் வழங்கல் பிரிவிற்கு ஒப்படைத்துள்ளதென. |

## 4.6 அரச உத்தியோகத்தர் பிணை வைத்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் / கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சிரேஷ்ட பிரஜை வருமான வரி மீள்செலுத்துதல் எனும் பெயரில் திறக்கப்பட்ட புதிய கணக்ககு இலக்கம் 7041576 (TOD/BA/01) மற்றும் உள்நாட்டு இறைவரி ஆணையாளரிற்கு உத்தியோக பூர்வ வங்கிக் கணக்கை செயற்படுத்தும் அதிபாரத்தை ஒப்படைப்பது (TOD/BA/02) தொடர்பாக நி.பி. 880 பிரகாரம் பிணை வைப்பிட உரிய உத்தியோகத்தர் நடவடிக்கை எடுத்திருக்கவிலலை. | சிரேஷ்ட பிரஜை வருமான வரி மீள்செலுத்துதல் எனும் பெயரில் திறக்கப்பட்ட புதிய கணக்ககு இலக்கம் 7041576 மற்றும் உள்நாட்டு இறைவரி ஆணையாளரிற்கு உத்தியோக பூர்வ வங்கிக் கணக்கை செயற்படுத்தும் அதிபாரத்தை ஒப்படைப்பது தொடர்பாக நி.பி. 880 பிரகாரம் பிணை வைப்பிட உரிய உத்தியோகத்தர் நடவடிக்கை எடுத்து வருவதென. | நி.பி. 880 பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோத்தர்களிடம் இருந்து பிணை வைப்பை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4.7 நட்டம் மற்றும் சேதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் / கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 4.7.1 | நிதிப்பிரமானம் 104 பிரகாரம் நட்டம் அல்லது சேதமொன்று இடம்பெற்ற உடனே அதற்கான காரணம் | CAC-9946 வண்டியின் திருத்தங்களை காப்புறுதி உரிமையின் கீழ் கிடைக்கும் தொகையினால் மேற்கொள்ள ரூபா | நிதிப்பிரமானம் பிரகாரம் அறவிட அல்ல பதிவழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும. |

| | | | |
|---|---|---|---|
| | அளவு மற்றும் பொறுப்பானவர்களை தீர்மானித்துக் கொள்ள விசாரணை நடாத்தி நி.பி. 105 பிரகாரம் நட்டத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தரினால் அதற்காக செலுத்த வேண்டிய பண அளவை தீர்மானித்து அத்தொகையை நிரப்பமாறு அவரிற்கு விதித்து அதனை அறிவிட அல்லது நி.பி.109 பிரகாரம் செயற்பட்டு பதிழிக்க ஏனும் மேற்கொள்ளப்படாத ரூபா 5,346,250 மீதியை கடந்த பல ஆண்டுகளாக முன்கொண்டு செல்லப்பட்டு இருந்தது. | 1,400,000 முற்பணத் தொகையை 2025 ஏப்ரல் 24 திகதி குறித்த வண்டிச்சாலைக்கு வழங்கியுள்ளதாகவும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி செயலாளரின் இலக்கம் MF/06/16/02/IRD/2025 மற்றும் 2025 மார்ச் 26 திகதிய கடிதம் மூலம் UPS தீபற்றியது தொடர்பாக ஆரம்ப அறிக்கையின் பிரகாரம் நட்டத்தின் மொத்த பெறுமதி ரூபா 1,000,000 என மதிப்பிட்டுள்ளதுடன், அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 02/2024 பிரகாரம் விசாரணை சபையை நியமிக்கும் போது ரூபா 2,000,000 வரை கணக்கீட்டு உத்தியோகத்தரிற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதென. | |
| 4.7.2 | வாகன விபத்துக்கள் 03 தொடர்பாக காப்புறுதி காப்பின் மூலம் அறவிடப்படாத ரூபா 353,499 பெறுமதி தொடர்பாக நிதிப்பிரமானம் பிரகாரம் நடவடிக்கை எடுத்து குறித்த தரப்பினரிடமிருந்து அறிவிட அல்லது பதிவழிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ரூபா 240,499 பெறுமதியை ஏடுகளிலிருந்து பதிவழிக்க ஆணையாளர் நாயகத்தின் அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன் எஞ்சிய மீதியை பதிவழிக்க நடவடிக்கை எடுப்பதென. | வாகன விபத்துக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| 4.7.3 | 2024 செப்டம்பர் 09 திகதி விபத்திற்குள்ளான இலக்கம் NA-9123 வாகனத்தின் நட்ட சேதத்தை முழுமையாக திருத்தி முடித்திருந்த போதும் காப்புறுதி உரிமையை பெற்றுக் கொள்ள இதுவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | NA-9123 வண்டியின் திருத்தம் முழுமையாக நிறைவு செய்யப்பட்டுள்ள போதும் குறித்த வண்டிச் சாலையினால் இறுதி பட்டியலை சமர்ப்பிக்க தாமதிப்பதால் செலவினை மீள்நிரப்பவில்லையென. | வாகன விபத்துக்கள் தொடர்பாக காப்புறுதி உரிமையை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**4.8 முகாமைத்துவ பலவீனங்கள்**

**4.8.1 அரச வங்கியொன்றின் மூலம் நிகழ்நிலை முறையில் செலுத்திய வரி கொடுப்பனவு RAMIS தொகுதிக்கு தரவேற்றம் செய்யப்படாமை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் / கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2024 ஏப்ரல் 18 ஆம் திகதி நிகழ்நிலை முறையில் மேற்படி வங்கியூடாக செய்யப்பட்ட வரி | 2024 ஆகஸ்ட் 08 ஆம் திகதி பதில் வழங்கியுள்ளதாக மற்றும் அதன் பிரகாரம் 2024 ஏப்ரல் 18 | நிகழ்நிலை முறையின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட வரி |

| | | | |
|---|---|---|---|
| | கொடுப்பனவிற்கு இடையே RAMIS தொகுதி மற்றும் உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் வரி சேகரிக்கும் வங்கிக் கணக்கிற்கு வைப்புச் செய்யப்பட்டிருக்காத வரிதாரர் ஒருவரிற்குரிய பெறுமதி சேர் வரித்தொகையான ரூபா 433,129,012 உள்ளதாக அறிக்கையிடப்பட்டதால் அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மேலதிக பரீட்சிப்பின் போது குறித்த வங்கி கணனி தொகுதியில் ஏற்பட்ட தவறின் காரணமாக 2024 ஏப்ரல் 18 ஆம் திகதி மொத்த கொடுக்கல் வாங்கல்களில் 86 கொடுக்கல் வாங்கல்களிற்குரிய ரூபா 2,012,262,011 தொகை RAMIS தொகுதி மற்றும் உள்நாட்டு இறைவரி திணைக்கள வரி சேகரிக்கும் வங்கிக் கணக்கிற்கு வைப்புச் செய்யப்படவில்லை என வெளிப்படுத்தப்பட்டதுடன் அந்த வரித் தொகை உரிய TIN இலக்கத்தின் கீழ் தரவேற்றமாகி இல்லாததுடன் மேற்படி வங்கி மூலம் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு தினந்தோறும் அனும்பும் வரி கிடைப்பனவு தொடர்பான மென் பிரதியில் போன்றே திணைக்கள தொங்கல் கணக்கிலும் அந்த கொடுப்பனவு பதியப்படவில்லை என மேற்கொள்ளப்பட்ட மேலதிக பரீட்சிப்பில் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட்டது. | ஆம் திகதி கணனித் தொகுதியில் ஏற்பட்ட தவறு காரணமாக உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் வரி சேகரிக்கும் வங்கிக் கணக்கிற்கு வைப்புச் செய்யப்பட்டிருக்காத 86 கொடுக்கல் வாங்கல்களிற்குரிய ரூபா 2,012,262,011 பெறுமதி 2024 ஜுலை 04 திகதி சரியாக கணக்கீடு செய்துள்ளதாக உறுதி செய்யப்பட்டிருந்தது. | கொடுப்பனவை சரியாக அறிக்கையிடல், உறுதி செய்வது தொடர்பாக சக்திவாய்ந்த உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்று இஸ்தாபிக்கப்பட வேண்டும். |
